www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 26–ஆக.01,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 267

## தந்திரமும் தலையிடியும்

### ஐரோப்பாவில் புலிகள்





## கலைஞருக்கு தொடர்பா?

## நடிகையைக் கடத்திய பிரபல தலைவர்

## கல்கத்தா அழகியும் கவியரசுவும்

www.padippakam.com

# முரசம்

## வாஜபேயி வருகை

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

சார்க் மாநாட்டுக்காக
பிரதமர் வாஜ்பேயி
கொழும்பு வருகிறார்!

அமெரிக்க வல்லரசுக்கு
பணியாத இரும்பு மனிதர்
என்ற பெருமைக்கு-
சதாம் உசேன் போல
வாஜ்பேயியும் தகுதியானவர்!

இந்தியாவின் தற்போதைய
அரசியல் சூழ்நிலையில்
பிரதமர் வாஜபேயின்
இலங்கை விஜயம்
திருப்பம் எதனையும்
ஏற்படுத்தப் போவதில்லை!

அப்படி எதிர்பார்த்து
நம்மை நாமே
ஏமாற்றிக் கொள்ளவும்
தேவை இல்லை!

இலங்கை
இனப்பிரச்சனை விவகாரத்தில்
நாம் எதிர்பார்க்கக்கூடிய
கருத்து எதனையும்
தற்போதைக்கு இந்தியா
உதிர்க்கப் போவதில்லை!

பாரதிய ஜனதா கட்சி
இலங்கைப் பிரச்சனையில்
கொண்டுள்ள உண்மையான
நிலைப்பாடு என்ன?

இன்றைய இந்திய அரசு
கொண்டுள்ள
கொள்கை என்ன?

இவை போன்றவற்றுக்கு
வாஜ்பேயி வருகையில்
உண்மையான விடை
கிட்டப் போவதில்லை!

நாடுகளுக்கிடையே
உள்ள இராஜதந்திரம்
பல பிரச்சனைகளில்
உண்மைகளை
புட்டுவைக்க அனுமதிப்பதில்லை!

இலங்கை அரசு
அமெரிக்காவுக்குத் தலையையும்
இந்தியாவுக்கு வாலையும்
காட்டி வருகிறது!

இலங்கையில் அமெரிக்கா
தளம் கண்டு வருவது
இந்திய அரசு
அறியாத விடயமல்ல!

ஆனாலும் இலங்கை அரசை
நேரடியாகப் பகைக்கும்
வெளியுறவுக் கொள்கையை
இந்திய-அரசு
உடன் நாடப்போவதில்லை!

சீனா, பாகிஸ்தான்
போன்ற நாடுகளுடன்
விரோதம் விரிவாகியிருப்பதால்,
இலங்கையையும்
எதிரியாக்கிக் கொள்வதற்கு
இந்திய இராஜதந்திரம்
உடன் முன்வராது!

எனினும், இலங்கையில்
என்ன நடக்கிறது?
எச் சக்திகள் தலையிடுகின்றன?
என்ற விடயங்களில்
தன் கண்களையும்
காதுகளையும் இந்தியா
திறந்துவைத்தபடி இருக்கிறது!

வாயை மூடியிருப்பதாலும்,
அளந்து பேசுவதாலும்
இலங்கை அரசை
முழுக்க முழுக்க நம்புகிறது
இந்திய அரசு
என்பது பொருளல்ல!

எனினும், இந்திய அரசு
தன் நலனுக்கு அப்பால்
இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள் நலனை
முதன்மைப்படுத்தும் என
எதிர்பார்க்கக் கூடாது!

எல்லாமே இந்தியா
என்று நம்பிக்கொண்டு
இருப்பதும் சரியல்ல!

"அழுதும் பிள்ளையை
அவள்தான் பெறவேண்டும்!"

இனப்பிரச்சனைக்கு
காத்திரமான தீர்வு காண்பது
இங்குள்ள தமிழ் பேசும் மக்களின்
தளராத போராட்டம்
சார்ந்த ஒன்றேயாகும்!

இந்தியா போன்ற நாடுகள்
இலங்கை அரசின்
இராணுவத்தீர்வு முயற்சிக்கு
தோள்கொடுக்காமல்
இருந்தால் அதுவே போதும்!

பாரதிய ஜனதா அரசு
தோள்கொடுக்காது
என்பது மட்டும் உறுதி!

இந்தியா இங்குள்ள
தமிழ் பேசும் மக்களின்
உற்ற நண்பன்!

நண்பன் என்பதற்காக
தன் நலனைத் தியாகம்
செய்யுமாறு நாம்
கேட்கவும் முடியாது!

அதுபோல, இந்தியாவும்
தன் நலனுக்காக
நம் நலனை
கீழ்படுத்த முனையவும் கூடாது!

அதுவே உண்மையான நட்புறவு!
அத்தகைய நட்புறவையே
பாரதிய ஜனதா அரசிடம்
நாம் நாடி நிற்கிறோம்!

**மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை**

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## இறையருள் கைகூடும் பக்தி வழிபாடு

நீ ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அது ஒரு பொருட்டே அல்ல. நம்மிடையே ஜாதியும் பெயரும், பதவியும் கணக்கில் சேரா. நீ வாழ்க்கையில் எந்த ஆசிரமத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். இறைவனை வழிபடுவதற்கு அத்தியாவசியமான ஒரே விஷயமாவது 'பக்தி' மட்டுமேதான்.

யாகம், தவம், தானம் ஆகியவற்றின் புண்ணிய பலத்தினாலோ, வேத அத்தியாயனம் செய்வதனாலோ, சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மாக்களைச் செய்வதனாலோ ஒருவன் இறைவனைக் காண விரும்பி, அவனுக்கு இறைவனிடம் 'பக்தி' மட்டும் இல்லாதிருந்தால் இறைவனது திவ்விய திருவருள் வாய்ப்பது சாத்தியமேயில்லை.

ஆகவே, பக்தி சாதனங்களைப் பற்றி சில சுருக்கமான வழிவகைகளைக் குறிப்பிடுகிறேன். புண்ணியாத்மாக்களுடைய சங்கத்தை, தர்மவான்களுடைய கூட்டுறவை, நாடுதல் நன்று.

கண்ணிருந்தும் இரவு நேரத்தில் பொருள்களைத் தெளிவாகக் காண்பது முடியாத செயலல்லவா? ஆனால் விளக்கு ஒன்று கிடைக்குமானால் தங்கள் வழியை, அறியும் பொருளை நன்கு காணமுடிகின்றதல்லவா? அவ்விதமே இறைவனிடம் உண்மை 'பக்தி' கொண்டுள்ளவர்களிடம் ஆத்மாவானது சுயம் பிரகாசமாகின்றது. இறையருள் கிடைக்கின்றது.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.



## அண்ணல் நபியின் ஒரு போதனை

பணக்காரனையும் ஏழையையும் இவ்வுலகில் உள்ள அனைத்து வஸ்துக்களையும் படைத்து போஷிப்பவன் அல்லாஹ் ஒருவனே.

பணம் படைத்தவன் 'அவற்றை இவ்வுலகில் எவ்வாறு சம்பாதித்து செலவளித்தான்' என்பது நாளை மறுமையில் அவனிடம் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்றாகும்.

தனவந்தர்கள் வறியவர்களுக்கு வாரி வழங்க வேண்டும். அதனைத்தான் அல்லாஹ் அவன் சிருஷ்டியிடம் இருந்து எதிர்பார்க்கிறான்.

ஏழைகளே! நீங்கள் ஒருவேளை உணவுக்காகக் கஷ்டப்படுகிறீர்களா?

அண்ணல் நபியின் ஒரு போதனை உங்களுக்குப் போதுமானது.

காலையில் பசியுடன் தனது கூட்டைவிட்டுப் பறந்து, மாலையில் வயிறு நிரம்ப வசிப்பிடம் நோக்கி வரும் பறவைகளுக்கு உணவளிப்பது போல் அல்லாஹ் உங்களுக்கும் உணவளிப்பான்.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.264

பரிசுக்குரிய கவிதை



### சுமை

**செய் நன்றி கொல் மாந்தர் சுமையை
நாளெல்லாம் செத்துச் செத்து
இழுத்தென்ன?
செஞ்சோற்றுக் கடனுக்கு வாலாட்டுகின்ற
சொந்தக் குலத்து ஜீவன்
சற்றிழைப்பாற முதுகில்
இடங்கொடுத்தாலென்ன?**

எம். அனஸ்- புத்தளம்.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### நாயும் சுமையே!

பாரச்சுமை நிறைந்த
பெரும் வண்டிதானிழுத்தே...;
ஆறுதலைத் தேடி
அசை போட்டுப் படுத்திருக்க...;
ஆர் விடுவார்...?
நாயாரும்...
ஒரு சுமையாய் ஆனாரோ?

வீ. கவிதாரூபன்-தம்பிலுவில்-01.

### 6–1= 5

ஒன்று குறைவு
என்பதனால்
ஒற்றுமையாக
இருக்கிறார்கள்!

களுத்துறை-அன்வா

### நன்று

நன்றி மறப்பது
நன்றன்று!
நன்றி சுமப்பது
நன்றன்றோ...?

ஆர். இரமேஷ்குமாரி-நானுஓயா.

### பயனளிக்கு(மோ)மா?

ஒழிந்து போன
ஒற்றுமைக்கு
ஒளியேற்ற-இது
எத்தனையாவது
ஒத்திகையோ!

மும்தாஜ். ஏ. முத்தலிப்-அனுராதபுரம்.

### மிருகநேயம்

நேயத்தில் மேலோங்கும்
ஐந்தறிவு
மனிதர்க்கும் வஞ்சமில்லா
தோழரிவர்....!
மனித ஆறறிவின் நிலையோ
கவலைக்கிடம்!

ம. திருவரசுராசா-வவுனியா.

### கதி

எருமை முதுகின் மேல்
நாயும் படுக்கலாம்!
எருமை போல் நாம் வாழின்
இக்கதி நம் கதி!

கவிஞன் 'திக்கவயல்'-மன்னார்.

### அகதி! அவதி!

எசமான் அகதி-
நாங்கள் அவதி!

கயல்வண்ணன்- வவுனியா.

## கவிதைப் போட்டி இல.267



கவனிப்புங்கள்!

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 01.08.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.267, தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



## நல்ல உபதேசம்

காதினல பூ கந்தசாமியின் 'நவீன உபதேசம்' அசத்தல். இன்று சரித்திரங்களே திரிபு பெறும்போது அசோகச் சக்கரவர்த்தியின் சரித்திரமும் அதிசயமானதல்ல! பலே ஜோர்!

சரியான உயிர்நாடியை இப்போதனையால் தொட்டுள்ளீர்கள். 'அன்பே தெய்வம்', 'அன்பே ஜோதி', 'அன்புதான் உலக மகா சக்தி' என்ற போதனையை 'இம்சையே தெய்வம்', 'இம்சையே ஜோதி', 'இம்சையே உலக மகா சக்தி'யென்று முடித்திருந்தால் செமப் பொருத்தமாக இருந்திருக்கும்.

கமல் விக்ரம், நீர்கொழும்பு.

இனிய முரசே!

உன்னில் அன்பு கொண்டிருக்கும் இரசிகர்களில் நானும் ஒருவன். ஆனால் நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு மடல் வரைகிறேன். கவியரசு கண்ணதாசனின் சுயசரிதை மிகவும் அற்புதம்.

ரா. உதயகுமார், சவுதம், தேமோதரை.

என் ப்ரியமான முரசுக்கு!

என் பல கோடி வாழ்த்துக்கள். புவனா எழுதும் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' என் கண்களையும் நனைத்து விடுகின்றது. மற்றும் நாரதரின் 'கிரிக்கெட் அலசல்' மிகவும் நன்று.

ப்ரியா, லெபனான்.

முரசே!

செம்மணியில் மனிதப் புதைகுழிகள் தொடர்பான இராஜதந்திரியின் அலசல் பிரமாதம். இதுவே சூரியக்கந்தையாக இருந்தால் மறு நொடியே தோண்டித் துருவி இருப்பார்கள்.

எஸ். விஸ்வா, கொழும்பு-06.

## திட்டும் குட்டும்

'முள் நிலவு'ம், 'மேற்கே ஒரு குற்ற'மும் போட்டி போடுகின்றன. 'இடி அமீன்', 'அன்னபூரணி' என்று விறுவிறு தொடர்கள் திக்குமுக்காடச் செய்கின்றன. அனைத்தையும் ஒரே தருணத்தில் தந்து, முரசை விரித்தால் கீழே வைக்க முடியாமல் செய்கிறீர்கள். இதனால் "வீட்டில் வேலை செய்வது இல்லை" என்று திட்டும் செல்லக் குட்டும் வாங்க வேண்டியுள்ளது.

செல்வி இ. பூர்ணிமா, ஹட்டன்.

## பொதுப் பணமும் சிக்கனமும்

'மனித உரிமை' என்ற பெயரில் வெளிநாட்டு பணத்தில் சொகுசு வாழ்க்கை நடத்துவோரை 'நக்கீரன்' அடையாளம் காட்டியிருந்தார். அவர்கள் தமது சொந்தப் பணத்தை செலவிட வேண்டும் என நாம் கூறவில்லை. பொதுப்பணத்தை சிக்கனமாகவென்றாலும் செலவு செய்யலாமே? அதுமட்டுமன்றி தம் சொந்த பணம்போல தம்பட்டம் அடிப்பதுதான் வேடிக்கை.

ஆ. புனிதவதி, வவுனியா.

## நிர்வாண உண்மைகள்

முத்தான முரசே! ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு'ம், கவியரசுவின் சுயசரிதையும் அருமை. தமிழக அரசியலின் போலித்தனத்தைப் புட்டுவைக்கிறார். தன் கதையை இத்தனை நிர்வாணமாகக் கூறுவதற்கு கவியரசரால் மட்டும்தான் முடியும். துணிச்சலான சுயவிமர்சனம்.

ஆர். ஹக்கீம், கந்தளாய்.

## தூற்றுவார் தூற்றட்டும்!

போற்றுவார் போற்றுகிறார்கள். பொறாமைக்காரர்கள் சிலர் மட்டும் புழுதிவாரித் தூற்றுகிறார்கள். 'முரசு' எந்தளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதற்கு தூற்றுதலும், பொறாமைகளும் தக்க உதாரணங்களே. சக பத்திரிகைகளை குறை சொல்வதைவிட தாம் நிறைவைக் காட்டுவதில் இவர்கள் கவனம் செலுத்தினால் இவர்களது பத்திரிகையும் விற்பனையாகுமன்றோ?

கி. கமலநாதன், கனடா.

'புத்த தர்மம், யுத்த தர்மம்' முரசம் வெகு சிறப்பாக இருந்தது. காதிலை பூ கந்தசாமியார் தந்த அசோகச் சக்கரவர்த்தி நாடகமும் அதேபோல சிறப்பு. "போர் வேண்டாம்" என்று அன்று போதித்த பௌத்த குரு எங்கே... இன்று..?

சி. தர்மரத்தினம், திருமலை.



## விளம்பரம் தேடுகிறார்கள்

தவறான சக்திகளுக்கு சமூகத்தில் விளம்பரம் தேடிக்கொடுப்பதும் பொறுப்பற்ற செயல்தான். அவ்வாறு விளம்பரம் தேடிக் கொடுப்பது பின்னர் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போலாகி விடும். 'முரசு' அவ்வாறான ஊக்குவிப்பைச் செய்யாமல் தவிர்த்து வருதல் பாராட்டுக்குரியதே. இன்றைய நெருக்கடி நிலையில் வடக்கு-கிழக்குக்கு வெளியே சில சக்திகள் இனத்தின் பெயரால் தங்களை வளர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

பி. ரீற்றா அலோசியஸ், மோதர.

## தூக்கத்தில் இடி

'மோகம் முப்பதுநாள், ஆசை அறுபதுநாள்' என்று சொல்வதுண்டு தானே? 'முரசு'மீது எங்கள் ஆசை மட்டும் உயர்ந்து கொண்டு போகும் மர்மம் என்ன? 'மேற்கே ஒரு குற்றம்' நல்ல தெரிவு. அருமையான தொடர். சுஜாதாவின் சூப்பர் வேகக் கதை. இடி அமீன் தான் தூக்கத்திலும் மிரட்டுகிறான்.

திருமதி ம. ஜானகி, பம்பலப்பிட்டி.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

முரசே!

முரசம் விளக்கிய 'புத்த தர்மம், யுத்த தர்மம்' மிகவும் நன்றாக இருந்தது. இதனை விளக்கிய ஆசிரியர் அவர்கட்கு சபாஷ்! மற்றும் 'முள் நிலவு' தேயாமல் வளர என் வாழ்த்துக்கள்.

க. சுதர்சன், செங்கலடி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# நிட்டம்புவ தாக்குதல் நடத்தியது யார்?

## இரண்டில் ஒரு குண்டு பொலிசாருக்கு!

கம்பஹா மாவட்டம் நிட்டம்புவவில் தனியார் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் பாரிய குண்டுகள் இரண்டு வெடித்தன. 19.07.98 அன்று இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இக் குண்டுவெடிப்பால் பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளன. தனியார் தொலைபேசி நிறுவனங்கள் இப்பாரிய குண்டு வெடிப்பால் அச்சம் கொண்டுள்ளன.

இக்குண்டு வெடிப்புக்கு பாதாள உலகக் கோஷ்டி ஒன்று காரணமாக இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகம் தெரிவித்தனர். ஆனால் பாரிய குண்டுவெடிப்பை நடத்துவது மூலம் பாதாள உலகக் கோஷ்டிக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. தவிர பாதாள உலகக் கோஷ்டி சம்பந்தம் இருந்தால் உடன் வளைத்துப் பிடிப்பதும் கடினமான காரியமல்ல.

தனியார் தொலைபேசி நிறுவனங்கள் அச்சமடையக்கூடாது, இங்கு தம் முதலீடுகளை விரிவாக்கத் தயக்கம் கொள்ளக்கூடாது என்பதற்காகவே மேற்கண்ட குண்டுவெடிப்புக்கு புலிகள் தொடர்பு இல்லை என காண்பிக்கப்படுவதாக சந்தேகங்களும் எழுந்துள்ளன.

ஏற்கனவே கம்பஹா மாவட்டத்தில் பல குண்டுவெடிப்புக்கள் நடந்துள்ளன. கம்பஹா மாவட்டம் ஜனாதிபதி சந்திரிக்காவின் சொந்த மாவட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிட்டம்புவவுக்குள் புலிகள் ஊடுருவுதல் கஷ்டமல்ல. நிட்டம்புவ கண்டி ரோட்டில் இருக்கிறது. அங்கிருந்து கண்டிக்கும் செல்லலாம். நீர்கொழும்புக்கும் செல்லலாம். நீர்கொழும்பிலும் சமீபத்தில் குண்டுகள் வெடித்ததும், குண்டு புதைத்து வைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### சார்க் மாநாடு

நிட்டம்புவ குண்டு வெடிப்பு பாரிய சேதங்களை ஏற்படுத்தியபோதும் அரசாங்கம் அதனை பெரிதுபடுத்தாமல் விட்டுள்ளது.

விரைவில் சார்க் மாநாடு கொழும்பில் நடைபெற உள்ளது. இந்நிலையில் பாரிய குண்டு வெடிப்புக்கள் இங்கு நடப்பதாக அறிந்தால் சார்க் நாடுகளின் தலைவர்கள் சிலர் வருகைதரத் தயங்கக்கூடும் எனக் கருதியே பெரிதுபடுத்தவில்லை என்று கருதப்படுகிறது.

பாதாள உலகக் கோஷ்டி மீது சந்தேகம் தெரிவிக்கப்படுவதற்கு அதுவும் ஒரு காரணம் என்றும் கருதப்படுகிறது.

மின்மாற்றித் தகர்ப்புகள், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத் தாக்குதல்கள் தொடர்பாக புலிகள் தங்கள் சம்பந்தத்தை மறைமுகமாக தெரிவித்தே வருகின்றனர்.

### இரு குண்டுகள்

நிட்டம்புவ குண்டு வெடிப்பு இதுவரை நடைபெற்ற தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையக் குண்டு வெடிப்பில் இருந்து சற்று வித்தியாசமானது.

முதல் குண்டு தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்கும், இரண்டாவது குண்டு அங்கு விரைந்துவரும் பொலிசாரையும் குறிவைத்து வைக்கப்பட்டுள்ளன.

குண்டுவெடித்த சத்தம் கேட்டதும் பொலிசார் எப்படியும் அங்கு வருவர். சற்று நேரம் கழித்து வெடித்தால் பொலிசார் பலரும் பலியாவர் எனக் கணித்து வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட முறை, தொழில் நுட்பம் போன்றவை தாக்குதலின் சூத்திரதாரிகள் புலிகளே என்பதைத் தெளிவாக்கியுள்ளன.

# லோரன்ஸ் திலகர் வன்னியில்!

## சர்வதேச செயற்பாடுகளில் மாற்றம்!

விடுதலைப் புலிகளின் பாரிஸ் பிரதிநிதி லோரன்ஸ் திலகர் வன்னியில் தங்கியுள்ளார்.

புலிகளுக்குச் சொந்தமான கப்பலில் இவர் பாரிசிலிருந்து முன்னர் வன்னி வந்து சென்றதாக 'முரசு' செய்தி வெளியிட்டது ஞாபகம் இருக்கலாம்.

தற்போது மீண்டும் வன்னி திரும்பி அங்கேயே தங்கி நிற்பதாகத் தெரிகிறது. மறுபடி பாரிசுக்கு திலகர் செல்லமாட்டார் என்று நம்பப்படுகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் திலகரை தன்னுடனேயே இருக்குமாறு கூறிவிட்டதாகவும், ஃபிரான்ஸ் பிரதிநிதியாக வேறு ஒருவரை நியமித்துவிட்டதாகவும் நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

லோரன்ஸ் திலகர் புலிகளின் சர்வதேசப் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டபோதும், புலிகளின் சர்வதேசக் கிளைகளை போதிய கட்டுக்கோப்புடன் வைத்திருக்க தவறிவிட்டதே அவரை சர்வதேசப் பிரதிநிதிப் பொறுப்பில் இருந்து திரும்ப அழைத்துக் கொள்ளக் காரணம் என்று தெரியவருகிறது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றில் லோரன்ஸ் திலகர் காணப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

திரு. லோரன்ஸ் திலகர் நீண்டகாலம் புலிகளின் ஃபிரான்ஸ் கிளைப்பொறுப்பாளராகவும், சர்வதேச பிரதிநிதியாகவும் செயற்பட்டவர். திம்பு பேச்சுவார்த்தையிலும் கலந்து கொண்டவர்.

புலிகளின் தற்போதைய வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் முக்கியமானவர்கள் தம்மை பெரியளவில் இனம் காட்டிக் கொள்ளாமலேயே செயற்படத் தொடங்கியுள்ளனர்.

திலகர் மிகப் பிரபலமாகியதால் வெளிநாடுகளில் அவரது செயற்பாடுகள் விரைவாக அடையாளம் காணப்படும் என்பதும், அவர் திருப்பி அழைக்கப்பட்டதற்குரிய காரணங்களில் ஒன்று எனத் தெரிகிறது.

# வெலிக்கடைப் படுகொலைகள்

## 15 ஆண்டுகள் பூர்த்தி

ஜூலை இனப்படுகொலை மற்றும் வெலிக்கடை சிறைப் படுகொலைகள் நடைபெற்று 15 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

1983 ஜூலை 25-27ம் திகதிகளில் வெலிக்கடையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஐ.தே.கட்சி அரசும், அரசின் பிரசாரச் சாதனங்களுமே இனவெறியைத் தூபமிட்டு வளர்த்து இனக்கலவரத்தைத் தூண்டியிருந்தன.

1983 ஜூலை கலவர நாட்களையும் வெலிக்கடை சிறைப்படுகொலை நாட்களையும் 'கறுப்பு ஜூலை', 'இரத்த ஜூலை' என்ற பெயர்களில் தமிழ் இயக்கங்கள்-அதன்பின்னர்- அனுஷ்டித்து வருகின்றன.

இம்முறையும் ஈ.பி.டி.பி.,ரெலோ உட்பட தமிழ்க் கட்சிகள் ஜூலை கலவரநினைவுதினத்தையும், வெலிக்கடை படுகொலையையும் நினைவு கூர்ந்து பிரசுரங்கள் வெளியிட்டுள்ளன. ரெலோ தமிழீழ தேசிய வீரர் தினம் அனுஷ்டிக்கிறது.

ஜூலை கலவர நாட்களை முன்னிட்டு கொழும்பில் கடந்த ஆண்டுகள் சிலவற்றில் குண்டுகள் வெடித்திருந்தன. தெகிவளை ரயில் குண்டுவெடிப்பும் அதில் ஒன்றாகும்.

இம்முறை ஜூலைக் கலவர நினைவுநாளில் சார்க் மாநாடு கொழும்பில் நடைபெற உள்ளது. பாதுகாப்புக்களும் இரட்டிப்பாகியுள்ளன.

# எதிர்க்கட்சிகள் சோர்வு!

## சாதகமாக்குமா அரசு?

மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைக்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை கூறி வருகிறார்.

மாகாணசபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்படலாம் என்று கருதி எதிர்க் கட்சிகளும் இம்முறை சுறுசுறுப்பைக் காண்பிக்கவில்லை.

எதிரணிகள் தேர்தல் பிரசாரத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கக்கூடியதாக, தேர்தல் நடைபெறாது என்பது போன்று நம்பவைத்துவிட்டு அரசு தேர்தலை நடத்தி முடிக்கவும் கூடும், என்று சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

எதிரணியை வெற்றி கொள்ளக்கூடிய தருணத்திற்காகவே தேர்தல்களை ஒத்தி வைக்க அரசு விரும்புகிறது.

எனவே, தேர்தல் ஒத்திவைக்கப்படும் எனக்கருதி எதிரணிகள் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிடத் தவறினால், அதனை தனக்குச் சாதகமாக எடுத்துக்கொள்ள அரசு பின்நிற்காது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆயினும் இன்றைய நிலையில் எப்படியாவது மாகாணசபைத் தேர்தல்களை ஒத்தி வைக்கும்படிதான் பெரும்பாலான ஆளும் கட்சியினர் மேலிடத்தைக் கோரிவருகின்றனராம்.

# சார்க் மாநாடு கொழும்பில்!

## தமிழ் எம்.பிகள் செல்வார்களா?

செம்மணி புதைகுழி விவகாரத்தில் தமிழ் பா. உக்களின் கருத்துக்கள் அரசின் செவிகளில் ஏறவில்லை. வடக்கில் நிவாரண வெட்டை மேற்கொள்ள வேண்டாமென்று தமிழ் பா.உக்கள் உட்பட தமிழ்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையும் அரசால் ஏற்கப்படவில்லை.

அரசின் நிவாரண வெட்டால் வடக்கில் பல்லாயிரம் மக்கள் மிக மோசமான பட்டினி நிலையை எதிர்நோக்கி உள்ளனர். நிவாரண வெட்டு கிழக்குக்கும் பரவலாக உள்ளது.

போரை நிறுத்தாமல் நிவாரணத்தை குறைப்பதும், வெட்டுவதும் மனிதாபிமானம் அற்ற நடவடிக்கை என்று வடக்கில் உள்ள அரச அதிபர்களே கூறியுமுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தமிழ் பா.உக்களுக்கும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் இவ்வழைப்பை ஏற்று மாநாட்டுக்கு தமிழ் பா.உக்கள் செல்வார்களா? அன்றில் புறக்கணிப்பார்களா? என்பது தெரியவில்லை.

# இலங்கை டாக்டருக்கு பாராட்டு – தேவானந்தா நாடு திரும்புகிறார்

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தற்போது வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுவருகிறார். கண்,காது ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்புக்கே சிகிச்சை பெறச் சென்றிருந்தார். தற்போது காதுக்கான சிகிச்சை முடிந்துவிட்டது. கண் ஒன்றுக்கான சிகிச்சை மட்டுமே பாக்கியுள்ளது.

வலதுகண் நரம்பு ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது. பலமான ஆயுதத்தால் தாக்கப்பட்டதால் நரம்பு சிதைவடைந்துள்ளது. அந்த நரம்பை சீராக்க சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருக்கலாம் என்று டாக்டர்கள் கூறியுள்ளனராம்.

தேவானந்தாவின் தலையில் ஏற்பட்ட பாரிய காயத்துக்காக கொழும்பு பொதுமருத்துவமனையில் வைத்து தலையில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையை வெளிநாட்டு டாக்டர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனராம். தலையில் இனிமேல் வேறெந்த சிகிச்சைக்கும் தேவையே இல்லை எனக்கூறியுள்ளனர். டாக்டர் சுனில் பேரேராவே தலையில் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சில வாரங்களில் தேவானந்தா எம்.பி. கொழும்பு திரும்புவார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவமனையில் இருந்து தொலைபேசி ஊடாக இங்குள்ள தனது கட்சியினருடன் தேவானந்தா தினமும் தொடர்பு கொண்டு பேசிவருகிறார். தற்போது தானாகவே எழுந்து நடமாடுமளவுக்கு அவரது தேகநிலை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

# "சிங்கள மக்களுக்கு அநீதி!"

## ஆணைக்குழு அறிக்கை!

"இந்த நாட்டில் இன-மொழி அடிப்படையில் பிரதேசங்களைப் பிரிக்க முயற்சிப்பதே இந்நாட்டை இன்று எதிர்நோக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதனால் இந்நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளையும். மாவட்ட ரீதியில் நிர்வாக அலகுகள் அமையவேண்டுமே தவிர, வேறு (மாகாண சபை போன்ற) முறை எதையும் அனுமதிக்க முடியாது!"

இவ்வாறு கடந்த சனிக்கிழமை, இந்நாட்டின் பிரதானமான மூன்று பௌத்த மகாசங்கப் பீடாதிபதிகளிடம் கையளிக்கப்பட்ட சிங்கள ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள-பௌத்த மக்களுக்கு அந்நியராட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை அநீதி விளைவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு உரிய உரிமைகளும் வழங்கப்படவில்லை. அவற்றுக்கான நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக 'சிங்கள ஆணைக்குழு' அமைக்கப்பட்டதாம். கடந்த இரு வருடங்களுக்கு மேலாக தனது விசாரணைகளை நடாத்திய இவ்வாணைக்குழு தனது இடைக்கால அறிக்கையினை சில காலத்துக்கு முன்னர் வெளியிட்டபோது பல தரப்பட்ட வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன.

இறுதி அறிக்கையில், "கண்டி உடன்படிக்கையின் அடிப்படையில் இந்நாட்டில் பௌத்த மதம் பேணிப்பாதுகாக்கப்படுவதுடன் பரம்பரை பரம்பரையாக நடைமுறையிலிருந்து வந்த நிர்வாக முறையினை மாற்றக்கூடாது. மாகாண சபை நிர்வாகமுறை ஒழிக்கப்படுவதுடன் பதின்மூன்றாவது திருத்தம் அகற்றப்பட வேண்டும்!" என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அஸ்கிரிய மகாநாயக்கர் பலிப்பனே சிறி சந்திரானந்த தேரர் உரையாற்றுகையில்: "இன்று மலையகத் தோட்டங்களில் சிங்களவர்களுக்கு எதுவித தொழில் வாய்ப்பும் கிட்டுவதில்லை. இங்கெல்லாம் இந்தியத் தொழிலாளர்கள் குடிகொண்டிருப்பதால் சிங்களவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மாறிமாறிப் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் அமைச்சர் எஸ். தொண்டமானின் தயவிலேயே ஆட்சிபீடமேற முடிகிறது. தனது வாக்கு வங்கியை ஆதாரமாக வைத்துக் கொண்டிருப்பதனால் எமது அரசியல்வாதிகள் அவரைத் தெய்வமாக மதித்து வணங்குகின்றனர்!" என்று கூறினார்.

# தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது!

## தடுப்புக் காவலில் வைத்து விசாரணை!

## தற்கொலை அங்கிகளுடன் தொடர்பா?

வீரகேசரி செய்தியாளர் ஸ்ரீ கஜன் சம்பத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். கொழும்பு ஜம்பட்டா வீதியில் கடை ஒன்றில், கரும்புலித் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் அங்கிகள் கண்டெடுக்கப்பட்டன. அவ்விவகாரம் தொடர்பாகவே ஸ்ரீ கஜன் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ கஜனின் நெருங்கிய உறவினர்களான இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக கொழும்பில் தொண்டர் ஆசிரியைகளாக இருந்துள்ளனர். இவர்கள் கைதான பின்னரே ஸ்ரீ கஜன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்கள் ஸ்ரீ கஜனுக்கு சிறிய தாய் முறையானவர்களாம்.

ஸ்ரீ கஜனுக்கும் தற்கொலை அங்கி விவகாரத்திற்கும் இடையே தொடர்பு இருப்பதாக இதுவரை நிரூபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.எனினும் ஸ்ரீ கஜனை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடந்து வருகிறது.

கைதான பெண்களின் நாட்குறிப்பில் வீரகேசரி வவுனியா நிருபர் மாணிக்கவாசகரின் பெயர்-முகவரி இருந்தது என்பதாலேயே அவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டாராம். பெயர் முகவரி இருந்தது என்பதால் மட்டும் ஒரு பத்திரிகையாளரை கொழும்புவரை விசாரணைக்கு அழைத்தது தமிழ்ப் பத்திரிகையாளர்களிடம் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

சந்தர்ப்பத்தோடு சந்தர்ப்பமாக தமிழ்ப் பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் முயற்சியோ என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

### உதவிப் பணிப்பாளர் கைது

இதற்கிடையே இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெய்வநாயகம் பிள்ளையும் இரகசியப் பொலிசாரால் விசாரணைக்கு உள்ளாகியுள்ளார்.

குறிப்பிட்ட தற்கொலை அங்கிகள் மட்டக்களப்பு ஏறாவூரில் இருந்தே கொண்டுவரப்பட்டதாகவும், அதனுடன் அவருக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைதானதாகவும் கூறப்படுகிறது. திரு.தெய்வநாயகம் பிள்ளை ஏறாவூரைச் சேர்ந்தவர்.

எப்போது வேண்டுமானாலும் அழைத்து விசாரிக்கக்கூடிய நம்பகமான பதவி வகிக்கும் அவரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பானேன்? என்று இந்து சமய கலாசாரத் திணைக்களத்தைச் சேர்ந்தோர் அதிருப்தி தெரிவித்துள்ளதோடு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களிடம் முறையீடு செய்துமுள்ளனர்.

உடனடியாக விசாரித்துவிட்டு அனுப்புவதாகக் கூறியே இந்துசமய கலாசாரத் திணைக்களத்தில் இருந்து அவரைக் கூட்டிச் சென்றனராம். ஆனால் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

# மீனவர் மர்மக் கொலை – பொதுமக்கள் அச்சம்!

மட்டக்களப்பு-புதுமுகத்துவாரம் கடற்கரை மீன்வாடியில் தங்கியிருந்த எஸ். அருளானந்தம் (41) எனும் மீனவர் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த 18.07.98 அன்றிரவு இவருடன் தங்கி நித்திரையிலிருந்த ஏனைய நால்வருக்கும்கூட இவர் மர்மமாக சுட்டுக் கொல்லப்பட்டிருந்தது மறுநாள் காலையிலேயே தெரிய வந்ததாம்.

கண், காது உட்பட 5 தடவைகள் இவர் மேல் சுடப்பட்டுள்ளதாகவும் அது பிஸ்டல் துப்பாக்கிச் சூடாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே அப்பகுதியிலிருந்த மின்மாற்றியொன்று சமீப சில நாட்களுக்கு முன்னர் புலிகளால் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள மக்கள்மீது சந்தேகம் கொண்டு பல்வேறு வகையான கெடுபிடிகள் கொடுக்கப்பட்டுவந்ததாகவும் பெண்கள் உட்பட பலர்மீதும் அவ்வப்போது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

படையினருடன் இணைந்து செயற்படும் துணைப் படையினரான ராசிக் குழுவினரே அடிக்கடி இப்பகுதியில் நடமாடுவதாக பொதுமக்கள் கூறுகிறார்கள். இப்பகுதியிலுள்ள பொதுமக்கள்மீது சந்தேகங்கொண்டு நெருக்கடி கொடுக்கப்படுவதால் அவர்கள் அச்சமும் பீதியும் நிறைந்து காணப்படுகிறார்கள்.

# புலிகளிடம் சென்ற படைவீரர்

(நமது நிருபர்)

சமீபத்தில் திருமலை 64ம் கட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த படைவீரரொருவர் படையிலிருந்து தப்பித்து ஆயுதங்களுடன் மணற்சேனைக்கு வந்து சேர்ந்தாராம். அங்கு வந்தவரைக் கண்ட இரு இளைஞர்கள் அவரிடம் விவரம் கேட்டபொழுது அவர் தான் படையிலிருந்து தப்பித்ததாகவும் புலிகளிடம் சென்று ஆயுதத்தை ஒப்படைத்து விட்டு தனது சொந்த ஊருக்குப் போய்ச்சேர விரும்புவதாகவும் தெரிவித்திருந்தாராம்.

விவரம் கேட்டதும் அந்தப் பெரும்பான்மையினப் படை வீரரை எங்கு ஒப்படைப்பது என்று அந்த இரு இளைஞர்களுக்கிடையில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

அவர்களில் ஒருவர் படைவீரர் தப்பித்து வந்த தகவலைப் படையினருக்கே தெரிவிக்க முயன்று படைமுகாமுக்கே சென்றிருக்கிறார். படைவீரர் பள்ளிக்குடியிருப்பில் உள்ள புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டாராம்.

படைவீரர் தப்பித்து புலிகளிடம் போய்ச் சேரவிருந்த தகவலை படையினருக்குத் தெரிவிப்பதற்காகச் சென்ற இளைஞர் தற்போது வெளியில் வர முடியாமல் படையினருடனே தங்கியுள்ளாராம்.

# சார்க் மாநாடும் செம்மணி புதைகுழியும்!

செம்மணியில் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான புகார் கூறப்பட்டு பல வாரங்களாகியும் இதுவரை உருப்படியான எந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை. அப் பகுதியில் தடயங்கள் இருந்து, அவற்றை அகற்ற யாராவது முயன்றிருந்தால் இதுவரை கிடைத்த கால அவகாசமே போதுமானதாக இருந்திருக்கும்.

சார்க் மாநாடு விரைவில் கொழும்பில் நடைபெற உள்ளதால், இந்த நேரத்தில் செம்மணி புதைகுழிகளைத் தோண்ட அரசு முன்வராது என்று தெரிகிறது.

தமிழ்க் கட்சிகள், தமிழ் பா.உக்கள், பொது அமைப்புக்கள் பல செம்மணி புதைகுழி விவகாரம் பற்றிக் கூறியும்கூட இதுவரை அரசாங்கம் நேரடியாக எக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. இவ்வலட்சியம் குறித்து தமிழ்க் கட்சிகளே அதிர்ச்சி அடைந்துள்ளபோதும், தமது அதிர்ச்சியை வெளிக்காட்ட முடியாமல் உள்ளன.

# குடிமக்கள் இருவர் பலி!

அம்பாறை-நுவரகல தென்ன எனும் இடத்தில் சிங்களப் பொதுமக்கள்மீது சுடப்பட்டதில் இரு குடிமக்கள் பலியானார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களக் குடிமக்கள் மீதான தாக்குதலைப் புலிகளே மேற்கொண்டிருந்தனர் எனப் பாதுகாப்புப் படையினர் கூறியுள்ளனர். இதுவிடயமான மேலதிக விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மேற்படி சம்பவம் ஜூலை 18ம் திகதி இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



## "குண்டு வீச்சை நிறுத்து"

வன்னியில் 10.06.98 அன்று கிளிநொச்சி சுதந்திர புரத்தில் நடைபெற்ற விமானக் குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 25 பொதுமக்கள் பலியாகினர். இவ்விடயம் பாராளுமன்றத்திலும் எடுத்துரைக்கப்பட்டது. சுதந்திரப்புரம் குண்டுத் தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுக்களை கண்டித்து வன்னியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமான காட்சியே இது.

இரண்டாவது படம்வன்னியில் மாணவர் எழுச்சி நாளில் நடைபெற்ற அணி வகுப்பின்போது பதிவு செய்யப்பட்டது.



## மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம்

கம்பஹா கல்விப்பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளில் கல்வித்தரம் குறைந்த மாணவர்களிடையே கல்வி மேம்பாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் புதிய செயல் திட்டமொன்று விரைவில் ஏற்படுத்தப்படும்.

பிரஸ்தாப திட்டத்தின் முதற்கட்டமாக வறிய மாணவர்களைக் கணக்கெடுத்து, அவர்களிடையே பொருளாதாரத் தாக்கம் காரணமாகப் படிப்பில் குறைபாடு இருக்கிறதாவென மதிப்பீடு செய்யப்படும்.

மாணவ-மாணவிகளின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் செயற்பாடு தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே புரிந்துணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். கம்பஹா மாவட்டக் கல்வி முன்னேற்றச் சங்கத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பிரஸ்தாப செயற்பாடுகள் அமுல் நடாத்தப்படவுள்ளன.

## அதிகாரிகளுக்கு காயம்

மட்டக்களப்பு-புணானை ஜயந்தியாய வீதியில் மூன்று இராணுவ அதிகாரிகளுடன் பயணம் சென்று கொண்டிருந்த மாருதி ஜீப் வண்டியொன்று 12.07.98 அன்று மாலை குடை சாய்ந்து விபத்திற்குள்ளானது. இதனால் இரு அதிகாரிகள் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

விபத்தில் சிக்கிய ஒரு அதிகாரி முன்னர் பாடசாலை ஆசிரியராக இருந்து அச்சேவையை விட்டு விலகிப் படையில் சேர்ந்து பின்னர் படையிலிருந்து விலகி மீண்டும் ஆசிரியர் சேவையில் சேர்ந்து கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்து பிரியாவிடை பெறும் வேளையிலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது.

ஜீப் வண்டியை ஓட்டிச் சென்ற படைவீரரிடம் வாகன இராணுவ அனுமதிப்பத்திரம் இல்லையாம். அத்துடன் சிலவருடங்களுக்கு முன்னர் ஏறாவூரில் சிவிலியனான முஸ்லிம் இளைஞனொருவன் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்ட சம்பவத்திலும் இவர் சம்பந்தப்பட்டிருந்தாராம்.

## சாவடியில் சுருட்டல் தாராள அன்பளிப்பு!
## வாகனக்காரர்களிடம் நட்பான கண்டிப்பு!

கிழக்கிலிருந்து நாட்டின் வேறு பகுதிகளுக்கும், நாட்டின் இதர பகுதிகளிலிருந்து கிழக்குக்கும் போக்குவரத்திலீடுபடும் வாகனக்காரர்களுக்கு சீருடையினரால் கொடுக்கப்படும் நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வாகனக்காரர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

ஒரு லொறிக்காரர் நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது பணமாக, ரூபா 500/= ஐ வழங்க வேண்டியுள்ளதாகவும், இது தவிர கிரமமான முறைப்படி சாவடிகளில் கேட்கப்படும் பெறுமதியான பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டியிருப்பதாகவும் இந்தப் பொருட்கள் பாதுகாப்பு தொடர்பான தேவைப்பாடுகளுக்கோ அல்லது முகாம் தேவைகளுக்கோ பொருத்தமானதாகத் தோன்றவில்லை என்றும் கூறப்படுகிறது. வாகனக்காரர்களிடம் கண்டிப்பான முறையில் கேட்டு வாங்கிக்கொள்ளும் பொருட்களை மீண்டும் கடைகளில் கொடுத்துப் பணம் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

பொருட்கள் வாங்கிக் கொடுக்கத் தாமதிக்கும் அல்லது குறைவான பணம் கொடுக்கும் வாகனக்காரர்களுக்கு சாவடிகளில் பலத்த கெடுபிடிகள் கொடுக்கப்படுவதைத் தவிர்க்குமுகமாக சாவடிகளிலுள்ளோரை நல்ல முறையில் உபசரிக்க வேண்டியிருப்பதாக வாகனக் காரர்கள் கூறுகிறார்கள். தாம் நாளாந்தம் சாவடிகளைத்தாண்டிப் பயணம் செய்யவேண்டியிருப்பதால் எத்தகைய நெருக்கடிகள் இழைக்கப்பட்டாலும் தாம் உயிருக்கு அஞ்சி அவற்றை வெளியில் கூறுவதில்லை என்றும் வாகனக்காரர்கள் சொல்கிறார்கள்.

கிழக்கின் பிரதான நெடுஞ்சாலைகளில் நாளாந்தம் குறைந்தது 500 வாகனங்கள் போக்குவரத்திலீடுபடுகின்றன. இவை ஒவ்வொரு வாகனமும் கடக்கும் சாவடிகளில் சுமார் 500/= ரூபாவுக்குக் குறையாத அன்பளிப்பைப் பணமாகவோ பொருளாகவோ கொடுத்தேதான் பயணத்தைத் தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

## திருத்தாத வீதி

பசறைப் பகுதியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கின்ற கோணக்கலை தமிழ் வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஒவ்வொரு தேர்தலின் பொழுதும் இந்த வீதியை திருத்தஞ் செய்து தருவதாக வாக்களித்து ஆயிரக்கணக்கான வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. இப்படியே ஐந்து தேர்தல்களை சந்தித்து விட்டோம். இந்த வீதியை திருத்தஞ் செய்ய நிதி ஒதுக்கியிருப்பதாக எல்லா அரசியல்வாதிகளும் கூறிக்கொள்கின்றார்கள். வீதி மட்டும் திருத்தப்படவில்லை. இப்பகுதி வாக்காளர்களே! நீங்கள் இம்முறையும் ஏமாளிகள்தான்.

கணவரல்ல காளி

## ஊழியர் அங்கலாய்ப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் 1998.01.01ந் திகதி தொடக்கம் சுற்றறிக்கை இல. 2/97(11) மூலம் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டுள்ளது. ஆனால் காரைதீவு சுற்றயற்கூறு வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் இற்றைவரை கூட்டப்பட்ட சம்பளம் 1998.01.01ற்கானது இன்னும் கூட்டப்படவில்லை. இதுபற்றி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அனைவருக்கும் அறிவித்தும் இதற்கு எதுவித நடவடிக்கை எடுத்ததாகவும் தெரியவில்லை என அவ் வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் அங்கலாய்க்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

அகிலன், காரைதீவு-06.





நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்

204/7 ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவளை. Tel: 074-201727 Fax: 561367

(Opposite Buddagosha Vidyalaya)

FACTORY & SHOW ROOM

391/1, Millagaha Estate, Athurugiriya Road, Hokandara North, Hokandara. Tel/Fax: 561367

(Near the telecommunication Exchange Hokandara)


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



விநாயகமூர்த்தி ஆனந்தராசா (குமார்)– நவக்கிரி

அன்னைமடியில்: 29.12.1972

ஆண்டவனடியில்: 19.07.1997

ஆறுதல் சொல்ல
யாரிருந்தென்ன-உன்
ஆருயிர் அன்பிற்கு
ஈடாகுமோ-தேறுதல்
சொல்ல தெய்வம்
வந்தென்ன குமரா-உன்
திருமுகம் பார்த்தால்
போதாதோ-எம்
உள்ளங்கள் துடித்திட நீ
எங்கு சென்றாய் எந்நாளும்
உன் நினைவால் கண்ணீரால்
கரைகின்றோம். ஓர் ஆண்டல்ல
பல்லாண்டு சென்றிடினும் எம்
நெஞ்சமதில் உன்னினைவு
என்றும் நீங்காது.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தகவல்: வ.விநாயகமூர்த்தி

## பேனா நண்பர்கள்

110 புகைப்படங்களுடன் 300 நண்பர்களின் விபரங்களடங்கிய அகில உலக பேனா நண்பர் சஞ்சிகையின் 98 ஜூலை இதழ் தற்போது விற்பனையாகின்றது.

விலை ரூபா 100/=, வெளிநாடு ரூபா 200/=

முகவரி

Y.L. MOHAMED NAYIEM
25, KIRIGALA ROAD,
MAWANELLA.
SRI LANKA.


## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்

**கொழும்பில் ஜூலை 28ம் திகதி வரை சந்திக்கலாம்**

BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 338165, 338166 - 072-609388

**ஓட்டமாவடியில் ஆகஸ்ட் 8,9ம் திகதிகளில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065-29329

மற்றைய நாட்களில் Dr. Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்

**வவுனியாவில் ஆகஸ்ட் 15,16ம் திகதிகளில்**

வவுனியாவில் 2ம் குறுக்குத் தெரு ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INN ல் சந்திக்கலாம் T.P. 024-22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

## பழுதுபார்த்தல்

T.V, Video, Hi-Fi Radio, Telephone, Emergency Light போன்ற எல்லாவிதமான எலக்ரோனிக் உபகரணங்களை திருத்திப் பெற்றுக் கொள்ள தலைநகரில் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

**Thiviya Electronic**

121, 3/3R, First Cross Street, Colombo-11.
T.P.- 334322


## 8வது நினைவு தினம்



சிவானந்தன் சதீஷ்குமார்

மலர்வு: 01.11.1981 | உதிர்வு: 26.07.1990

ஏக்கத்தின் எல்லை தனில்
எமையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கோடி ஒளிந்தாய்–
எமதன்புச் 'சக்குட்டி'?
என்றென்றும் உன் நினைவில்.........

இ.சிவானந்தன் தம்பதி (பெற்றோர்)
சகோதர சகோதரிகள், உற்றர் உறவினர்.

களுதாவளை-03, களுவாஞ்சிக்குடி

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**சஞ்ஜய் (26.07.1998)**

மணற்பாதி, கரணவாயைச் சேர்ந்த செ.இந்திரன்-திருகோணமலையைச் சேர்ந்த சுமதி தம்பதியின் செல்வப் புதல்வன் சஞ்ஜய் தனது முதலாவது பிறந்தநாளை 26.07.98 அன்று டென்மார்க் HØRSHOLM நகரில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, வேத மாமா, கோபு மாமா, மதன் மாமா, லதா அத்தை, சோபிதா அத்தை, மச்சான் விவோஷ், மச்சான் அபிலாஷ், சுவிஸ் சிறீ சித்தப்பா, இலண்டன் சாந்தன் சித்தப்பா, இலங்கையில் இருக்கும் கரவெட்டி அப்பம்மா, கந்தன் பெரியப்பா, பெரியம்மா, அனிதாக்கா, அனோஜன் அண்ணா, திருமலையில் இருக்கும் பாபு மாமா, யாமினி மாமி, லதா சித்தி, அரவிந்தன் அண்ணா, ஜனனி அக்கா, பாட்டி, பெரியம்மாமார்கள் பவளம், வசந்தி, பெரியப்பாமார்கள் பாலேந்திரா, யோகராசா, மாமாமார்கள் சங்கர், விஷா, விஷ்ணு, கௌதமி சித்தி, டிலா சித்தி, மாமிமார்கள் யசோ, சுஜிதா, காண்டீபன் சித்தப்பா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பத்ரகாளி அம்மன் அருளால் சீரும் சிறப்புடன் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: பத்தன் (கொழும்பு)


## SPOKEN ENGLISH

BY K. M. N. NALRAVI

இப்பொழுது வெள்ளவத்தையில்

யாருக்காக?

- ★ தொழில் புரிபவர்களுக்காக.
- ★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- ★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
- ★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 18 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப் பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: பழைய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பம்.

NALRAVI ENGLISH LANGUAGE CENTRE

527, First Floor, Galle Road, Wellawatta, Col - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி ஆடர்கள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி.

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13.
Tel: 342463, 344831 431137
Fax: 0094 1 342464




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வன்னி எம்.பி. மீது தாக்குதல்!

## உள்வேலையா? புலிப் பாய்ச்சலா?

வவுனியா மாவட்ட எம்.பி. சண்முகநாதன் (வசந்தன்) கிளைமோர் கண்ணிவெடிக்குப் பலியாகியுள்ளார்.

இக்கொலைக்கு தாமே காரணம் என்று புலிகள். கனடாவில் உரிமை கோரியிருப்பதாக புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் கூறியுள்ளார்.

ஆனால் கனடாவில் இருந்து அவ்வாறு புலிகள் உரிமை கோரவில்லை. கனடாவில் புலிகள் இயக்கம் என்ற பெயரில் புலிகள் இயங்குவதோ, உரிமை கோரல்கள், அறிக்கைகள் போன்றவற்றை அங்கிருந்து வெளியிடுவதோ கிடை யாது.

கனடா அரசு சில விடயங்களில் கடுமையாக இருப்பதால் அங்கு புலிகளின் செயற்பாடுகள் மிகக் கவனமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே உரிமை கோருவதாக இருந்தால்கூட கனடாவில் இருந்து புலிகள் உரிமை கோரமாட்டார்கள்.

அதுமட்டுமன்றி இவ்வாறான விடயங்களில் தலைமைப்பீடத்தை முந்திக்கொண்டு புலிகளின் சர்வதேசக் கிளைகள் கருத்துச் சொல்வது கிடையாது.

சண்முகநாதன் எம்.பி. கொலை தொடர்பாக இதுவரை புலிகள் எவ்விதமான உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை. உரிமை கோரல் எதனையும் மேற்கொள்ளவும் இல்லை.

சண்முகநாதன் கொலை தொடர்பாக ஏற்பட்ட சந்தேகம் ஒன்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவே மாணிக்கதாசன் அப்படியொரு கதையைக் கூறியிருக்கிறார்.

சண்முகநாதன் பலியான உடனேயே அது புளொட்டுக்குள் நடந்த உள்வேலையாகத்தான் இருக்கும் என்று பரவலான கதை உலாவத் தொடங்கிவிட்டது.

முன்னர் 08.06.98 அன்று வவுனியாவில் பாலச்சந்திரன் எம்.பி.யின் இல்லம் மீது தாக்குதல் நடந்தபோதும் புளொட்டின் உள்வீட்டு வேலை என்றுதான் சந்தேகங்கள் கிளப்பப்பட்டன.

ஆனால், புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலே அது என்பதில் சந்தேகமே கிடையாது. முன்கூட்டியே உஷாராகி பின்புறவழியால் சென்றதால் பாலச்சந்திரன் உயிர் தப்பினார்.

பாலச்சந்திரனுக்கு வைத்த குறி தப்பியது. அடுத்த குறி சண்முகநாதன். குறி தவறவில்லை.

சண்முகநாதனுக்கு குறி வைத்தது யார்? என்பதுதான் பரவலான சந்தேகம்.

புளொட் உள்வேலைதான் என்று வவுனியா மக்களே பொதுவாக நம்பும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

சண்முகநாதன் கொலைக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்று பற்றிய அரசல் புரசலான கதைகள்தான் சண்முகநாதன் கொலை பற்றியும் சந்தேகத்தை கிளறிவிட்டன.

புளொட் இயக்க உறுப்பினரான சீவரத்தினம் சந்திரகாசன் (ராஜன்) என்பவர் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் பலியானதாக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டார்.

தவறுதலான வெடி விபத்தல்ல. சுட்டுவிட்டு கொண்டுவந்து போட்டுவிட்டார்கள் என்று கதை பரவியது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சண்முகநாதன் கொலையும் நடந்தமையால் மறுபேச்சே இல்லாமல், உள்வேலை என்று ஊகிப்புக்கள் கிளம்பிவிட்டன.

ஆனால், அந்த ஊகங்கள் தவறானவை என்பதையே கிடைக்கும் தகவல்கள் உறுதி செய்கின்றன.

வவுனியாவில் புளொட் அமைப்பினருக்கு பலத்த அடி ஒன்றை கொடுப்பதற்கான முடிவு வன்னியில் எடுக்கப்பட்டுவிட்டது.

இதனையடுத்தே வன்னியில் இருந்து வெளியாகும் ஈழநாதம் தினசரி சமீபகாலமாக புளொட்டின் நிதிதிரட்டல், ஆட்கடத்தல் பற்றிய செய்திகளை தொடர்ச்சியாக வெளியிட ஆரம்பித்தது.

அது மட்டுமன்றி வன்னியில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜமும் புளொட் மீது நேரடியாகவே குற்றம் சாட்டியுள்ளது.

புளொட் அமைப்பு விதிக்கும் வரியால் ஒவ்வொரு லொறிக்கும் மேலதிகமாக 30 ஆயிரம் ரூபா முதல் 60 ஆயிரம் வரை செலுத்த வேண்டியுள்ளது என்று கூட்டுறவு சமாஜம் தெரித்துள்ளது.

புலிகளின் குரல் வானொலியிலும் புளொட் அமைப்பினரின்மீது கண்டனம் தெரி விக்கும் விதமான செய்திகள் ஒலிபரப்பாகின.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் செங்கலடியில் புளொட்மீது பாரிய தாக்குதல்களை புலிகள் நடத்தியிருந்தனர். படையினருடன் இணைந்து புலிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவே தாக்குதல் நடத்தப்பட்டது.



புலிகளால் அனுப்பப்பட்ட செங்கற்கள் போன்றவற்றுக்கும் செங்கலடியில் புளொட் வரி விதித்தனர். அதுவும் புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி இருந்தது.

அதேபோலவே வவுனியாவில் இருந்து புலிகளின் பிரதேசங்களுக்கு செல்லும் பொருட்களுக்கு புளொட்டின் வரி விதிப்புக்கள் புலிகளுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளதாம்.

அந்த ஆத்திரத்தை மேலும் தூண்டிவிடுவதுபோல சில சம்பவங்கள் நடந்தனவாம்.

புளொட் வவுனியா பொறுப்பாளர் சின்னதாஸ் உமாமகேஸ்வரன் வீதியில் கிளைமோர் தாக்குதலில் பலியான பின்னர், புலிகள் என சந்தேகிக்கப்பட்ட சில இளைஞர்கள் புளொட் அமைப்பினரால் பிடிக்கப்பட்டனராம்.

அவர்களில் மூன்று நான்குபேர் விசாரணையின் பின்னர் கொல்லப்பட்டனர் என்றும் சில தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இத் தகவல் புலிகளுக்கும் போயிருக்கிறது.

பி.பி.சிக்கு மாணிக்கதாசன் கொடுத்த பேட்டியில் தாமே விசாரணை நடத்துவதாகவும், சந்தேகிப்போர் சிலரை தடுத்து வைத்திருப்பதாக பகிரங்கமாக கூறியதும்கூட புளொட்டுக்கு எதிரான நடவடிக்கையில் சிரத்தை காட்ட புலிகளைத் தூண்டியதாகத் தெரிகிறது.

வெகு சிரத்தையாக புளொட் முக்கியஸ்தர்களின் நடமாட்டம் தொடர்பான தகவல்களை வவுனியாவில் திரட்டத் தொடங்கினர் புலிகள்.

வவுனியாவில் புலிகளின் நடமாட்டம் சர்வ சகஜமாகிவிட்டது என்பது ஊர் அறிந்த சங்கதி.

சில தேவைகள் கருதி நகர நிலவரத்தை பெரிதாக குழப்பாமல் இருக்கிறார்களே தவிர, நடவடிக்கைகளில் ஈடுபடத்தக்க வாய்ப்புக்களுடனேயே புலிகள் உள்ளனர்.

மக்களோடு மக்களாக கலந்து விட்டதால், புலிகளை தனியாக இனம்கண்டு கொள்வதும் இனிக் கஷ்டமான காரியம்.

தவிர இன்னொரு சந்தேகமும் இருக்கிறது. வவுனியாவில் புளொட் அமைப்புக்குள், புளொட்டுக்கே தெரியாமல் புலிகள் இயக்க உளவுப் பிரிவினர் ஊடுருவி விட்டதாக புளொட் முக்கியஸ்தர்கள் சிலரே சந்தேகப்படுகின்றனர்.

ஆனால், அப்படி புலிகள் உள்ளே ஊடுருவியிருந்தால் மாணிக்கதாசன் போன்ற முக்கியஸ்தர்கள் இதுவரை எப்படி தப்பி இருக்க முடிகிறது? என்ற கேள்வி அந்த சந்தேகத்தை சற்று வலுவிழக்கச் செய்கிறது.

எப்படியிருந்தாலும் வவுனியாவில் உள்ள கட்சிகளுக்குள் புலிகளுக்கு தகவல் கொடுக்கும் ஆட்கள் இருக்கமாட்டார்கள் என்ற முடிவுக்கு வர இயலாது.

சண்முகநாதன்மீதான தாக்குதல் இரண்டு விதமாக திட்டமிடப்பட்டிருக்கலாம்.

ஒன்று: குறிப்பிட்ட தினத்தன்று இரவு பௌத்த விகாரை நிகழ்ச்சியில் சண்முகநாதன் கலந்துகொள்ளும் தகவல் உள்ளிருந்து அறியப்பட்டிருக்கலாம். நிகழ்ச்சியில் கலந்து கொள்வது அப்படி ஒன்றும் இரகசியமல்ல என்பதால் பேச்சோடு பேச்சாக அன்று காலையோ, அதற்கு முன்னரோ கூட தெரிய வந்திருக்கலாம். அத்தகவல் புலிகளுக்கு எட்ட, திட்டம் தயாராகியிருக்கலாம்.

இரண்டாவது: புளொட்டில் யாராவது ஒரு முக்கிய பிரமுகரை வாய்ப்புக்கிடைக்கும்போது போட வசதியாக கிளைமோர் உள்ளே கொண்டுவந்து தயாராக வைக்கப்பட்டிருக்கும். விகாரை நிகழ்ச்சியில் சண்முகநாதன் கலந்துகொண்டதை எதேச்சையாக கண்டுவிட்டோ, அறிந்தோ உடனே ஓடிப்போய் கிளைமோரை பொருத்திவிட்டு காத்திருந்து இருக்கலாம்.

சண்முகநாதனின் வீடு மட்டுமல்ல பாலசந்திரனின் வீடும் தற்போது சங்கரப்பிள்ளை வீதியில்தான் உள்ளது. வவுனியா நகரசபை தலைவரான புளொட் முக்கியஸ்தர் லிங்கநாதன் வீடும் அதே வீதியில்தான் உள்ளன. மாணிக்கதாசன் தங்கும் வீடொன்றும் அதே வீதியில் உள்ளது.

இவை ஒன்றும் இரகசியம் அல்ல. எனவே, விழாவில் இருக்கும் சண்முகநாதன் எப்படியாவது சங்கரப்பிள்ளை வீதியால்தான் சென்றாக வேண்டும் என்பதால், அங்கு சென்று கிளைமோரை பொருத்திவிட்டு காத்திருக்கலாம்.

சண்முகநாதனின் வாகனத்தை சுலபமாக அடையாளம் காணலாம். கண்ணாடிகளுக்கு கறுப்புத்தாள் ஒட்டப்பட்டிருக்கும்.

சங்கரப்பிள்ளைவீதி திருப்பத்தில் உள்ள முள்முருங்கை மரம் ஒன்றில்தான் கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற முன்பாக சந்தேகத்துக்கு இடமான இரண்டுபேர் அப்பகுதியில் காணப்பட்டதாகவும், பிரதான வீதியை கவனித்துக்கொண்டு நடமாடியதாகவும் சிலர் கூறுகின்றனர். அவர்கள் கையில் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை.

சங்கரப்பிள்ளை வீதியில் நகரசபைத் தலைவர் லிங்கநாதன் வீட்டின் அருகே சென்றி இருக்கிறது. பகலில் அங்கிருந்து பார்த்தால் கிளைமோர் பொருத்தப்பட்ட முள்முருங்கை இருந்த பகுதியில் நடமாட்டங்கள் காணப்பட்டால் தெரியும். ஆனால் இரவில் நடமாட்டம் இருந்தாலும் தெரியாது.

சங்கரப்பிள்ளை வீதியில் கிளைமோரை அழுத்திவிட்டு இரவில் தப்பிச் செல்வதும் மிகமிகச் சுலபம். அருகிலுள்ள வயல் வெளியினூடாகவோ மறுபுற குளப்பக்கத்தாலோ தப்பிச் சென்று விடலாம். சோதனை அரண்களில் மாட்டாமல் தப்பிக்கொள்ள எத்தனையோ ஓட்டைகள் உள்ளன.

வவுனியாவில் புலிகள் தாக்குதல் நடத்துவதோ, தப்பிச் செல்வதோ பெரிய காரியமல்ல என்பதற்கு 17.07.98ல் நடந்த சம்பவம் தக்க உதாரணம்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் ஆலயத்தில் வைத்து பொலிஸ் உளவுப் பிரிவு கான்ஸ்டபிள் சிவானந்தராசா என்பவரை புலிகளது பிஸ்டல் குழுவினர் சுட்டுத் தள்ளிவிட்டுப் போயிருக்கின்றனர்.

வந்ததும் தெரியாது, போன சுவடும் தெரியாது என்று கூறுமளவுக்கு சுலபமாக தப்பிச் சென்றுவிட்டனர்.

சண்முகநாதன் எம்.பி. கொலை நடைபெற்ற இரண்டாவது நாள் இச்சம்பவம் நடந்துள்ளது. எம்.பி. கொலையை அடுத்து குறைந்தது மூன்று நாலு நாட்களாவது பாதுகாப்பு தரப்பினர் வவுனியாவில் உஷாராகத்தானே இருந்திருப்பர். அப்படியிருந்தும் காரியத்தை முடித்துக்கொண்டு நழுவிவிட்டனர் புலிகள்.

ஆக, சண்முகநாதன் எம்.பி. கொலை புலிகளின் தாக்குதலே என்பது உறுதியானது. ஆனால் உள்ளிருந்து தகவல் போனதா இல்லையா என்பதுதான் விடை காணமுடியாத சந்தேகமாக தொங்கி நிற்கிறது.

சரி, புளொட்டின் உள்வேலையாக இருக்க முடியாது என்பதற்கு என்ன காரணம் என்றும் பார்த்து விடலாம்.

புளொட்டுக்கு உள் பிரச்சனைகள் இருக்கின்றன என்பது உண்மையே. உள்பூசலில் அடிபட்ட ஆறுமுகம் என்ற உறுப்பினர் உடம்பு முழுக்க கட்டுப்போட்டபடி கொழும்பு பொது மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். ஆள் தப்பியது அரும் தப்பு.

ஆனாலும் தமது எம்.பிகளையே தீர்த்துக்கட்டும் அளவுக்கு அந்த உள்பிரச்சனை தீவிரமாகவில்லை. குறிப்பாக சண்முகநாதன் எம்.பி. புளொட் உபதலைவர் மாணிக்கதாசனுடன் பிரச்சனை பட்டதாகவும், அதன் விளைவுதான் தாக்குதல் என்றும் சந்தேகக் கதைகள் கூறப்பட்டன.

மாணிக்கதாசனும் சண்முகநாதனும் விரோதித்துக் கொள்ளுமளவுக்கு முரண்பட்டால், சண்முகநாதன் வவுனியாவிலேயே நின்றிருக்கமாட்டார். அதுதவிர ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை சண்முகநாதனும், மாணிக்கதாசனும் ஒன்றாகச் சேர்ந்து சென்றே பார்வையிட்டிருந்தனர்.

சண்முகநாதன் எம்.பி.யின் உத்தியோகபூர்வ வாகனமான லாண்ட் குருஷர் கூட மாணிக்கதாசனிடமே இருக்கிறது. சண்முகநாதன் வேன் ஒன்றைத்தான் பாவித்து வந்தார்.

மாணிக்கதாசனுக்கு மாறாகவோ, மாணிக்கதாசனுடன் போட்டியாகவோ புளொட்டில் வவுனியாவில் நின்று பகிரங்கமாக செயற்பட சண்முகநாதனோ வேறு முக்கியஸ்தர்களோ முன்வரவும் மாட்டார்கள்.

அங்கு முக்கிய பொறுப்புக்களில் உள்ள அனைவருமே மாணிக்கதாசனின் விசுவாசிகளே.

எனவே, மாணிக்கதாசனுடன் சண்முகநாதன் பிரச்சனைபட்டார் என்றும், அதனால் குறிவைக்கப்பட்டார் என்றும், கூறப்படும் காரணங்கள் மேலோட்டமான ஊகங்கள் மட்டுமே.

இன்னொரு முக்கிய விடயத்தை மறந்துவிடக்கூடாது. தற்போதைய நிலையில் வவுனியா மாவட்டத்தில் புளொட் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பலியானால் நஷ்டம் புளொட்டுக்குத்தான்.

காலியாகும் இடத்தை ரெலோதான் நிரப்பும். கடந்த பொதுத் தேர்தலில் பொதுப் பட்டியலில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் ஒரு ஆசனம் பெறும் வாய்ப்பை இழந்தது ரெலோ.

அடுத்ததாக இருப்பவர் செல்வம். இவர் முன்னாள் ரெலோ தலைவர். அதற்கு அடுத்தவர் வினோ. அவருக்கு அடுத்தவர் அபு யூசுப். இவர்கள் இருவரும் ரெலோவைச் சேர்ந்தவர்கள். ஆக, வவுனியாவில் தமது எம்.பி.களை பறிகொடுத்தால் புளொட்டுக்கு நிரந்தர நஷ்டம்தான். இலாபம் ரெலோவுக்கே.

தற்போது புளொட்டுக்கு உட்பிரச்சனையைவிட, புலிகளுடன் உள்ள பிரச்சனைகளைவிட, வவுனியாவில் ரெலோவுடன் உள்ள பிரச்சனைதான் பெரிய பிரச்சனை.

அடுத்த தேர்தலில் புளொட்டுடன் சவாலுக்கு நிற்குமளவுக்கு ரெலோ தன்னை ஸ்திரப்படுத்துவதுடன், புளொட்டுடன் ஆயுதரீதியில் சவால் விடுமளவுக்கு பலத்துடன் வவுனியாவில் நிற்கிறது. வரி விதிப்பு விடயங்களிலும் புளொட்டுடன் ஏட்டிக்குப் போட்டியாக இருக்கிறது ரெலோ.

இரு அமைப்புக்களும் மேலுக்கு புன்னகைத்துக் கொண்டாலும் உள்ளே நீறுபூத்த நெருப்பாக விரோதம் இருக்கிறது.

வவுனியாவில் ரெலோ பொறுப்பாளர் உட்பட ரெலோவினர்மீது புளொட் நடத்திய தாக்குதலின் பின்னர் ரெலோ புளொட்மீது கறுவிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் தம் தலையில் தாமே மண் அள்ளிப்போடுவது போன்று, ரேலோவிடம் தமது பாராளுமன்ற ஆசனங்களை இழக்கும் விதமான திட்டம் எதனையும் புளொட் மேற்கொள்ளாது.

**நாரதர்**

புளொட்டுக்குள் உள்ள பிரச்சனை ஆசனம் போனால் போகட்டும் என்று முடிவெடுக்கும் அளவுக்கு பூதாகரமான பிரச்சனையுமல்ல.

முன்னரும் வவுனியா நகரில் பொலிஸ் ஜீப்மீது நடந்த தாக்குதல் போன்றவற்றில் புளொட்மீதே சந்தேகங்கள் கூறப்பட்டன. ('முரசு' மாறான கருத்து வெளியிட்டிருந்தது.) பின்னர் புலிகளே அதனை உரிமை கோரியிருந்தனர். பாதுகாப்பான வவுனியா நகரில் புலிகள் எப்படிவந்து தாக்கியிருக்க முடியும்? என்பதே அந்த சந்தேகத்தின் அடிப்படையாக இருந்தது.

புலிகளைப் பொறுத்தவரை சாத்தியமாகாது என்று கருதப்படும் இடங்களில் அவர்கள் தாக்குதல் நடத்துவது புதுமையான விஷயமல்ல.

ஒரு பிரதேசம் பரிச்சயமாகும்போது அங்குள்ள ஓட்டைகள், நெளிவு சுழிவுகள் என்பன அத்துப்படியாகி வருகின்றன. பின்னர் அங்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது சுலபம். ஆனால் வெளியே இருந்து பார்ப்போருக்கு அது சாத்திய மில்லாத ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். ○

### முதல் நாள் பலியானார்

சண்முகநாதன் (வசந்தன்) பிறந்தது மே 16, 1962. கூட்டுறவுச் சங்க மனேஜராக இருந்திருக்கிறார். கா.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்தார்.

1983ல் புளொட் அமைப்பில் இணைந்தார். இந்தியாவில் இராணுவப் பயிற்சி பெற்றார். வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர். பின்னர் வவுனியா நகரசபை உறுப்பினர். 1994ல் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.

புளொட் வவுனியா மாவட்ட எம்.பி.கள் மூவரிலும், வவுனியா மாவட்டத்தை பிறப்பிடமாகக்கொண்ட ஒரே எம்.பி. சண்முகநாதன்.

புளொட்டின் வீரமக்கள் தின ஏற்பாட்டில் சண்முகநாதன் மூழ்கியிருந்தார். 16.07.98 அன்று வவுனியாவில் வீரமக்கள் தின ஏற்பாடுகளை பெரிதாகச் செய்வதற்கு சண்முகநாதன் ஓடுப்பட்டுத் திரிந்தார். புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் பலியான நாளும் 16ம் திகதிதான்.

ஆனால் வீரமக்கள் தினத்துக்கு முதல்நாள் இரவே சண்முகநாதன் பலியாகிவிட்டார். இம்முறை வீரமக்கள் தினநிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டு. சண்முகநாதனின் பூத உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. ■



## அதிரடி அய்யாத்துரை



**'போர் என்றால்** போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று மிஸ்டர் ஜே.ஆர். சொன்னதற்கு கூட்டான கட்சி ஞானப்பழங்களும், அன்று ஆயுதம் தூக்கி அடிபட ஆயத்தமான இக்கால மிதவாதிகளும் என்ன துள்ளுத் துள்ளினவை! போன கிழமை அம்மையார் அதே வாசகத்தை சற்றும் பிசகாமல் திருப்பிச் சொல்லியிருக்கிறார். காதில் விழாதமாதிரி இருக்கிற அழகைப் பார்த்தியளோ?!

**வவுனியாவில்** முருகனின் அண்ணன் முன் விழுந்தவர் தலையாட்டுபவராம். பார்த்துவைத்துத்தான் நடந்திருக்குதாம். அவர் தொடர்பாக பொதுவாக நல்லபிப்பிராயம் இல்லையாம் என்று கேள்வி. நகரில் நீக்கமற ரெண்டு எழுத்தார் நிறைந்துவிட்டனராம். இனிப் பிசகுதான் என்று சொல்லுகினம் விஷயம் அறிந்தோர்.

**ரெண்டு எழுத்தாரைப் பின்பற்றி** ஏனைய இயக்கத்தாரும் வீரர் தினம் கொண்டாட ஆரம்பித்தவை. 'தியாகிகள் தினம்', 'வீரமக்கள் தினம்', 'தமிழ்த் தேசிய வீரர் தினம்'..... ஏன், ஒரே பெயரில் கொண்டாடக் கூடிய ஒற்றுமை கூட இந்தக் கட்சிகளிடம் இல்லையோ? பலியானவர்கள் பெயரிலும் பலப்பரீட்சை தினங்கள் தேவைதானோ? சிந்தித்துப் பார்த்தால் என்ன?

**மலையகத் தமிழர்கள்** மீது விஷத்தை அள்ளி இறைத்திருக்கிறார் மதகுரு ஒருவர். "சிங்கள நாட்டையும், சிங்கள மக்களையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபடவேண்டும்!" என்றும் திருவாய் மலர்ந்துள்ளார். நல்லுரை. இன்னொரு பெல்ஸ் கொடுக்கலாம்!

**தலைநகரில் இருந்து** வரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு தகவல் பஞ்சம் என்றால் 'முரசு' பற்றி எழுதுவதே வேலை. இதே பத்திரிகை எக்ஸ்ரே ரிப்போர்ட் உட்பட பல விஷயங்களை எழுத்துக்கு எழுத்து மொழிபெயர்த்து (வரைபடம் உட்பட) போடும்போது மட்டும் 'புலிமுரசாக' தெரியவில்லையாக்கும்! தமிழர்களும், அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் உண்மைகளைக் கூறினால் அதனைப் 'புலிச் சார்பு' என சாயம் பூசுவது பேரினவாதக் கண்களில் உள்ள கோளாறு. முரசால் அம்பலமான அம்மணியும் கற்பனைகளைக் கறந்து கொடுத்து உதவுகிறாராம். வேலாயுதா? இலவச விளம்பரத்துக்கு நன்றி சொல்லத்தான் வேணும்!

**சகோதரரை** கட்சிக்குள் கொண்டுவருவதில் அம்மையாருக்கு அவ்வளவாக விருப்பம் இல்லையாம். இன்னொரு சகோதரியை உள்ளே இழுக்கும் விடயத்திலும் அதே அபிப்பிராயம் தானாம். அந்தச் சகோதரி எப்போதும் சகோதரர் பக்கம் சாய்பவர். இரண்டுபேரும் ஒன்றாக வந்தால் தீராத தலைமிடி என்று நினைக்கிறாராம். அதனால்தான் கூட்டம் ஒன்றில் சகோதரரை சீண்டினாராம். எல்லாம் பெரிய இடத்துச் சமாச்சாரம்!

**கூட்டணித் தலைவர்** செஞ்சரி போட இன்னம் 25 வருசம் கடக்க வேணும். செஞ்சரி போட வாழ்த்துக்கள்! தனிப்பட்டரீதியில் பழுதில்லாப் பழம். எளிமையான மனுசன். அதுகளில் குறை சொல்லக்கூடாது. ஆனால் வக்காலத்து வாங்கக்கூடாத இடங்களில் வக்காலத்து வாங்குவதுதான் அரசியல் குறை!

**ஜனநாயகக் கட்சித்** தலைவருக்கு நடந்த தாக்குதல் விவகாரத்தில் முக்கியமாக சம்பந்தப்பட்டவர்கள் கைதாகவில்லையாம். வெடிபட்ட காரணத்தாலேயே சிலர் கைதாயினர் என்றும் கூறப்படுகிறது. தங்களில் பிழை வரக்கூடாது என்று உள் அதிகாரிகள்தான் அவர்களையும் மாட்டிவிட்டனர் என்றும் கதைகள் கசிந்து வருகின்றன.

**அயலகப் பாதுகாப்புக்கு** பொறுப்பாளவரின் வாயைக் கிளறி அவல் மெல்ல அங்குள்ள பத்திரிகைகள் ஒற்றைக் காலில் நிற்கினம். இலங்கை விவகாரத்தில் சர்ச்சைக்குரிய கருத்தை அவர் கூறினால் அதைவைத்தே அபிப்பிராயம், எதிர் அபிப்பிராயம் என்று வெளியிட்டு குட்டையைக் குழப்பலாம் அல்லோ? ஆனால் அவரும் மிக எச்சரிக்கையாகத்தான் இப்பவெல்லாம் வாயைத்திறக்கிறார். 'பேச்சைவிட செயல் முக்கியம்' என்பதுதான் இந்த விடயத்தில் அவரது மௌனத்தின் காரணமாம். மற்றப்படி மந்திரிப் பதவிக்காக தன் நிலைப்பாட்டை விட்டு எந்திரிப்பவர் அல்லவாம் அவர். ஒரு முந்திரியாம் அவர்!

**இங்கு வரும்** அயலகப் பிரதமரை தரிசித்து பெயர் எடுக்க-சபாஷ் சரியான போட்டி இப்போதே ஆரம்பமாம். அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மட்டுமல்லாமல், சில பொதுப் பிரமுகர்களும் முண்டியடிப்பதாகத் தகவல். சரியாகச் சிந்திப்பதற்குத்தான் ஆட்கள் பஞ்சம் என்றாலும், சந்திப்புக்களுக்கு முந்துவதற்கு ஆட்பஞ்சமே கிடையாது!

**கழக வெகுஜனப் பிரதிநிதி** அனர்த்த விடயத்தில், கழக உறுப்பினர்கள் சிலர் உடனடியாகவே 'உள்வேலை' என்று கூறிவிட்டனராம். யார் காரணம் என்றும் பெயர் சொல்லி விளக்கினராம். அதன்பின்னர்தான் கதை பரவியதாம். தலைவரும், உபதலைவரும் ஒரே கருத்தைக்கூறியது அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்.

**ஐம்பதிலும் ஆசை** வரும். தென்னாபிரிக்கத் தலைவர் மண்டேலாவுக்கு எண்பதிலும் ஆசை வந்திருக்கிறது. காதலியை கைப்பிடித்திருக்கிறார். இனி அவர் மண்டேலாவின் காரியம் யாவிலும் கைகொடுப்பார். மணமக்களை வாழ்த்துவோமாக!

**தமிழ்ப் பத்திரிகையாளர்** ஒருவர் கைதாகியுள்ளார். கூறப்படும் காரணம் எதுவாக இருந்தாலும், அதெல்லாம் பத்திரிகைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் என்று பத்திரிகையாளர்கள் ஒதுங்கி இருப்பது நியாயமோ? சகோதர மொழிப் பத்திரிகையாளர்கள் மூச்சுக் காட்டவில்லை. தமிழ்ப் பத்திரிகையாளர்கள்மேல் குற்றம் சொன்னால் உடன் நம்பிவிடுவினம். தமிழ்ப் பத்திரிகையாளர்கள் குரல் கொடுத்தால் என்ன?! முரசம் கைகோர்க்கும்!

**இவ்வாரப் பொன்மொழி.** உபயம் சுவாமி விவேகானந்தர்.

"கீழ்த்தரமான தந்திரங்களால்
இந்த உலகில்
மகத்தான காரியம்
எதனையும்
சாதிக்க முடியாது!
இது என்
உறுதியான நம்பிக்கை!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## கருணாநிதியின் வாய்மூல உத்தரவு

## தப்பிச் சென்ற தாக்குதல் அணி

பத்மநாபா கொலையில் ஈடுபட்ட தாக்குதல் அணியினர் தாம் வந்த அம்பாசிடர் காரிலேயே சென்னையை விட்டு வெளியேறினார்கள். பின்னர் வேன் ஒன்றை கடத்திச் சென்றனர்.

இச்சம்பவம் நடைபெறும்போது தமிழக முதல்வர் கருணாநிதி தமிழ் நாட்டில் இருக்கவில்லை. புதுடில்லி சென்றிருந்தார்.

தி.மு.க. அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நெருக்கமான உறவு இருக்கும் விடயம் தமிழக பொலிசாருக்கும் தெரியும்.

பத்மநாபாவும் அவரது சகாக்களும் கொல்லப்பட்டபோது கேட்ட வேட்டொலிகளால் பயந்த பலர் பொலிசாருக்கு தொலைபேசி மூலம் உடன் தகவல் தெரிவித்தனர்.

"சிலோன்காரர்கள் தங்களுக்குள் சண்டை போடுகிறார்கள்!" என்று தகவல்கள் பறந்தன.

அப்போது சென்னையில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்தவர் துரை. துரைக்கும் தகவல் பறந்தது.

தி.மு.க. அரசின் உள்துறைச் செயலாளர் நாகராஜன். அப்போது நாகராஜனை கருணாநிதியின் நிழல் என்றுதான் அழைப்பார்கள்.

தி.மு.க. தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள்கூட நாகராஜன் என்றால் நடுங்குவார்கள். கருணாநிதிக்கு அவர் மேல் இமாலய நம்பிக்கை.

அரச உயர் அதிகாரியான நாகராஜன் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கலைஞரின் ஆள் என்று பந்தாடப்பட்டவர். அப்படியிருந்தும் அசராமல் இருந்தவர் என்பதால் தனது ஆட்சியில் அவரை முக்கியமான துறையான உள்ளாட்சித்துறை செயலாளர் ஆக்கினார் கருணாநிதி.

பொலிஸ் துறையும் உள்ளாட்சி துறையின் கீழ்தான் வருகிறது. அதனால் நாகராஜன் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது.

நாகராஜனும், துரையும் தீவிர தி.மு.க. விசுவாசிகள் என்பதால், அரசு அதிகாரிகள் போலன்றி, கட்சிக்காரர்கள் போல நடந்து கொண்டனர்.

புதுடில்லியில் இருந்த கருணாநிதிக்கு நாகராஜன் தகவலைக் கூறினார். உண்மையில் கருணாநிதிக்கு அது ஜீரணிக்க முடியாத அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பத்மநாபா சென்னை வந்த விடயம் கருணாநிதிக்கோ, தமிழக பொலிசாருக்குக்கூடத் தெரியாது.

கொலைக்கு காரணம் புலிகள்தான் என்பதில் கருணாநிதிக்கு எவ்வித சந்தேகமும் எழவில்லை.

தனது ஆட்சி நிலவும் மாநிலத்தில், தனக்கு எவ்வித தகவலும் இல்லாமல் புலிகள் இப்படிச் செய்து விட்டார்களே என்பது வேறு அவருக்கு அதிருப்தியாக இருந்தது.

ஆனால் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் இருந்தார் கருணாநிதி.

### வாய்மூல உத்தரவு

'தமிழ் நாட்டில் புலிகளின் முகாம்கள் கிடையாது' என்று அதற்கு சில நாட்கள் முன்புதான் சட்டசபையில் கூறியிருந்தார் கருணாநிதி.

பத்மநாபா படுகொலை அவரது கூற்றைப் பொய்யாக்கிவிட்டது.

புலிகள் கைதானால் மேலும் பிரச்சனை சிக்கலாகும். தனது நிலை தர்மசங்கடமாகும் என கருணாநிதி நினைத்திருக்கலாம்.

அதனால் பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்ட புலிகள் தப்பிச் செல்வதை தடைசெய்ய வேண்டாம் என்ற அர்த்தத்தோடு கலைஞர் கருணாநிதி உள்துறைச் செயலாளரிடம் வாய்மூலம் கூறிவிட்டார்.

தமிழக முதல்வரின் எண்ணத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி துரைக்கும் சூசகமாகக் கூறிவிட்டார் நாகராஜன்.

அதனால் சென்னையைவிட்டு வெளியேறாமல் தடைசெய்யக்கூடிய ஏற்பாடுகள் எதனையும் பொலிசார் மேற்கொள்ளவில்லை.



கொலை நடைபெற்று பல மணிநேரங்களாகியும் வாகனங்கள் கூட சோதனையிடப்படவில்லை.

மேலதிகாரிகளின் உத்தரவுகளுக்காக அவ்வப்பகுதி பொலிசார் காத்திருந்தனர். மேலதிகாரிகளோ தங்கள் உச்ச அதிகாரிகள் கூறாமல் எந்த உத்தரவையும் வெளியிட முடியாமல் கைகட்டிக்கொண்டு இருந்தனர்.

### புது யோசனை

இக் கட்டத்தில்தான் கலைஞர்கள் கருணாநிதிக்கும் சிக்கல் இல்லாமல், புலிகளுக்கும் பிரச்சனை இல்லாமல் பத்மநாபா கொலையை திசைதிருப்பும் யோசனை ஒன்று பொலிஸ் அதிகாரி துரையின் மூளையில் உதித்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்து பிரிந்த ஈ.பி.டி.பியினர்மீது கொலைப்பழியைப் போட்டுவிட்டால் எல்லாப் பிரச்சனைக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று சிந்தித்தார்.

சிந்தித்ததோடு நிறுத்தாமல், பத்திரிகையாளர்களையும் அழைத்து, "பத்மநாபாவுடன் தேவானந்தா அணியினர் கடும் விரோதமாக இருந்தனர். அவர்கள்மீதும் சந்தேகம் இருக்கிறது" என்று கூறிவிட்டார்.

துரை இதனைக் கூறும்போது தேவானந்தா உட்பட ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் கொழும்பில் நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் கொழும்பு சென்ற விடயம் துரைக்கோ, தமிழக உளவுப் பிரிவினருக்கோ தெரியாது.

தமிழ் நாட்டில்தான் எங்கேயோ இருக்கிறார்கள். சந்தேகத்தை கூறிவிட்டு தேடிப் பிடிக்கலாம் என்று நினைத்தார் துரை.

கருணாநிதியுடன் கலந்து பேசித்தான் பழியை வேறிடம் போட்டாரா? அல்லது தன்னிச்சையாகவே அவ்வாறு செய்துவிட்டு, கருணாநிதியிடம் பாராட்டும் பெற நினைத்தாரா என்று தெரியவில்லை.

ஆனால் தேவானந்தாவும் அவரது சகாக்களும் கொழும்பு சென்றுவிட்டனர். அங்கு நின்று அறிக்கைகளும் வெளியிட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றம் சாட்டினால் கொலைக்கு தமிழக அரசும் உடந்தை அதுதான் திசை திருப்பப் பார்க்கிறது என்று கருதப்படும் நிலை தோன்றிவிடும் என்று கலைஞருக்கு எவ்வழியிலோ தகவல் எட்டியிருக்க வேண்டும்.

புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய கருணாநிதியை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். "டக்ளஸ் தேவானந்தா ஆட்கள் இக் கொலையைச் செய்திருக்கலாமோ?" என்று கேட்டனர்.

உடனே கருணாநிதி: "அவர்கள் இப்போது இங்கே இல்லை. தேவானந்தாவும் அவரது சகாக்களும் இச் சம்பவம் நடைபெற முன்னரே கொழும்பு சென்றுவிட்டனர்" என்று கூறினார். கொலைக்காரர்களை பிடிப்பதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப் பணித்துள்ளதாகவும் கருணாநிதி கூறத் தவறவில்லை.

அதேசமயம், 'பத்மநாபாவையும் அவரது சகாக்களையும் தமிழ் நாட்டுக்கு வரக்கூடாது' எனத் தான் தடுத்ததை நியாயப்படுத்தவும் கருணாநிதி மறக்கவில்லை.

"புலிகளின் பயிற்சி முகாம்கள்தான் இல்லையென்று கூறியிருந்தேனே தவிர, புலிகள் இங்கே இல்லவே இல்லையென்று கூறவில்லையே" என்றும் தன் பேச்சாற்றலால் சமாளித்தார் கருணாநிதி.

### விருந்து

கருணாநிதி சென்னை வந்து சேரு முன்னரே, புலிகளின் தாக்குதல் அணி திருச்சி போய்ச்சேர்ந்து விட்டது. வழியில் எவ்விதத் தடையும் இருக்கவில்லை.

திருச்சியில் சந்தானம் என்பவரது வீட்டில் அவர்கள் இரவு தங்கினார்கள்.

புலிகளின் தமிழகப் பொறுப்பாளராக இருந்த குண்டுச் சாந்தன் அவர்கள் தங்குவதற்கும், யாழ்ப்பாணம் செல்வதற்குமான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்.

அன்றிரவு சந்தானம் வீட்டில் ஆட்டிறைச்சிக் கறியுடன் தாக்குதல் அணியினருக்கு விருந்து நடந்தது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பிள்ளையார் திடலில் படகு ஏறி யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தனர் தாக்குதல் அணியினர்.

தாக்குதல் அணியுடன் சிவராசனும், தகவல் திரட்ட உதவிய சின்னச் சாந்தனும் சேர்ந்தே யாழ்ப்பாணம் சென்றனர்.

பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்ட அனைவரும் அப்போது வெகு சுலபமாக தப்பிவிட்டனர்.

யாழ்ப்பாணம் வந்த அனைவருக்கும் தலைமைப்பீடம் பாராட்டு தெரிவித்தது. புலிகளின் தலைவர் பிரபாகரன் அனைவரையும் அழைத்து நேரடியாகப் பாராட்டினார்.

அதன்பின்னரே சின்னச் சாந்தன் புலிகளின் உளவுப் பிரிவில் ஒருவரானார்.

இத்தனைக்கும் மத்தியில் தமிழக அரசும், பொலிசாரும் பத்மநாபா கொலையில் துப்புத் துலக்கி வருவதாகவும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறிக் கொண்டிருந்தனர்.



பத்மநாபா, சிறிசபாரத்தினம், கருணாநிதி, பாலகுமார்

### புகார்கள்

ராஜீவ் கொலைக்கும் பின்னர் தி.மு.க. அரசு கலைக்கப்பட்ட பின்னர் பத்மநாபா கொலை விவகாரத்தில் தி.மு.க. அரசுக்கு சம்பந்தம் உண்டு என புகார்கள் கிளம்பின.

கருணாநிதிக்கு முன்னரே இக்கொலை பற்றி தெரிந்திருந்தது என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக தி.மு.க. ஆட்சியில் முக்கிய அமைச்சர்களில் ஒருவராக இருந்த சுப்புலட்சுமி ஜெகதீசன், வை.கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் ஆகியோர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

உண்மையில் இவர்கள் புலிகளுக்கு உதவிகள் செய்தவர்களே தவிர, பத்மநாபா கொலையுடன் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை.

பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் சுப்புலட்சுமி வீட்டில் தங்கியிருந்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டு அரசியல் காரணத்திற்காக கட்டப்பட்ட கற்பனைக் கதைதான்.



80களில் நாபா

பொய்யான குற்றச் சாட்டின் பேரில் நீண்டகாலம் சிறையில் இருந்தனர் சுப்புலட்சுமி, ரவிச்சந்திரன் ஆகியோர்.

தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சி நடந்தது. பின்னர் தேர்தல் நடந்து செல்வி ஜெயலலிதா முதல்வரானார்.

முதல்வரானதுமே அவரது முதல் குறி தமிழக பொலிஸ் இயக்குநராக பதவி வகித்த துரையும், உள்துறைச் செயலாளர் நாகராசனும்தான்.

அதற்கு காரணமும் இருந்தது. தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது செல்வி ஜெயலலிதா வீட்டில் பொலிசார் சோதனை நடத்தினார்கள்.

ஜெயலலிதா எழுதிய கடிதம் ஒன்று அவர்கள் கண்களில் பட்டது.

அரசியலில் இருந்து தான் ஒதுங்கப் போவதாக ஜெயலலிதா எழுதிய கடிதமே அதுவாகும்.

அக் கடிதத்தை உடனடியாக வெளியிட்டு ஜெயலலிதா ராஜினாமா என்று செய்திகளிலும் சொல்ல வைத்துவிட்டனர்.

தனது அனுமதி இன்றி கடிதத்தை வெளியிட்டது தகாத செயல் எனக் கண்டித்த ஜெயலலிதா, பல வருடங்களுக்கு முன்னர்தான் எழுதிய கடிதம் ஒன்றையே திகதியை மாற்றி வெளியிட்டு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளனர் என்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

பொலிஸ் அதிகாரி துரை, உள்துறைச் செயலாளர் நாகராஜன் ஆகியோர்மீதே அவ் விவகாரத்தில் கடும் கோபமுற்றிருந்தார் ஜெயலலிதா.

### தற்கொலை?

செல்வி ஜெயலலிதா முதல்வராகிய சூட்டோடு அந்த அதிர்ச் சிகரமான தகவல் வெளியாகியது.

'முன்னாள் பொலிஸ் டைரக்டர் ஜெனரல் துரை தூக்கமாத்திரைகள் அதிகமாக விழுங்கி மரணமானார்!'

ஜெயலலிதா தன்னை என்ன பாடு படுத்துவார் என்பதை ஊகித்தே துரை போய்ச் சேர்ந்தார்.

உள்துறைச் செயலாளராக இருந்த நாகராஜன் ஜெயலலிதா ஆட்சியில் கைது செய்யப்பட்டார்.

தனது வலதுகரமாக' இருந்த நாகராஜனை கருணாநிதி ஒருமுறைகூட சிறையில் சென்று பார்க்கவில்லை.

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து கருணாநிதியை மாட்டி விட்டால், நாகராஜனை வழக்குகளில் இருந்து விடுவிப்பதாக ஜெய லலிதா ஆட்சி ஆசை காட்டியது.

தன்னை ஒருமுறைகூட கருணாநிதி வந்து பார்க்கவில்லை. தி.மு.க.வின் வேறு தலைவர்களைக்கூட அனுப்பிவைக்கவில்லை. தன்னை விடுவிப்பதிலும் கவனம் செலுத்தவில்லை என்று விரக்தியில் இருந்த நாகராஜன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்தார்.

பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்டவர்களை தப்பிச்செல்ல அனுமதிக்குமாறு முதலமைச்சர்தான் கூறினார் என்ற சாரப்பட நாகராஜன் கூறினார்.

ஆனால் ஜெயின் கமிஷனில் சாட்சியமளித்தது உட்பட பல சந்தர்ப்பங்களில் கருணாநிதி மேற்படி குற்றச்சாட்டை வன்மையாக மறுத்திருக்கிறார்.

எப்போதும் இம்மாதிரியான விவகாரங்களில் அதிகாரிகளே மாட்டிக் கொள்கின்றனர்.

### எழுத்துமூலம்

அமைச்சர்களோ பொறுப்பான பதவியில் உள்ள அரசியல் தலைவர்களோ, நீதிக்கு மாறான உத்தரவுகளை வாய்மொழி மூலம் அதிகாரிகளுக்கு கூறிவிடுவர். முறைப்படி எழுத்து மூலம்தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

முதலமைச்சரோ, முக்கிய அமைச்சர்களோ வாய்மொழியாக தங்கள் உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது, அவர்கள்கீழ் பணியாற்றும் அரச அதிகாரிகள் 'எழுத்துமூலம் உத்தரவு தாருங்கள்' என்று கேட்பது நடக்கக்கூடிய காரியமல்ல.

அப்படி கேட்டால் அந்த அதிகாரி அடுத்த நிமிடமே பந்தாடப்பட்டுவிடுவார். அது தவிர முக்கிய பொறுப்புகளில் தமது சொற்படி நடக்கும் அரச அதிகாரிகளையே ஆட்சிக்கு வருவோர் நியமிப்பர்.

எழுத்துமூலமான உத்தரவு எதுவும் ஆதாரமாக இல்லையென்பதால் நாகராஜனின் வாக்குமூலங்கள் செல்வி ஜெய லலிதா எதிர்பார்த்த விறு விறுப்பை ஏற்படுத்தவில்லை.

### விடுதலை


பத்மநாபா கொலை வழக்கும் இந்த ஆண்டுதான் (1998) முடிவடைந்துள்ளது.

சுப்புலட்சுமி ஜெகதீசன், ரவிச்சந்திரன் உட்பட தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பத்மநாபா கொலை நடவடிக்கைக்கு தாக்குதல் அணி தளபதியாக சென்ற கறுப்பு டேவிட் பின்னர் கடற்சமர் ஒன்றில் பலியானார்.

முக்கிய தகவல் திரட்டிய சின்ன சாந்தன் ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி தூக்குத் தண்டனை பெற்று, தற்போது மேன்முறையீடு செய்துள்ளார்.

பத்மநாபா உட்பட அவரது சகாக்களின் உடல்கள் சென்னை ராஜாஜி மண்டபத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.



அஞ்சலிக் காட்சி

இறுதி ஊர்வலத்தில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ரஞ்சன் என்றும், நாபா என்றும் எஸ்.ஜி. என்றும் அழைக்கப்பட்ட பத்மநாபாவிற்கு தமிழக அரசியல் கட்சிகள் பலவற்றுடன் நல்லதொடர்புகள் இருந்தன.

தமிழ் நாட்டில் நக்சலைட் என்றழைக்கப்பட்ட சீனசார்பு மாவோயிச குழுக்களுடனேயே ஆரம்பத் தொடர்புகளை வைத்திருந்தார்.

இந்திய முதலாளித்துவ அரசை நம்பக்கூடாது என்பதே பத்மநாபாவின் ஆரம்பகால நிலைப்பாடாக இருந்தது. 1985 வரை அதுதான் அவரது நிலப்பாடு எனலாம். பின்னர்தான் இந்திய அரசின் நம்பிக்கைக்குரிய ஒருவராக மாறினார்.

இத்தோடு பத்மநாபா கொலை பற்றி விவரங்களை முடித்துக்கொண்டு அடுத்த நிகழ்வுக்கு செல்லலாம்.

(தொடர்ந்து வரும்)

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# வாஜ்பேயி வரும் வேளையில் இந்து மதகுருமாரை சந்திக்கும் ஜனாதிபதி

பிரான்ஸ் தலைநகரான பாரிசில் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெற முன்பாக கொழும்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகள் நீதியாக, பக்கச் சார்பற்று நடைபெறுவதாக சித்தரிக்கும் முயற்சிகள் நடந்திருந்தன.

கொழும்பில் நடைபெற்ற கைதுகள் குறித்து தெரிவிக்கப்பட்ட புகார்களோடு தொடர்புள்ள படையினரை அழைக்காமல் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து விசாரணை நாடகம் நடத்தப்பட்டது.

இரா.சம்பந்தன் எம்.பி. டாக்டர் நீலன் திருச்செல்வம் எம்.பி. ஆகியோரும் கடன்வழங்கும் நாடுகளுக்காக நடத்தப்பட்ட இந்த நாடகத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

கொழும்பில் சார்க் மாநாடுகள் நடைபெற உள்ளன. இந்தியப் பிரதமர் உட்பட சார்க் நாட்டு தலைவர்கள் விஜயம் செய்ய உள்ளனர்.

இந்நிலையில் சார்க் நாட்டு தலைவர்களுக்கு சுட்டிக்காட்டக்கூடியதாக செய்யப்பட்ட ஏற்பாடுதான் இந்த உயர்மட்ட குழு நியமனமாகும்.

கொழும்பில் இந்துமத குருமார்கள் உட்பட தமிழ்மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்ட விவகாரம் இந்து மத அமைப்புக்களால் இந்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இந்தியப் பிரதமர் வாஜ்பேயிக்கும் இந்து மத அமைப்புக்கள் மகஜர் அனுப்பி வைத்திருந்தன.

இன்றைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைதாவோர் தொடர்பான உயர்மட்டக் குழு என்பதும் கண்துடைப்பு நடவடிக்கையேயாகும்.

இக் குழுவில் அரச சார்பான கட்சிகளைச் சார்ந்தோர் மட்டுமே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எதிரணியினரைச் சார்ந்த எவருக்கும் இக்குழுவில் இடமளிக்கப்படவில்லை.

மனித உரிமை ஆணைக்குழு அமைக்கப்பட்டபோது கைதாவோர் தொடர்பான புகார்களை கவனிப்பதும் அதன் முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், அத்துமீறிய கைது நடவடிக்கைகளுக்கு காரணமானவர்கள்மீது

ஒருவருக்கு பொலிசார் நாலு சாத்து சாத்துவதும், புலி என்ற சந்தேகத்தில் தமிழர் என்ற காரணத்திற்காக கைதாகி அவமானத்தை சந்திப்பதையும் ஒரே தராசில் வைத்து எடைபோட்டு, பிரச்சனைகளின் அடிப்படைகளையே திசை திருப்ப முற்படுகின்றனர்.

பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக வகை தொகையற்று கைது செய்யப்படுதல், கைதாகி காணாமல்போதல்,

காலவரையறையின்றி சிறைகளில் தடுத்து வைத்திருத்தல், தமிழர்களின் இல்லங்களில் தேடுதல் என்ற பெயரில் அத்துமீறல்கள் போன்றவையே இன கௌரவத்திற்கு சவால்விடும் நடவடிக்கைகளாகும். இன

> இனப்பிரச்சனை காரணமாக தமிழர்கள் முகம் கொடுக்கும் தனித்துவமான பிரச்சனைகளை பொதுப்பிரச்சனைகள் போல காண்பித்து சிறுமைப் படுத்துகின்றனர். அதில் ஒன்றுதான் உயர்மட்டக் குழு நியமனம்

ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகவும் இவை விளங்குகின்றன.

மிகப் பாரிய இப்பிரச்சனையின் வடிவத்தை நாடு முழுவதிலும் சகல இன மக்களுக்கும் உள்ள பிரச்சனையாக பொதுமைப்படுத்தி சிறுமைப்படுத்தும் விதமான சித்தரிப்புக்கே உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

என்று நாளை உயர்மட்டக் குழுவும் நியாயம் கற்பிக்கப் போகிறது.

ஏற்கனவே மனித உரிமை ஆணைக்குழுவினர்: "நிதானமாக கைதுகள் நடத்தப்பட வேண்டும்" என்ற தொனியில் ஆலோசனை வழங்கியிருந்தனர்.

கைதுகள், அத்துமீறல்கள் பற்றி விசாரிப்பதுதான் அவர்கள் பணியே தவிர, நாட்டுப் பிரச்சனை பற்றி அபிப்பிராயம் கூறுவதோ, ஆலோசனை வழங்குவதோ அல்ல.

ஆயினும் ஆட்சியாளர்கள் பாரிஸ் மாநாட்டில் கடன்வாங்க வசதியாக பிரச்சனையின் தீவிரத்தை தணிக்கும் விதமாக 'கைதுகள் தவிர்க்க முடியாதது' என்பதுபோல ஆணைக்குழுவின் கருத்து அமைந்திருந்தது.

தற்போதுகூட சார்க் மாநாடு நடைபெறும் தருணத்தில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை அமுக்கும் விதமான இழுத்தடிப்பாகவே மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கை அமைந்துள்ளது.

புதைகுழி பற்றி கூறிய சிப்பாயை விசாரிக்கப் போகிறார்களாம். நேராகத் தொடும் மூக்கை தலையைச் சுற்றித் தொடுவது போன்ற அணுகுமுறையே இதுவாகும்.

குறிப்பிட்ட சிப்பாயின் மனதை மாற்றவும், செம்மணியில்கூட தடயங்களை மறைக்கவும் போதிய கால அவகாசம் தரத்தக்க ஆமைவேக நகர்வையே காணக்கூடியதாக இருந்தது.

இதற்கிடையே யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்தையும் மறுபடி குழப்பும் விதமான செயற்பாடுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நாடெங்கும் காணாமல் போனோருக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு யாழில் காணாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழு அரசின் நாடித்துடிப்பறிந்தே செயற்படக் கூடியதாகும்.

எனினும் மக்களை நம்பவைக்கும் நிமித்தமாகவும், தாம் சுதந்திரமாக செயற்படுவது போன்று காண்பிக்கும் பொருட்டும் பத்தில் ஒரு பிரச்சனைக்கு பரிகாரம் காண முற்படுவர்.

ஒருவேளை இந்த மனித உரிமை ஆணைக்குழு அரசின் மனப்போக்குகளுக்கு மாறாக தன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமானால், இதனை கூண்டோடு கலைத்து விடவும் ஆட்சியாளர்கள் தயங்கமாட்டார்கள்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு நடந்த கதி அதற்கு தக்கதொரு உதாரணமாகும்.

அந்த ஆணைக்குழுவினர் ஆட்சிபீடத்தில் உள்ளோர்மீதான புகார்களையும் ஆராய முற்பட்ட பின்னரே, குறிப்பிட்ட ஆணைக்குழுவை செயல் இழக்கச் செய்ததுடன், கலைத்துவிடவும் முன்வந்தனர் ஆட்சியாளர்கள்.

இலங்கை அரசு பொருளாதார ரீதியாக முழுக்க முழுக்க வெளிநாடுகளையே சார்ந்து நிற்கும் அரசாகும்.

அதன் காரணமாக தனக்கு கடன் தருகின்ற நாடுகளை ஓரளவேனும் திருப்திப்படுத்த இங்கு மனித உரிமைகள், ஜனநாயகம் என்பவற்றை பாதுகாக்கக் கூடிய நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள் போன்றவை இருப்பதாகவும், இயங்கி வருவதாகவும் காண்பிக்க வேண்டியுள்ளது.

எனினும் இந்த மேற்பூச்சுக்கள் அரசின் நலன், ஆளும் கட்சியின் நலன் என்பவற்றை மீறாதவகையிலேயே அமைந்திருக்கும்.

யாழ் செம்மணியில் மனிதப் புதைகுழி விவகாரம் வெளியுலகின் செவிகளிலும் எட்டத் தொடங்கிய பின்னரே இலங்கை அரசின் மனித உரிமை ஆணைக்குழுவினர் தங்கள் திருமுகத்தை அப்பிரச்சனை நோக்கி திருப்பத் தலைப்பட்டனர்.

அவ்வாறு திருப்பத் தலைப்பட்டதும்கூட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் அதிருப்திகளில் இருந்து அரசைக் காப்பாற்றவே உதவியிருக்கிறது.

இதற்கிடையே பொலிசாரினாலும், படையினராலும் கைதாவோர் தொடர்பான புகார்களை விசாரிக்க உயர் மட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பெரியளவில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

பாரதிய ஜனதா அரசு இந்துமத சார்புடைய அரசு என்பதை இலங்கை அரசு நன்கறியும்.

எனவே, இந்தியப் பிரதமருக்கு ஏதாவது அதிருப்தி ஏற்பட்டிருந்தால், அதனை களையும் விதமாக, 'இப்போது எல்லாமே நல்லபடியாக உள்ளன' என்று காண்பிக்கவும். இந்த உயர்மட்ட குழு நியமனம் உதவும்.

அதுமட்டுமன்றி இந்து மத குருமார்கள் அவமானத்திற்கு உள்ளானபோது ஒரு அனுதாபவார்த்தைகூட ஜனாதிபதி தெரிவித்திருக்கவில்லை.

அதுமட்டுமன்றி சமீபத்தில் இந்து மத குருமார்களை சந்திக்க வருமாறு கூறிவிட்டு, அச் சந்திப்புக்கு செல்லாமல் அலட்சியம் செய்திருந்தார்.

ஆயினும் ஜூலை 23ம் திகதி இந்து மத குருமார்களை சந்திக்க ஜனாதிபதி அவர்கள் புதிய தேதி குறித்திருந்தார்.



எவ்வகையான நடவடிக்கையையும் அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் முதலில் வெளியிடப்பட்ட செய்தியே வேடிக்கையாகக் காணப்படுகிறது. இந்த வேடிக்கையின்

இந்து மத குருமார்களை சந்திக்க கொடுக்கப்பட்ட தேதியானது, இந்தியப் பிரதமர் வாஜ்பேயியின் இலங்கை வருகையை ஒட்டியதாக தீர்மானிக்கப் பட்டதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்து மத குருமாரின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணப்பட்டு விட்டதாக இந்தியப் பிரதமரின் செவிகளுக்கு செய்தி எட்டக்கூடியதாக இச் சந்திப்பு அமைந்திருக்கும்.

இந்து மத குருமார்கள் பிரதமர் வாஜ்பேயியிடம் நேரடியாக புகார் கூற முயற்சிக்காமல் அவர்கள் மனங்களை குளிர்விக்கவும், வாஜ்பேயி வரும் நேரமாகப் பார்த்து சந்திப்புக்கான நாள் குறிக்கப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக, அவை அன்றாட அவலங்களாக இருந்தாலென்ன, அவற்றுக்கெல்லாம் காரணமான இனப் பிரச்சனையாக இருந்தாலென்ன அவற்றுக்கு பரிகாரம் காண்பதுபோன்ற பாவனைகள் வெளியுலகை திருப்திப்படுத்தும் தேவை கருதி மட்டுமே

பின்னால் இனரீதியாக தோன்றும் பிரச்சனைகளை சிறுமைப்படுத்தும் விபரீதமும் காணப்படுகிறது.

இக் குழுவுக்கு 20 புகார்கள் கிடைத்துள்ளதாகவும், அவற்றில் சிங்கள மக்களிடம் இருந்து கிடைத்த புகார்களும் உள்ளன என்றும் இக்குழு பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டிருந்தது.

கைதுகள், தடுப்புக் காவல்கள் என்பன சகலருக்கும் பொதுவான ஒரு பிரச்சனை போன்று சித்தரித்து, தமிழ் மக்கள் என்ற ரீதியில் முகம் கொடுக்கும் பிரச்சனைகளின் தாக்கத்தை மறைக்கும் முயற்சியாகவே மேற்படி குழுவின் செய்தி விளங்குகிறது.

சிங்கள மக்கள் மத்தியில் நடைபெறும் கைதுகள் போல தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் கைதுகள் நடக்கின்றன. கிரிமினல் குற்றங்கள், சிவில் குற்றங்கள் மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகள் நிமித்தம் கைது செய்யப்படும் சம்பவங்கள் பற்றியது அல்ல இன்றுள்ள பிரச்சனை.

அக் கைதுகளை எதிர்த்து யாரும் பிரச்சனை கிளப்பவும் இல்லை.

சங்கிலி அறுத்து கைது செய்யப்படும்

அதுமட்டுமன்றி தற்போது வடக்கு-கிழக்குக்கு வெளியே கைதாகும் இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் மலையகப் பகுதிகளைச் சேர்ந்தோரே ஆவர். கொழும்பில் மிக நீண்டகாலமாக வசிக்கும் தமிழர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு இருந்தும் குறிப்பிட்ட உயர்மட்டக் குழுவில் மலையக தமிழ் மக்களின் சார்பாக எவரும் நியமிக்கப்படவில்லை.

எந்தப் பிரச்சனையானாலும் அதன் அடிப்படையை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு பதிலாக, தீர்த்துவைப்பதுபோன்று பாசாங்கு காண்பிப்பதில் ஆட்சியாளர்கள் குறியாக இருப்பதையே மேற்கண்ட அணுகுமுறையும் எடுத்துக்காட்டியுள்ளது.

புதிய புதிய குழுக்களாக அமைக்கப்பட்டு வருகின்றனவே தவிர, தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அன்றாட அவலங்களில் சிறிதளவுகூட தீர்ந்தது கிடையாது.

அன்றாட அவலங்களை குறைத்துக் காட்டவும், கைதுகளை நீதியானது போல காண்பிக்கவுமே அரசு புதிதாக நியமிக்கும் குழுக்கள் உதவப் போகின்றன.

புகார்களை விசாரித்தோம். தகுந்த ஆதாரத்தின் பேரில்தான் கைதாகியுள்ளனர்

செம்மணி புதைகுழி விவகாரம் பெரிதாக வெளியான பின்னரே மேற்படி அறிவிப்பு அவசர அவசரமாக வெளியிடப்பட்டது.

அதற்கு முன்னர் தெற்கில் காணாமல் போனோரைப் பற்றி ஆராய்வதிலேயே மேற்படி ஆணைக்குழு ஈடுபட்டு வந்தது.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோருக்காக தனியான ஆணைக்குழு நியமித்தால், அந்த அவலத்தின் தாக்கம் தனித்துவமாகத் தெரியும் என்பதால் தனியாக ஆணைக்குழு நியமிக்க அரசு முன்வரவில்லை.

ஜே.வி.பி. காலத்தில் காணாமல் போனோரின் எண்ணிக்கையோடு, கடலில் உப்புக் கட்டியை கரைப்பது போல, யாழில் காணாமல் போனோர் அவலத்தை கலந்து மறைக்கும் விதமாகவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய நிலத்தொடர்ச்சி, மொழி, பொருளாதாரம் போன்ற தேசிய இன தனித்துவங்களை இல்லாதொழிப்பதில் ஆரம்பமான பேரினவாத வியூகங்கள், தேசிய இனப்பிரச்சனையின் பக்க விளைவுகளாக தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் அவலங்களின் தாக்கத்தையும் குறைத்தும், திசைதிருப்பியும் காண்பிக்கும் அளவுக்கு மாறி நிற்கின்றன.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# ஐரோப்பாவில் பிரபாகரன்

ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர்கள் வாழும் அநேகமான வீடுகளில் பிள்ளையார் படமும், பிரபாகரன் படமும் தவறாமல் இடம்பெற்றுள்ளதாம்.

ஐரோப்பா வாழ்க்கை இலங்கைத் தமிழர்கள் பலருக்கு சலித்துவிட்டது. எப்போது திரும்புவோம்? என்று பலர் காத்திருக்கின்றனர். அவர்கள் எல்லாம் நம்புவது புலிகளை.

அரசின் தீர்வு யோசனை பற்றி கதையெடுத்தாலே பலர் உதைக்க வருகிறார்களாம். அரசு தானாக ஒருநாளும் தீர்வைத் தராது என்பதில் மலையைவிட வலிமையான நம்பிக்கையோடு உள்ளனர். அத்தகைய நம்பிக்கையில் நம் நாட்டில் வாழும் நம்மவர்களும் சளைத்தவர்களல்ல.

வெளிநாட்டுக் கிளைகளில் பிரபாகரன் பல மாற்றங்களைச் செய்துள்ளார். புதியவர்கள் பலர் பணிகளில் நியமிக்கப்பட்டு சுறுசுறுப்பாக காரியங்கள் நடக்கிறதாம்.

"சிலர் நிதிக் கையாடல்களில் ஈடுபட்டபோது, உரிய முறையில் கவனிக்கப்பட்டும் உள்ளனர். கட்டுப்பாட்டை மீறுகிறவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை உரிய மரியாதையுடன் கவனிக்க நம்பிக்கையான ஆட்கள் சிலரை வெளிநாடுகளில் தனது

நேரடித் தொடர்பில் வைத்திருக்கிறார் பிரபாகரன்." என்கிறார் புலிகளின் ஐரோப்பிய நெருங்கிய ஆதரவாளர் ஒருவர்.

யாழ் குடாநாட்டிலிருந்து புலிகள் பின் வாங்கிய பின்னர் வெளிநாட்டில் நிதி திரட்டலில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததாம்.

'ஜயசிக்குறுய்' சமர் தொடங்கிய பின்னர் வெளிநாடுகளில் நிதி குவிகிறது.

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களின் நித்திய கவலை இதுதான். "புலிகளுக்குப் போகும் நிதியை எப்படி தடுப்பது?" தலை முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றன தூதரகங்கள்.

ஆனால், எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாத விஷயம் இது. நிதி உதவி செய்பவர்கள் தங்கள் விருப்பப்படிதான் கொடுக்கிறார்கள்.

புலிகளை தடை செய்த அமெரிக்காவில் இருந்தும் புலிகளுக்கு இப்போதும் அங்குள்ள தமிழர்களால் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

தடைச்சட்டமே போட்டாலும் அதன் ஓட்டைகளால் புகுந்து விளையாடுவதில் இலங்கைத் தமிழர்கள் கில்லாடிகள்.

ஆனால் அமெரிக்கா போல ஏனைய நாடுகள் தடைச்சட்டத்தை நீட்டப்போவதில்லை.

இலங்கை அரசின்மீது முன்பிருந்த நல்ல நோக்கும் வெளியுலகில் குறைந்து வருவதால், நமது வெளிநாட்டு அமைச்சரின் திக் விஜயங்கள் போதிய பயனை அறுவடை செய்யப்போவதில்லை.

ஐரோப்பாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் பலர் ஆரம்பத்தில் இலங்கை நிகழ்வுகள் குறித்து அதிக அக்கறை கொள்ளவில்லை.

இப்போது நிலவரம் மாறிவருகிறது. அன்றாடம் செய்திகள் கேட்கிறார்கள்.

பி.பி.சி., ஐ.பி.சி. கேட்கிறார்கள். இலங்கையிலிருந்து செல்லும் பத்திரிகைகளை மொய்க்கிறார்கள். அங்கும் இலங்கைத் தமிழர்களால் பத்திரிகைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உலக செய்தி நிறுவனங்களின் செய்திகளைவிட, புலிகளின் செய்திகள் விரைவாக தம்மை எட்டுவதாக பலரும் அங்கு வியப்புத் தெரிவிக்கிறார்களாம்.

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் வெளிநாட்டு கிளைகளில் இணைந்து பணியாற்றுவது ஒரு புறமிருக்க, வெளிநாட்டுப் பணிகளுக்காக என்று தனியாக பிரபாகரனால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டவர்களும் இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் என்ற பெயர்களில் மட்டுமல்லாமல், பல்வேறு பெயர்களில் புலிகள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சட்டப்படி இவற்றை புலிகளின் அமைப்புக்கள் என்று நிரூபிக்க முடியாது.

மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய கையோடு வெளியுலக பிரசாரத்தில் இலங்கை அரசு முன்கை எடுத்திருந்தது. ஆனால் தற்போது படிப்படியான பின்னடைவுகளை சந்திக்கத் தொடங்கியுள்ளது.

●●●

திருமலை மாவட்ட பா.உ. தங்கத்துரை கொலை விவகாரத்தில் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் குழப்பிவிட்டன.

தங்கத்துரையை கொலை செய்தது புலிகளல்ல. தமிழ்க் கட்சி ஒன்றே என்று இலங்கை அரச வானொலி அட்டகாசமாக அறிவித்திருந்தது.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள லேக் ஹவுஸ் பத்திரிகை மறுநாள் வெளியிட்ட செய்தியில்; "தங்கத்துரை பிரபாகரனின் கட்டளைப்படி சுடப்படவில்லை. சுவர்ணத்தின் கட்டளைப்படியே சுடப்பட்டார்" என்று இரகசிய புலனாய்வுக் குழுவினர் நடத்திய விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக தகவல் வெளியிட்டிருந்தது.

லேக் ஹவுஸ் பத்திரிகை வெளியிட்ட தகவல்தான் புலனாய்வுக் குழுவினர் கூறிய உண்மையான தகவலாம். சுவர்ணம் என்று குறிப்பிட்டிருப்பது புலிகளின் மூத்த தளபதியான சொர்ணத்தை.

ஆனால் தலைமைப்பீட உத்தரவு இல்லாமல் சொர்ணம் தானாக முடிவு எடுக்கக் கூடியவரல்ல. நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் சொர்ணத்தின் அணியில் இருந்திருப்பர். அவர்களுக்கு மேலதிக தகவல்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால் இச் செய்தி குழப்பமாக வெளியானதால் இரா.சம்பந்தனுக்கு கொஞ்சம் நிம்மதி.

இரா. சம்பந்தனின் விசுவாசியான ஈழத்து நாதனின் மைத்துனர்தான் சொர்ணம். ஆகவே சொர்ணம் தானாக செய்த ஏற்பாடு என்றால் ஈழத்து நாதனுக்கும் தொடர்போ என்ற பழைய சந்தேகம் புற்றிலிருந்து கிளம்பியிருக்கும்.

ஆனால், புலிகள் தமது நடவடிக்கைகளை உறவுமுறைகளை வைத்து தீர்மானிப்பதில்லை. அதனால் அந்தச் சந்தேகம் அனாவசியம்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 19

**கடந்தவாரம்**

**தனது அமைச்சரவையில் திறமையான சிலருக்கு இடமளிக்கிறான் அமீன். ஐந்து வருட காலம் இராணுவ ஆட்சி தொடரும் என்று வானொலியில் பேசும்போது கூறுகிறான்.**

**இனி....**

# இடி அமீன்

முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் முன்னாள் செயலாளர் சியம்பாவை ஒய்வெடுக்க அனுப்பிய அமீன், பின்னர் ஒருநாள் அழைத்தான்:

**"ஓய்வு எப்படி? ஜாலியாக அனு பவித்தீரா?"** என்றான், பெரிதாக புன்னகைத்தபடி.

"பரவாயில்லை!" என்றார் சியம்பா. தன் காதலியை அமீன் தன் கண் எதிரேயே சுட்டுக்கொன்ற காட்சி இப்போதும் அவர் மனக்கண்ணில் நின்று மிரட்டிக் கொண்டிருந்தது.

**"அனுபவிக்க வேண்டிய நேரத்தில் அனுபவிக்கத் தெரியாதவன் மடையன். என்னைப் பாருங்கள், இப்போதுதான் ஒருத்தியை ருசி பார்த்துவிட்டு வருகிறேன். தானாக வருகிறார்கள்; விடுவானேன்?"** உரத்து நகைத்தான்.

தன் ஆசனத்தைவிட்டு எழுந்தவன் **"வாரும் என் பின்னால்,"** என்றுவிட்டு முன்னால் நடந்தான்.

அவனது பிரமாண்டமான அலுவலக அறையின் ஒரு மூலையில் சிறிய கதவு ஒன்று இருந்தது.

அதனைத் தள்ளித் திறந்தான். தன் உடம்பை வளைத்து அவன் நுழைய. சியம்பாவும் குனிந்துதான் உள்ளே செல்ல வேண்டி இருந்தது.

கதவுதான் சிறிதே தவிர, உள்ளே ஒரு சொர்க்கமே விரிந்தது.

சொகுசான கட்டில்கள் போடப்பட்டிருந்தன. விலை உயர்ந்த விரிப்புக்கள் அவற்றின்மேலே விரிக்கப்பட்டிருந்தன. தாராளமாக மூன்று பேர் ஒன்றாகப் படுத்து உருளக்கூடிய பிரமாண்டமான கட்டில்கள்.

சுவர்களில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன. கட்டிலில் நடப்பதை கட்டிலில் கிடந்தபடியே கண்ணாடியில் காணலாம்.

சியம்பா திறந்த வாய் மூடவில்லை. அமீன் தன் இடிக்குரலில்: **"இங்கே ஒளிவில்லை; மறைவில்லை. இன்ப லோகம். இங்கே உயர்வு இல்லை; தாழ்வு இல்லை. சமத்துவமான உலகம்!"** என்றான்.

சிறு குழந்தைபோல ஒரு கட்டிலில் தாவி அமர்ந்தான். அது ஸ்பிரிங் கட்டில். **"ஒவ்வொரு கட்டிலுக்கு ஒவ்வொரு குணம் இருக்கிறது தெரியுமா?"** என்று கண்ணடித்தான்.

சியம்பா அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

**"கிடைக்கும்போது அனுபவிக்க வேண்டும். அனுபவிக்கும்போது கிடைக்க வேண்டும். அதற்கு நற்பயன் செய்திருக்க வேண்டும். நான் செய்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?"** என்று திடீரென்று கேள்வியை வீசினான் அமீன்.

இடி அமீன்-செயலாக இருந்தாலும், பேச்சாக இருந்தாலும், அதன் அர்த்தம் யாருக்கும் புரிவதில்லை.

அவன் ஒரு கேள்வி கேட்டால், அதனை எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும், கேலியா, கிண்டலா, உண்மையாகவே கேட்கப்படுகிறதா? அல்லது உள்ளே வஞ்சகத்துடன் வேறு ஒரு திட்டத்துடன் ஆழம் பார்க்கிறானா? என்பதெல்லாம் தெரியாமல் எதிரே நிற்பவர் தவித்துப் போவார்.

சியம்பாவும் வெலவெலத்துப் போனார். ஒருவிதமாகச் சமாளித்து: "ஆமாம், தாங்கள் நினைப்பதெல்லாம் நடக்கும்!" என்றார்.

உடனே அமீன்.தனக்கும் தமாஷ் பண்ணத்தெரியும் என்பதுபோல, **"அதிகம் ஐஸ் வைக்கவேண்டாம் சியம்பா. நான் உம்மை சுட நினைக்கிறேன் என்று வைத்துக் கொள்ளும். உடனே நீர் சுடப்பட்டு விடுவீரா? செத்துத்தான் போவீரா? துப்பாக்கி வேண்டும். தோட்டா வேண்டும். சுட விரல் வேண்டும்.."** என்று சிரித்த சிரிப்புக்கு சியம்பாவின் அடிவயிற்றில் பயம் பந்தாக உருண்டது.

தன்னைக் கொல்லப் போகிறானோ என்று பயந்துபோன சியம்பாவின் மனக்கண்ணில் மனைவி, பிள்ளைகள் எல்லாம் தோன்றி மறைந்தனர்.

அந்த நேரத்தில் இடி அமீனின் குரல் ஒலித்தது: **"உம்மை எனது அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப் போகிறேன். இல்லை, நியமித்துவிட்டேன். அதுதான் என் கட்டிலறைவரை கொண்டு வந்து காண்பித்தேன். அந்தரங்கச் செயலாளருக்கே தெரியாத அந்தரங்கம் இருக்கக் கூடாதல்லவா?"** என்று கண்ணடித்தான்.

சியம்பாவால் நம்பமுடியவில்லை. ஆனாலும் அமீன் தொடர்ந்து நடந்து கொண்ட முறையில் இருந்து அமீன் பொய் சொல்லவில்லை என்று நிம்மதி பிறந்தது.

சியம்பாவை தன் அந்தரங்கச் செயலாளராக நியமித்த இடி அமீன், முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் தங்கப் புதையல்கள் பற்றிய தகவல்களை சியம்பாவிடம் இருந்து பெற்றுக்கொண்டான்.

அவற்றில் ஒரு பகுதியை சியம்பாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

சியம்பாவை தன் வலையில் வீழ்த்தவே முதலில் பதவி கொடுத்தான் அமீன். பின்னர் சியம்பாமீது நம்பிக்கை ஏற்பட்டதால் தன் அந்தரங்கச் செயலாளராகவே தொடர்ந்து வைத்துக்கொண்டான்.

தனது தனிப்பட்ட பிரச்சனைகளை சியம்பாவிடம் மனம் விட்டுப் பேசுமளவுக்கு



அவரை நம்பத் தொடங்கினான் அமீன்.

அமீனின் வரலாற்றை பிற்காலத்தில் சியம்பாதான் அம்பலப்படுத்தப் போகிறார் என்பதை மட்டும் அப்போதே ஊகிக்கும் சக்தி அமீனுக்கு இருந்திருந்தால், அவர் தலையை வெட்டி ஐஸ்பெட்டியில் வைத்திருப்பான்.

முன்னாள் ஜனாதிபதி ஒபேடேக்கு விசுவாசமான அதிகாரிகளில் ஒருவன் உடுகா. உகண்டாவின் பொலிஸ் பாண்ட் இசைக்குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவன்.



பத்திரிகையாளர் மாநாட்டில் அமீன்

இடி அமீன் பதவிக்கு வந்ததும் உடுகா நாட்டைவிட்டுத் தப்பி ஓடிவிட்டான்.

"ஒபேடேயைக் கொல்ல திட்டமிட்டான் இடி அமீன். சிங்கப்பூரில் இருந்து ஒபேடே நாடு திரும்பியிருந்தால் அவர் தலை தப்பியிருக்காது!" என்று உடுகா வெளிநாட்டில் இருந்தபடி தகவல்களை வெளியிட்டான்.

உடுகாவின் நண்பன் ஒருவன் உகண்டாவின் இராணுவத்தில் பணியாற்றினான். அதனை தன் உளவுப்பிரிவின் ஊடாக மோப்பம் பிடித்த அமீன், அவனை அழைத்தான்.

**"உன் நண்பன் உடுகா சூதுவாது தெரியாதவன். யாரோ அவனை வைத்து ஆட்டுவிக்கிறார்கள். நீ என்ன செய்கிறாய் என்றால், உடுகாவை சமாதானப்படுத்தி உண்மையைக்கூறி அழைத்துவா. எனக்கு அவன்மீது கோபமே கிடையாதப்பா. ஏதோ அறியாத்தனத்திலே செய்கிறான். வந்து என்னை ஒருதரம் பார்த்துவிட்டு வேலையை பொறுப்பெடுக்கச் சொல்லு!"**

அமீன் மிக இயல்பாக உடுகாவின் நண்பனிடம் பேசினான்.

உடுகாவிடம் சென்ற அவனது நண்பன் 'அமீனை நம்பலாம்' என்று உத்தரவாதம் கொடுக்க, உடுகா உகண்டாவுக்குத் திரும்பினான்.

அமீனை சந்திக்கச் சென்ற உடுகாவை அமீன் கட்டித்தழுவி வரவேற்றான். **"ஒபேடேயின் ஆட்களில் எத்தனை பேருக்குப் பதவிகளைத் தூக்கிப் போட்டிருக்கிறேன். அவர்களும் தயக்கமே இல்லாமல் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். நீ சுத்தமான ஆண்பிள்ளை. தானாக வந்து நிற்கவில்லை பார்த்தியா? நானாக அல்லவா அழைக்க வேண்டி இருந்தது!"** என்று உடுகாவைப் புகழ்ந்தான் அமீன்.

அமீன் இத்தனை நல்லவன் என்று தெரியாமல் இருந்துவிட்டோமோ? என்று உள்ளூர வருந்தினான் உடுகா.

மறுபடி அவனது வேலையைப் பொறுப்பேற்குமாறு கூறிய அமீன், கார் ஒன்றில் அவனை அனுப்பிவைத்தான்.

உடுகா சென்ற கார் சித்திரவதைக்குப் பெயர்போன மலாயா முகாம் நோக்கி விரைந்தது.

மலாயா விடுதிக்குள் உடுகாவை வரவேற்று, ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றனர்.

உடுகாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக சந்தேகம் எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்தது.

அடுத்து நடந்த சம்பவங்கள் அந்த சந்தேகத்தை பயங்கரமான முறையில் ஊர்ஜிதம் செய்தன.

**(இடி தொடரும்)**

## தருவது ரசிகன்

# கடத்தப்பட்ட தேவயாணி

**த**மிழக வார சஞ்சிகை 'நக்கீரன்' திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்திய அரசியலில் நடிகைகள் மற்றும் அழகிகள் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்பயன்படுத்தப்படுவது புதுமையல்ல.



சமீபத்தில் நடந்த சமாச்சாரம் இது. காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவர் ஆர்.கே. தவான்.

ஜெயலலிதாவுக்கு சோனியா காந்தி எழுதிய கடிதம் ஒன்றுடன் சென்னை சென்றார் தவான்.

பாரதிய ஜனதா உறவை ஜெயலலிதா முறித்துக்கொண்டால், அவரது ஆதரவு தமக்கு தேவைப்படலாம் என நம்புகிறார் சோனியா. அதனால் நட்பை ஏற்படுத்தவே அக் கடிதம்.

ஆனால் தற்போதைய நிலையில் தவானை சந்திப்பது வெளியே தெரிந்தால் பெரும் பிரச்சனையாகிவிடும் என்று நினைத்தார் ஜெயா. அதனால் தவானை சந்திப்பதை தவிர்த்தார்.

ஆனால் தவான் மனம் வருந்தக்கூடாதே என்பதற்காக அவரைக் குஷிப்படுத்த நடிகை ஒருவரை ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டாராம் ஜெயா.

முன்பு ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது சுகன்யா, நக்மா ஆகியோரை பயன்படுத்தி புதுடில்லி பெரும்புள்ளிகள் பலரை சரிக்கட்டியுள்ளனர்.

ஆர்.கே. தவானை சந்திக்க நடிகை தேவயாணியை சிபாரிசு செய்தாராம் மேடம். அவரோ தனக்கு படப்பிடிப்பு இருப்பதாகக் கூறி மறுத்தாராம்.

கடைசியாக மூன்றுபேர் கொண்ட கோஷ்டி ஒன்று அவர் வீட்டுக்கு நேராகச் சென்று பணத்தை வாரி இறைத்துவிட்டு, கட்டாயப்படுத்தி கொண்டுபோய் விட்டனராம்.

மாலை ஆறுமணி முதல் இரவு எட்டுமணிவரை தவானின் அறையில் தங்கவைக்கப்பட்டாராம் தேவயாணி.

அதன்பின்னர் உற்சாகமாக புறப்பட்ட தவான் புதுடில்லிக்கு விமானத்தில் பறந்துவிட்டார்.

# இன்டர்நெட் விபரீதம்

**பி**ரசவம் நடப்பதை நேரடியாக ஒளிபரப்பிய காட்சியை பார்த்த காதலர் இருவருக்கு விபரீதமான யோசனை தோன்றியுள்ளது.



தாங்கள் இருவரும் முதன் முதலாக உடல் உறவு வைத்துக் கொள்வதை இன்டர் நெட்டில் நேரடியாக ஒளிபரப்புச் செய்ய முன் வந்துள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள பிரபல ஹொட்டல்கள், விடுதிகளில் இவ்வாறான சமாச்சாரங்கள் பலர் முன்பாக அரங்கேறுவது வழக்கம். 'லைஃப் ஷோ' என்ற பெயரில் அக் கண்றாவிகள் நடக்கும்.

தொலைக் காட்சிகளிலும் இவற்றுக்காக தனியான அலைவரிசைகள் இருக்கின்றன. எனவே இதுவரை நடக்காத சங்கதியைப் போல பரபரப்பு செய்தியாக இதனை கருதக் காரணம் என்ன?

தாங்கள் இருவரும் முதல் முறையாக மனப்பூர்வமாக இணையப்போவதாக காதலர் இருவரும் கூறிய கிளு கிளுத் தகவல்கள் தான் அப்படி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பெண்ணின் பெயர்: டயானே. வயது 18. காதலர் பெயர்: மைக். இருவரும் அமெரிக்கா புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் இன்டர் நெட்டில் தோன்றி தாங்கள் செய்யப்போகும் சாகசம் பற்றி முன்னறிவித்தனர். அப்போது முகத்தை மூடியிருந்தனர். 'அந்தநாள் மட்டும் எல்லாமே வெளிப்படையாக இருக்கும்' என்றும் கூறத் தவறவில்லை.

ஆகஸ்ட் ஐந்தாம் திகதி இன்டர் நெட்டில் நேரடி ஒளிபரப்பாம்.

'இன்டர் நெட்டை' பிரபலமாக்கி பரவலாக்கும் உத்தி என்று இதனைப் பற்றிக் கூறப்படுகிறது.

# ஆக, ஒரு இலட்சம்



**அ**மெரிக்காவில் 'வயாகரா' மாத்திரையை கண்டுபிடித்தாலும் கண்டுபிடித்தார்கள். உலகெங்கும் இருந்து ஏகப்பட்ட கிராக்கி.

செக்ஸ் ஊக்கியான இம்மாத்திரை ஆண்களுக்குரியது. விலை மகா உயரம். அப்படியிருந்தும் பல இலட்சக்கணக்கான மாத்திரைகள் இதுவரை விற்றுத் தீர்ந்துவிட்டன.

பல நாடுகளில் இம்மாத்திரை விற்பனைக்கு இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. அவ்வாறான நாடுகளில் ஒன்று ஜப்பான்.

இதனால் வசதியுள்ள ஜப்பான் ஆண்கள் பலர் ஹவாய் தீவுக்கு விரைகிறார்கள். அங்கு வயாகரா தாராளமாகக் கிடைக்கிறது. ஹவாய் தீவுக்கு செல்வது, தங்குவது, மருத்துவ ஆலோசனை பெறுவது, மாத்திரைகள் வாங்குவது உட்பட ஆகும் செலவு அதிகமில்லை, ஆக ஒரு இலட்சம் ரூபாய்கள்தானாம்.

ஒரு இலட்சம் ரூபாயில் இளமை திரும்பும்போது ஏன் விடப்போகிறார்கள்?

இதற்கிடையே அவுஸ்திரேலியாவில் வயாகராவை விற்பனை செய்ய அனுமதிக்கும்படி அங்குள்ள ஆண்களும் கோரிக்கை விடத் தொடங்கியுள்ளனர். அவுஸ்திரேலிய அரசு பரிசீலித்து வருகிறது.

# மக்கள் தொகை

**கு**டும்பக் கட்டுப்பாட்டு பிரசாரங்கள் எல்லாம் எடுபடுவதுபோல தெரியவில்லை.

1999ம் ஆண்டு ஜூன் மாதத்தில் உலகின் மக்கள் தொகை ஆறு இலட்சம் கோடியை எட்டிப் பிடித்துவிடுமாம். இத்தகவலை ஐ.நாவின் மக்கள் தொகை நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகில் தற்போது ஒவ்வொரு ஆண்டும் இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் குழந்தைகள் பிறக்கின்றன.

# "பூனைகள் வேண்டாம்"

**ஜ**ப்பானில் பூனைகளின் தொல்லை அதிகமாகிவிட்டது. நம் நாட்டில் எலிகளின் தொல்லைகள் தானே அதிகம்.



பூனைகளின் தொல்லைகள் தொடர்பாக கடந்த ஆண்டு மட்டும் 10 ஆயிரம் புகார்கள் ஜப்பான் தலை நகரான டோக்கியோ மாநகராட்சிக்கு கிடைத்துள்ளனவாம்.

டோக்கியோவில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் பூனைகள் உள்ளனவாம். அவற்றில் பத்து சதவீதம் பூனைகள் தங்குமிடம் இல்லாமல் சாலைகளில் சுற்றித் திரிகின்றன.

பூனைகளின் 'மியாவ், மியாவ்' சத்தம் மற்றும் துர்நாற்றம் என்பவை தொடர்பாகவும் புகார்கள் கிடைத்திருக்கிறதாம்.

பூனை வளர்ப்பவர்கள் அவற்றை வீட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று டோக்கியோ மாநகராட்சியினர் உத்தரவிட்டுள்ளனர்.

# தினமும் திண்டாட்டம்



**வே**லையில்லாத் திண்டாட்டம் ஐரோப்பிய நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. இத்தாலி, ஃபிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் 15 சதவிகித மக்கள் வேலையின்றி உதவித்தொகை பெற்று வருகின்றனர். குறைந்த பட்சம் ஒவ்வொருவருக்கும் 40 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்பதால் இந்நாடுகளின் வருமானத்தில் 30 சதவிகிதம் இதற்கே போய்விடுகிறது.

இந்த வரிசையில் இப்போது ஜெர்மனும் சேர்ந்துள்ளது. மக்கள் தொகையில் 13 சதவிகிதம் வேலையின்றி இருக்கின்றனர். எனவே தங்களுக்கு வேலை தர வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டு ஊர்வலம் சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

...அரசாங்கம் என்ன செய்யப்போகிறதோ?



படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி

## வீடு பெயர்வு

வீடுகளைவிட்டு மக்கள் இடம்பெயர்வது நமக்கு புதுமையல்ல. நம்மக்கள் பலர் அனுபவிக்கும் கொடுமைதான். ஆனால் வீடே இடம்பெயர்வது புதுமைதானே.

மலேசிய தலைநகரான கோலாலம்பூரிற்கு 500 கிலோமீட்டர் வடக்கேயுள்ள பெறுபாங் என்ற கிராமத்தில் இருந்த 30 வருடம் பழமையான மர வீடு இது.

ஒரு கிலோமீட்டர் தூரமுள்ள இன்னொரு இடத்திற்கு பெயர்த்தெடுத்து கொண்டு செல்கின்றனர். ரசியாவில் முன்பு பெரும் நூல் நிலையத்தையே அத்திவாரத்தோடு வேற திசைநோக்கி திருப்பிவைத்தனர். அதோடு ஒப்பிட்டால் இது சுலபம்தான்.





## பல்லிலே கலை வண்ணம்

கல்லிலே கலை வண்ணம்கண்ட கலைஞர்களைப் போல, பல்லிலே கலை வண்ணம் காண்கிறார் பல்வைத்திய நிபுணர் ஜீன் சௌவொட்.

ஃபிரான்ஸின் தலை நகரான பாரிஸில் பல் வைத்திய சாலையை நடத்தும் இவர் சிறந்த ஓவியரும் கூட. தன்னிடம் செயற்கைப் பல்வரிசையைக் கட்ட வந்த ஒருவருக்காக, பிரசித்தி பெற்ற ஓவியக்கலை நிபுணரான வின்சென்ற் வான் கொஃப் என்பவர் தன்னைத்தானே வரைந்த ஓவியத்தை மாதிரியாக வைத்து பல்லிலே சித்திரமாக வரைகிறார்.

ஜீன் சௌவொட் எத்தகைய ஓவியத்தையும் எவருடைய பல்லிலும் வரைந்து தருவார். இதற்கு அவர் நிர்ணயித்துள்ள விலை- 50 முதல் 160 டொலர்- ஓர் ஓவியத்துக்கு மட்டும் நம்மூர் மதிப்பில் 3250 ரூபாயிலிருந்து 10400ரூபாய்வரை.



## வலிமையான மனிதன்

மல்யுத்தத்தை கொரிய மொழியில் 'ஸிரும்' என்று அழைப்பர். கொரியாவில் கிராமங்கள் தோறும் போட்டிகள் நடக்கும். இறுதிப் போட்டிதான் விறு விறுப்பு.

இரவு நேரத்தில் கடற்கரை ஓரத்தில் மங்கிய வெளிச்சத்தில் இறுதிப் போட்டி நடக்கும். அந்தப் பின்னணியில் மோதல் நடக்கும்போது மலைகள் இரண்டு அசைவது போல் தெரியும்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் சாம்பியனுக்கு 'தெய்வத்தின் ஆசிபெற்ற வலிமையான மனிதன்' என்ற பட்டம் வழங்கப்படுகிறது.

## பெரு முகம்

கருங்கல்லைக் காவியமாக்கும் நிபுணர்கள் வடித்து வைத்த கலைச் செல்வங்கள் காலத்தால் அழிக்கப்படாதவை. இந்தியாவில் தான் புராதனக் கற்சிற்பங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சாகாவரம் பெற்று இன்றும் பல கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது கல்லிலே கலைவண்ணம் காணும் கலைஞர்கள் எல்லா நாடுகளிலும் தங்கள் கைவண்ணங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவின் சௌத் டகோடா மாநிலத்தில் உள்ள பிளாக் ஹில்ஸ் என்ற இடத்தில் விதி ஒரமிருந்த குன்றினைச் செதுக்கி சியொக்ஸ் தலைவரான கிரேஸி ஹோர்ஸ் என்பவரின் முகத்தை இவ்வாறு உருவாக்கியுள்ளனர்.

அண்மையில் இந்தச் சிலை வடிவம் திறந்து வைக்கப்பட்டது. சிலைக்கான இறுதிக் கட்ட வேலைகளைப் பூர்த்தி செய்யும் கலைஞர்களின் அளவைக்கொண்டு இச்சிலையின் பருமனை அவதானிக்கலாம். உருவச்சிலையின் மூக்கில் இரு கலைஞர்கள் எறும்புகள் போல நிற்கிறார்கள் பாருங்கள். அதிலிருந்தே சிலையின் பிரமாண்டத்தை புரிந்துகொள்ளுங்கள்.





## இடையே முறிந்த பயணம்

ஜேர்மனியில் சமீபத்தில் இடம்பெற்ற உயர்வேக இரயில் விபத்து இது. நம்மூர்த் தொலைக்காட்சிகளிலும் காண்பித்தார்கள்.

மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் காட்சி இது.

முனிச் நகரிற்கும் ஹம்பேர்க் நகரிற்கும் இடையேதான் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து நடந்தபோது இரயிலின் வேகம் மணிக்கு 200 கிலோமீட்டர்.

விபத்து இடம்பெற்றபோது 13 பெட்டிகள், முன் எஞ்சின், பின் எஞ்சின்களைக் கொண்ட இந்த இரயில்வண்டி மேம்பாலம் ஒன்றின் கீழாகச் சென்றுகொண்டிருந்தது.

அவ்வேளை மேம்பாலத்தில் சென்ற காரொன்று சுவரை உடைத்து இரயில் பெட்டிமேல் விழ, பெட்டிகள் கழன்று மேம்பாலத்தின் கால் தூண்களில் மோதிச் சிதறுண்டன.

இதில் 100ற்கு மேற்பட்ட பயணிகள் இறந்தனர். மேம்பாலம் இரயில் பெட்டிகளின்மேல் நொருங்கி விழுந்ததால் அதிகம் பேர் இறக்க வேண்டியதாயிற்று.

வேடிக்கை என்னவென்றால் முன் எஞ்சின் தனியாகச் சென்று அடுத்த புகையிரத நிலையத்தில் நின்றபோதுதான் ஓட்டுநருக்கே விபரீதம் புரிந்ததாம்.

தானும் எஞ்சினும் மட்டும்தான் வந்து சேர்ந்தோம் என்ற விபரம் அப்போதுதான் புரிந்ததாம்.

தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த மேலைநாட்டில் இது புதுமையல்லவா?

## டாங்கி எதிர்ப்பு ஆயுதம்

### LOW 80 (லோ 80)

டாங்கி எதிர்ப்பு மென்ரக ஆயுதம்.

இன்றைய நவீன யுத்தத்தில் டாங்கிகளை தகர்க்க உபயோகப்படும் ஆயுதங்களில் ஒன்று. பிரதான யுத்த டாங்கிகளை (MAIN BATTLE TANK) அதன் எப்பாகத்தை நோக்கியும் துல்லியமாகக் குறிவைத்து இலகுவாகத் தாக்கலாம். அதாவது டாங்கியை குறுகிய தூரத்தில் வைத்து தாக்கியழிக்க இலகுவான ஆயுதம்.

நிலையான மற்றும் அசையும் இலக்குகளைத் துல்லியமாக குறிவைத்துத் தாக்க அதில் பொருத்தப்பட்டுள்ள 'குறிகாட்டி' உதவும். 'லோ 80' இலிருந்து கிளம்பும் ஷெல் 94 மில்லிமீட்டர் விட்டமுடையது. இது 650 மில்லிமீட்டர் தடிப்பங்கொண்ட தடிப்பமான டாங்கியின் உடலைத் தாக்கி உள்நுழைந்து வெடித்துச் சிதறும் வல்லமை கொண்டது.

அழிப்பதில் உயர் வலுக்கொண்ட இந்த லோ 80- உபயோகிப்பவர்க்கு உற்றதோழன். இதனால் சுட்டுவிட்டு அப்படியே உடலை வீசிவிட்டுப் போய் விட வேண்டியதுதான். ஒரு முறைதான் உபயோகிக்கலாம்.

தற்போதைய மருத்துவ ஊசி போல இதுவும் உபயோகித்த பின்பு தூக்கி வீசி விடவேண்டிய ரகம்தான்.

ஒரு தனி மனிதனால் இலகுவாகக் காவிச் செல்லக்கூடிய எடை கொண்டது. எனவே கெரில்லாக்கள் அல்லது விசேட கொமாண்டோக்களின் உயிர்த் தோழன் இது. பராமரிக்க வேண்டிய சிரமமும் இல்லாதது.

பிரிட்டனின் இராணுவம் பயன்படுத்துகின்றது. மற்றும் வெளியிடங்களுக்கும் விற்கப்படுகின்றன.

நிறை-10 கிலோகிராம்

மடித்த படி ஏவுகருவியின் நீளம்- 1 மீட்டர்

தாக்கத் தயாரான பின்பு நீளம் (விரித்தபடி)- 1.5 மீட்டர்.

ஷெல்லின் எடை- 4.6 கிலோகிராம்.





படிப்பகம்

www.padippakam.com

## மினி சினி

* பி. வாசு தற்போது சத்யராஜ் நடிக்கும் 'பொண்ணு வீட்டுக்காரன்', பார்த்திபன் நடிக்கும் 'காக்கைச் சிறகினிலே' ஆகிய இரண்டு படங்களை இயக்கி வருகிறார். இதையடுத்து இவர் பிரபு நடிக்கும் படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

* மோகன்லால்-மம்முட்டி இணைந்து நடிக்கும் 'ஹரிகிருஷ்ணா' என்ற மலையாளப் படத்தில் இந்தி நடிகை ஜூஹி சாவ்லா கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தை பாசில் இயக்குகிறார்.

* கே. பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனம் தயாரிப்பில் செல்வா இயக்கும் 'பூவேலி' படத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிப்பது தெரிந்ததே. இப்படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடிக்க கௌசல்யாவை ஒப்பந்தம் செய்துள்ளார்.

* 'ஜோடி சிம்ஹகபூ' என்ற தெலுங்குப் படத்தில் தந்தை-மகன் என இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார் கமல். இப்படத்தில் பிரகாஷ்ராஜும் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.

* சரத்குமார்-நக்மா ஜோடியாக நடிக்கவிருந்த 'சிம்மராசி' படத்திலிருந்து நக்மா நீக்கப்பட்டது தெரிந்ததே. இப்போது அந்த வேடத்தில் கனகாவை நடிக்க வைக்கவுள்ளனர். ஏற்கனவே கனகா, சரத்குமாருடன் 'சாமுண்டி' படத்தில் நடித்துள்ளார்.

* 'கோல்மால்' படத்தை இயக்கி நடித்திருந்த செல்வா, தற்போது இவரது அண்ணன் டாக்டர் ராஜசேகர் நடித்த தெலுங்குப் படத்தின் தமிழாக்கத்திற்கு வசனம் எழுதி வருகிறார். இப்படம் 'தலைவா' என்ற பெயரில் தமிழில் வெளிவரவுள்ளது.

* பிரசாந்த்-சிம்ரான் இணைந்து நடிக்கும் 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தில் கௌரவ வேடத்தில் விக்னேஷ் நடிக்கிறார்.

* ரக்ஷனா, சுவலட்சுமியைத் தொடர்ந்து கல்கத்தாவிலிருந்து இறக்குமதியாகும் புதுமுகம் கஜோல் சக்கரவர்த்தி. இவர் 'மகாஜித்தன்' படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

* 'பாஞ்சாலங்குறிச்சி', 'இனியவளே' ஆகிய படங்களை இயக்கிய சீமான், அடுத்து விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'வைகைக் கரையோரம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* இந்தி நடிகர் கோவிந்தா நடித்த 'கூலி நம்பர் வன்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவர் நடித்த படங்களுக்கு 'ஹீரோ நம்பர் வன்', 'ஆன்டி நம்பவர் வன்' என்று பெயர் வைக்கப்பட்டன. இப்போது கோவிந்தா நடிக்கும் புதிய படம் ஒன்றின் பெயர் 'அனாரி நம்பவர் வன்.'

## கமல் நாயகம்

குறுந்தாடி வளர்ந்துவிட்டது. தூக்கிவாரப்பட்ட முடி கும்மென்று இருக்கிறது. மருதநாயகத்துக்காக கமல் தன்னை இயற்கையாகவே மாற்றிக் கொண்டிருக்கிறார்.

புது கெட் அப்பில் வெளியே நடமாடக்கூடாது என்பதால் பொது நிகழ்ச்சிகளை தவிர்த்து வருகிறாராம். கௌதமியின் கல்யாணத்துக்கு கமல் செல்லாமல் விட்டதற்கும் அதைத்தான் காரணம் சொல்கிறார்கள். தனது உதவியாளரிடம் பூங்கொத்து கொடுத்து அனுப்பி இருந்தாராம்.


ஹீரா

## சினி விசிட்


முரளி-சுபாஸ்ரீ
படம்: கண்டக்டர் மாப்பிள்ளை

## ஊர்வசியின் காதலர்

இங்கே 'ஆக்ரோஷம்' படக் காட்சியில் தோன்றும் மனோஜ் கே. ஜெயன் யார் தெரியுமா? நடிகை ஊர்வசியின் காதலர். மலையாளத்தில் முன்னணி நடிகர். இடையில் சில காலம் முறிந்திருந்த காதலை மறுபடி நேராக்கி ஒட்டவைத்துள்ளனர்.

ஆனால் இந்த நிமிஷம்வரை இருவரும் தங்கள் காதலை பிரகடனப் படுத்தவில்லை.

கரன்–இந்து (முகப்பில்)
படம்: கண்ணாத்தாள்

சித்தாரா

## காதோடு சொல்லுகிறோம்

தன் மகனுக்காக காதல் சின்னத்தின் பெயரில் படம் எடுக்கும் இயக்கு... மகனுக்கு ஜோடியாக கல்கத்... கியை போட்டிருந்தார். இ... அந்த அழகியை கழட்டிவிட... கிறார். சிம்ம நடிகையின் ... வைக்க எண்ணுகிறாராம்... சிம்ம நடிகை தனியாக ச... இந்த புதிய எண்ணமா...

மூன்றெழுத்து 'ச'... ஜோடி சேர்ந்தார். இ... குலம், நடிகரும் நடி... கூடாகிவிட்டாராம். ...

'வடிவு' நடி... அரச உயரதிகாரி... தன் பெயராகக் ...


பிரபு-தேவயானி
படம்: என் உயிர் நீதானே


மனோஜ் கே. ஜெயன்-சொர்ணா
படம்: ஆக்ரோஷம்

## நடிகர் விஜய் திடீர் முடிவு இலங்கைப் பெண் மணமகள்

முதுகுவலி குணமாகிய விஜய் 'நிலாவே வா' 'என்றென்றும் காதல்' ஆகிய படங்களில் நடிக்க இலண்டன் சென்றார்.

இலண்டனில் விஜய்க்கு பரம ரசிகை ஒருத்தர் இருப்பதாகவும், அவர் வீட்டிலேயே தங்கப்போவதாகவும் சினி விசிட்டில் சூசகமாகத் தெரிவித்திருந்தோம் அல்லவா.

இப்போது அதனை விஜய் மற்றும் அவரது தந்தை இயக்குநர் சந்திரசேகரன் ஆகியோர் தமது வாயாலேயே ஒப்புக்கொண்டு விட்டனர். ஆனாலும் ஜூன் மாதம் 22ம் திகதி தனது பிறந்த நாளில்தான் விஜய் அந்தப் பெண்ணை கண்டதாகவும், தமக்கும் பிடித்துவிட்டதாகவும் சந்திரசேகரன் கூறுவது மட்டும் கொஞ்சம் பொய்.

தான் எப் பெண்ணையும் காதலிக்கவில்லை, என்று பெற்றோருக்கு பிடித்த பெண்ணையே மணக்க மு... வந்துள்ளதாகவும் விஜய்யும் கூறியிருக்கிறார். இது த... ஏனைய ரசிகைகள் மனமுடைந்து போகக்கூடாதே என்... காக விஜய் போட்ட போடு.

விஜய் மணக்க நிச்சயமாகியுள்ள பெண்ணின் ... சங்கீதா. இவரது தந்தை சொர்ணலிங்கம் மிக... தொழிலதிபர். தாய் நிர்மலா. இருவரும் இலங்கைத் த... பல ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் ... இலண்டன் சென்று குடியேறிவிட்டனர்.

சங்கீதா விஜய்யின் பரமரசிகை. சில ஆ... தினமும் ஃபோனில் தொடர்பு கொண்டு பே... ஒருமுறை சென்னை வந்து நேரிலும் சந்தி... தகவல்.

முதலில் இந்தக் காதலுக்கு சந்திரசே... கொடி காட்டினாராம். பின்னர் சங்கீ... பின்னணியை அறிந்து பச்சைக் கொடி... சங்கீதா மருத்துவத் துறையில் கல்வி... ஒன்றரை வருடம் சென்றபின்னர்தான் ... உத்தேசித்துள்ளனர்.

### மறைக்க மு...

குடும்ப கௌரவம் கருதி வி... விவகாரத்தை சங்கீதாவின் குடும்... சொல்ல விரும்பவில்லை. இரு... செய்த ஏற்பாடுதான் எங்கின்றன... அப்படியானால் இலங்கையை... தனது மகளுடன் விஜய்யின்... வேண்டிய அவசியம் என்ன? விஜய்யின் பிறந்த நாள்... தெரியவந்தது? முடி...

## மௌன அஜித்

தனது காதலியும், தற்போதைய தனது நிர்வாகியுமான நடிகை ஹீராவுடன் வெளிநாடு சென்ற அஜித்குமார் அங்கு ஒப்பரேஷன் செய்து கொண்டு திரும்பினார்.

முன்பெல்லாம் படப்பிடிப்புக்களில் சரளமாகப் பேசும் அஜித்குமார் தற்போது பலத்த மௌனம் சாதிக்கிறார்.

தனது காட்சி எடுக்கப்பட்டதும் மேக்கப் அறைக்குள் சென்று கதவைத் தாழ்போட்டுக் கொள்கிறார்.

அஜித்குமாரின் மௌனம் தொடர்பாக உதவி இயக்குநர் ஒருவர் கூறிய கருத்து யாதெனில்: "தன்னுடைய மிகப் பெரிய வெற்றிப் படம் ஒன்றை கொடுத்துவிட்டுத்தான் அஜித் முன்புபோல சரளமான ஆசாமியாக மாறுவார். 'வாலி' படம் அஜித்குமாருக்கு அப்படி ஒரு திருப்பத்தை கொடுக்கும்" என்கிறார் அந்த உதவி இயக்குநர்.

## சொந்தப் படம்

என்னிடம் என்ன வளம் இல்லை? ஏன் இந்திக்காரிகளிடம் ஏங்குகிறார்கள்? என்று கோபத்தின் உச்சிக்கு போய்விட்டார் விசித்ரா.

சொந்தப்படம் எடுக்கும் யோசனையும் இருக்கிறதாம். தற்போது படவாய்ப்புக்கள் இல்லையென்றாலும் நட்சத்திர கலைவிழா என்ற பெயரில் பல நாடுகளுக்குச் சென்று திறமையை காண்பித்து நிறைய சம்பாதித்திருக்கிறார்.

சம்பாதித்ததை வைத்து மேலும் சம்பாதிக்க படம் எடுக்கப் போகிறாராம்.

## தந்திர செண்பகா

தன்னை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்களிடமும், இயக்குநர்களிடமும், செண்பகா தந்திரம் ஒன்றைக் கையாளுகிறாராம்.

'அப்படியே என் மாமா பையன் மாதிரி இருக்கிறீர்கள்' என்று கிறக்கமாகக் கூறுவாராம். இயக்குநர்கள் குளிர்ந்து போகிறார்கள். குளிரவைக்கும் வித்தைகளையும் கற்றுத் தேர்ந்துவிட்டாராம் செண்பகா.

www.padippakam.com

## வசனம் பிரபாகர்

விஜய்-கௌசல்யா நடிப்பில் வெற்றி பெற்று ஓடிக்கொண்டிருக்கும் படம் 'ப்ரியமுடன்' இப்படத்தின் வசனங்கள் நச் நச் என்று குத்து விழுவது போல உள்ளன என்று பலரும் பாராட்டுகின்றனர்.

வசனம் எழுதியிருப்பது யார் தெரியுமா? முரசின் வாசகர்களும் நன்கு அறிந்தவரான பட்டுக்கோட்டை பிரபாகர்.

பட்டுக்கோட்டை பிரபாகர் மட்டுமல்ல, சுபா என்று அழைக்கப்படும் இரட்டை எழுத்தாளரான சுரேஸ், பாலா ஆகியோரும் சினிமாவில் மூழ்கிவிட்டனர். ஏற்கனவே சுஜாதா, பாலகுமாரன் போன்ற பிரபலங்கள் சினிமாவிற்குள் மூழ்கி எழுந்துள்ளனர். ராஜேஸ்குமார் தேடிவந்த வாய்ப்புக்களை ஒதுக்கிவிட்டார்.




ராணி
படம்: சந்திப்போமா

## சரத்துடன் விஜயசாந்தி இயக்கம் செல்வமணி

விஜயகாந்த், சத்யராஜ் ஆகியோருடன் ஜோடியாக தமிழில் நடிக்க உடன்பட்டு, பின்னர் நழுவியவர் விஜயசாந்தி.

தெலுங்கில் சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்திக்கு தமிழிலும் தனக்கு முக்கியம் உள்ள பாத்திரம்தான் தேவை. அதனால் தான் விஜயகாந்த், சத்யராஜ் போன்றோருடன் நடிக்காமல் நழுவினார்.

தெலுங்கில்கூட தனக்கு அடக்கமான ஹீரோக்களாக சிபாரிசு செய்தே அதிக படங்கள் நடித்துள்ளார். ஆனந்த், ராம்கி, போன்றோர் விஜயசாந்தி குத்தகை எடுத்த ஹீரோக்கள். அவர் மனமறிந்து செயற்படும் இளம் ஹீரோக்கள்.

அப்படியாகப்பட்ட விஜயசாந்தியை சரத்குமாருடன் ஜோடியாக நடிக்க வைக்கப் போகிறாராம் ஆர்.கே. செல்வமணி.

ரோஜாவின் காதலரான ஆர்.கே. செல்வமணிதான் சரத்குமாரை 'புலன் விசாரணை' படம் மூலம் வில்லனாக பிரபலப்படுத்தியவர்.

சரத், விஜயசாந்தி இணைந்து நடிக்கப்போகும் படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை. கறுப்புப் பூனை படை அதிகாரியாக சரத்குமாரும், உளவுத்துறை அதிகாரியாக விஜயசாந்தியும் சரிசமமான பாத்திரங்களில் தோன்றுவார்களாம்.

## ரஜினி பட்ட அவதி

கள்ள வீடியோவுக்கு எதிராக நடிகர், நடிகைகளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

நீளமான 'ட்ரக்' வண்டியில் 70ற்கு மேற்பட்ட நடிக நடிகைகள் நின்றனர்.

சூப்பர் ஸ்டார் உட்பட நடிக நடிகைகளைப் பார்க்க வீதியெங்கும் மக்கள் வெள்ளம்.

அரை மணிநேரத்திற்கு ஒரு தடவை சிகரெட் பிடிக்கும் ரஜினிகாந்த் அன்று கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் தாக்குப் பிடித்தார். ஊர்வலம் நீண்டுகொண்டு போனதால் பொறுமை இழந்தார்.

தன்னைச் சுற்றி நின்ற நடிகர், நடிகைகளிடம் அனுமதி பெற்றுக் கொண்டு 'ட்ரக்' நடுவே குந்தியிருந்து ஒரு நிமிடம் தம் அடித்தார். அது வெளியே தெரியாமல் நடிகர் நடிகைகள் அவரைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டனர்.

இன்னொரு தகவல், விஜயகாந்த் பதினைந்து வருடங்களாக சிகரெட் புகைத்தார். சமீபத்தில் கைவிட்டுவிட்டார். காரணம்: மனைவியின் கண்டிப்பான உத்தரவு.



செல்வா-மோனிகா நெருக்கம்
படம்: கோல் மால்

...கையை நடிக்க
...மீபத்தில் இயக்குநரை
...து அளவளாவிய பின்னர்தான்
...கை முன்றெழுத்து 'ராம' நடிகருடன் ஒரு படத்தில்
...லேயே நடிகையை இழுத்துக் கொண்டு போய் விட்டார் தாய்க்
...கமராவுக்கு பின்னாலும் நெருங்கும் சங்கதி அறிந்துதான் தாய்க்குலம்
...நடிகையின் தங்கையை நடிகர் காதலிப்பது தாய்க்குலத்திற்கு தெரியுமாம்.
...ன் ராசியாக இருந்த வி.ஐ.பி. இயக்குநர் விலகிக் கொண்டாராம். இப்போது நடிகை
...சிலரை உற்சாகப்படுத்தி வருகிறாராம். அதுமட்டுமன்றி ரஜினி நடித்த படம் ஒன்றின் பெயரை
...ண்ட தயாரிப்பாளர் ஒருவர்தான் தற்போது 'வடிவு' நடிகையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகியுள்ளாராம்.



திரையுலக மறுபக்கம் 64

## தமிழ் திரையுலக தனி அகராதி

### செல்வத்தில் மிதந்து ஏழ்மையில் மடிந்தவர்

திரையுலகில் சில சமாச்சாரங்களுக்கு தனி அகராதி இருக்கிறது. 'டிஸ்கஷன்' பண்ணுவது என்றால் விவாதிப்பது என்று நினைப்பவர்கள் திரையுலக அகராதி தெரியாதவர்கள்.

இயக்குநர், அல்லது ஹீரோ, அல்லது தயாரிப்பாளர் ஒரு நடிகையை 'டிஸ்கஷன்' பண்ண வருமாறு அழைத்தால் அதன் அர்த்தமே தனி.

நடிகைகளுக்கும் அர்த்தம் புரிந்துவிடும். புது முக நடிகைகளுக்கு அனுபவம் ஏற்படும்வரை வேண்டுமானால் அர்த்தம் தெரியாமல் இருக்கலாம். அர்த்தம் தெரியாமல் அவதிப்பட்ட நடிகை ஒருவரது கதை இது.

தேவலோக அழகிகளில் ஒருவரது பெயரைக் கொண்டவர் அந்த நடிகை. ரசிகர்களை சிரிப்பூட்டுவதிலும் வல்ல கதாநாயகி என்று தற்போது புகழ்பெற்றுள்ளார்.

நடிகரும் இயக்குநருமான முருங்கைக்காய் புகழ் நடிகருடன் புதுமுகமாக அந்த நடிகை நடித்தார். அந்த இயக்குநர் பாக்யம் செய்தவர். பிரபல நடிகர் ஒருவரே அவரை தன் வாரிசாக கூறுமளவுக்கு பாக்யம் பெற்றவர்.

நடிகையிடம் சென்னை நகர ஹொட்டல் ஒன்றின் பெயரைக்கூறி, அங்கு அன்றிரவு டிஸ்கஷனுக்கு வருமாறு அழைத்தார்.

நடிகை உண்மையாகவே டிஸ்கஷன்தான் என்று நம்பிவிட்டார்.

பவ்வியமாக, கையில் குறிப்புப் புத்தகம் பேனா சகிதம் அன்றிரவு சென்றார்.

அறையைத் தட்டியபோது திறந்த இயக்குநர் நின்ற கோலம் நடிகையை தூக்கிவாரிப் போட்டது. இடுப்பில் மட்டும் சின்ன 'டவல்' ஒன்றை கட்டிய படி நின்றார். மூக்குக் கண்ணாடி வழியாக நடிகையை வெறித்துக் கொண்டிருந்தார்.

உள்ளே வருமாறு கூட அழைக்கத் தோன்றாமல் வெறித்துப் பார்த்தவரை கண்டதும் பயந்த நடிகை, திரும்பி ஓடிவிடலாமா? என்று யோசித்தார்.

அந்தக் கணமே அவரது கையை உள்ளே வேகமாக இழுத்தார் இயக்குநர். நடிகை நிலை தடுமாறி அவர்மீது சாய, அவரும் சாய இருவரும் ஒருவர் மேல் ஒருவராக தரையில் புரண்டனர்.

தானாக மூடிக் கொள்ளும் கதவு என்பதால் இந்தக் கண்றாவி வெளியே தெரியவில்லை.

### மன்றாட்டம்

இயக்குநர் நடிகையை துகிலுரிய ஆரம்பிக்க, நடிகை தன்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று மன்றாடினார்.

இயக்குநருக்கு அவரது மன்றாட்டம் கேட்கவில்லை. ஆவேசமாக துகிலுரிப்பை நடத்தி முடித்துவிட்டார்.

நடிகையிடம் அந்த இயக்குநர் கூறினார்: "இன்று நான் முருங்கைக்காய் கறிதான் சாப்பிட்டு வந்திருக்கிறேன்." நடிகையால் அந்த புகழ்வாய்ந்த இயக்குநரும், நடிகருமானவரின் விருப்பத்தை எதிர்க்க முடியவில்லை. பணிந்தார். அதன்பின்னர் தினமும் படப்பிடிப்பு முடிந்ததும் டிஸ்கஷனுக்கு அழைக்கப்பட்டார்.

எப்படியோ படம் மட்டும் சூப்பர் ஹிட்டானது. அதனால் இன்றுவரை கதாநாயகியாக நிறையச் சம்பாதித்து, பல விருதுகளும் பெற்றுள்ளார் அந்த நடிகை.

### பி.யூ. சின்னப்பா

இந்தக்கால நடிகர்கள் மட்டுமல்ல அந்தக் கால நடிகர், நடிகைகளும் சளைத்தவர்களல்ல. ஒரு காலத்தில் எம்.ஜி.ஆர். போல பிரபலமாக இருந்து புகழும், பொருளும் குவித்த நடிகர் பி.யு. சின்னப்பா.

கூட நடிக்கும் நடிகைகளை கணக்குப் பண்ணுவதில் மன்னர். சில நடிகைகள் இவர்கூட நெருங்கிப் பழகவே அஞ்சுவார்களாம். அள்ளிக்கொண்டு போய் விடுவோரோ என்றுதான் பயம்.

தன்னுடன் நடித்த சில கதாநாயகிகள் பற்றி சினிமா கட்டுரை ஒன்றில் பி.யு. சின்னப்பா கூறியவற்றில் சில:

"நடிகை மங்களம் ஒரு அடுப்பங்கரைப் பூனை. நான் தொட்டா அந்தப் பூனை நடிகை சிணுங்கிக்கொண்டே சுருண்டு படுத்துடும்! எம்.வி.ராஜம்மா முள்ளம்பன்றி போன்றவங்க. ஏதாவது ஜாலியாப் பேசினா உடம்பை சிலிப்பிக்கிட்டு முகத்தை ஜிவ்வுன்னு சிவப்பு ஆக்கிடும்!" என்று கூறினார்.

பிருதிவிராஜன் படத்தில் நடித்தபோது தன்னுடன் ஜோடியாக நடித்த இளம் நடிகையான சகுந்தலாமீது மையல் கொண்டார் பி.யு. சின்னப்பா. அவரையும் மணந்து கொண்டார்.

மது, மாது என்பவற்றாலும் பிற காரணங்களாலும் அந்த அற்புதக் கலைஞனின் செல்வம் சீரழிந்தது. இறுதிக் காலத்தில் பட்டினி கிடந்தார். பணத்திற்கு கஷ்டப்பட்டார். நோய்வாய்ப்பட்டு மரணமானார்.

ஒரு காலத்தில் புதுக்கோட்டையில் ஏராளமான வீடுகளை வாங்கிப்போட்டிருந்தார். இப்படியே போனால் புதுக்கோட்டையையே வாங்கிவிடுவாரோ? என்று நினைத்து, 'இனிமேல் புதுக்கோட்டையில் சின்னப்பா வீடுவாங்கக் கூடாது' என்று அந்த சமஸ்தான அரசு தடை விதித்ததாம்.

இத்தனை செல்வ வளம் இருந்தும், கட்டுப்பாடு இல்லாமல் நடந்துகொண்டதால் அவர் மட்டுமன்றி அவரது குடும்பமும் இறுதியில் குட்டிச் சுவராகியது.

## ஒழிவிலையா?

தொண்ணூறின் பேரழிவு, தொண்ணூற்று எட்டிலுமா?
எண்ணமுடியவலையே? இதயம் துடிக்கலையே?
மண்டிப்பறக்கிறதே, மறந்திடுதல் எவ்வாறு?
கண்ணீர் வழிகிறதே, கவலைக்கொழிவிலையா?

●●

வந்து வந்து போவதுமேன்? வாடிக்கையாவதுமேன்?
இந்தப் பிறவியெலாம் இவ்வாறுதான் போமா?
அந்தோ துயர்ப்பலுவே, ஆர்சமப்பார் தொடராக?
வெந்ததடா அத்தனையும்! வேகுதடா பாழ்நெஞ்சம்!

●●

வாடகையென்றில்லாமல் வாழ்ந்தேன் இலிங்கநகர்!
தேடுபொருள் அத்தனையும் தீயில் கருகியதேன்?
நாடழிந்தும் நானழிந்தேன, நாடிகுந்தும் நானழிந்தேன்!
விடுவது தானெங்கே? உரைப்பீர் ஒரு வார்த்தை!

●●

தீங்கு நினைக்கலையே, தீயெதற்கு வைத்தாகள்?
தாங்க முடியாமல் தவிக்குமெனைப் பார்த்தீரா?
தூங்கி எழுவீரா? சுகமாக வாழ்வீரா?
ஏங்குகிறேன் பாரீரோ இன்னுமுயிர் உள்ளதடா!

'அகதிக்கவிராயர்'-இலிங்கநகர்.

## யார் இவர்கள்?



↑ தமிழக முன்னாள் முதல்வர் அமரர் காமராஜருடன் கைகுலுக்கும் இப் பெண்மணி யார் என்று தெரிகிறதா? இன்னும் வாழும் பெரிய இடத்துப் பெண்.



→ படம் இரண்டில் காணப்படும் சுட்டிப் பையன் தமிழகத்தில் வாயால் கலக்குபவர். கொழும்புக்கு சமீபத்தில் வந்து போனவர். கண்டு பிடியுங்களேன். விடை உதவி: 18ம் பக்கம்.

## நிஜம்

## தேன் கிண்ணம்

மாமரத்து நிழல் தனிலே
மங்கை அவள் மடிதனிலே!
முகம் புதைத்து அவனிருக்க
கீத மொன்று அவள் பாடி!
கண்ணயர வைத்துவிட்டாள்!
கண்ணயர்ந்த காளை அவன்
கண்ட தோர் கனவு!
அனார்கலி நீயல்லவா?
சலிம் நானல்லவா?
ஆடினோம் பாடினோம்
அநேக நேரம் பேசினோம்!
கனவில்தான் ஆடியது
கற்பனையில் தான் வாழ்ந்தது.
சமாதியானது அவர்கள் உடல்
எங்கிருந்தோ 'ஷெல்'வந்து
இடிபோல் வீழ்ந்ததினால்!
இளம் காதலர் இருந்த
இடத்திலே சமாதி!
கனவிலல்ல சமாதி
நிஜமாகவே சமாதி!

காத்தான்குடி-சிபான்.

## நீயின்றி....

இதயத்தின் கனவுகள் என்னில்
இசைபாடித் துடிக்கிறதே....
இதமாக உன்னை எண்ண
இன்பங்கள் பிறக்கிறதே!

••

சோகங்கள் இதமாய் மனதில்
சொந்தங்கள் ஆகிறதே
சுகங்களே இல்லா வாழ்வு
சுமையாகிப் போகிறதே!

••

நீயாக நானும் மாறில்
நெஞ்செல்லாம் பூக்கிறதே!
நினைவுகள் மட்டும் எனக்கு
நிழலாகித் தொடர்கிறதே!

••

உணர்வுகள் எந்தன் வாழ்வில்
உயிரின்றிப் போகிறதே!
உயிருமே விரைவாய் என்னில்
உறங்கிடப் பார்க்கிறதே!

••

காண்பேனோ உனை விரைவில்...?
கண்களும் ஏங்கிறதே
கலந்திடு எந்தன் உயிரில்
காதலும் வாழ்கிறதே!

நிறோ-கனடா.

## காலச் சக்கரத்தில் காதல்

நினைவுகள்
அணுவணுவாய்
கொல்ல
உணர்வலைகள்
வரண்டு வீசும்!

இங்கும்
யுத்தமும் இழப்பும்
தொடர்ந்து நடக்கும்!
உனக்கு மட்டும்
அப்படி
இல்லாமல் இருக்கலாம்....!

நித்திரை
முரண்டு பிடிப்பதுவும்
உணவு
இறங்க மறுப்பதுவும்
உனக்கு எப்படியோ?


ஏன் இயற்கையே
அகலிகையானது?
உனது கடிதத்திற்கு
அவ்வளவு
வலிமை என்பதை
உணர்கிறேன்!

தந்திகள்
அறுந்த வீணையாய்
நாதத்தினை
எப்படி
வாசிக்க முடியும்?

உன் வார்த்தையோசையின்
ரீங்காரத்தை
என் காதுகள்
இன்னமும்
ஸ்பரிசிக்கின்றன!

காலவோட்டத்தில்
காதற் கல்லெறிந்தேன்!
காலம் ஓடிவிட்டது,
காதல் நின்றுவிட்டது!

மாரிமுத்து யோகராஜன்- மட்டக்களப்பு.




## தீப்பொறி கிளப்பிய படம்

← இந்தியத்திரைப்பட வரலாற்றில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியவர் சத்தியஜித் ரே. அவருடைய- மசாலா அற்ற- கலை அம்சங்கள் நிறைந்த திரை ஓவியங்கள் இந்தியாவின் ஆற்றலை உலகனைத்தும் பறைசாற்றின.

கலை அம்சங்கள் பொதிந்த திரைப்படங்கள் எடுத்து நஷ்டப்பட்ட 'ரே' அதனை ஈடுசெய்ய 'தேவி' என்றொரு படத்தை எடுத்தார்.

1966ம் ஆண்டு அவர் தயாரித்த மசாலா கலந்த 'தேவி'யில் ஒரு புதுமுகத்தைப் புகுத்தினார். ஷர்மிலா தாகூர் என்பவர்தான் அந்தத் தாரகை.

ஷர்மிலா தாகூருக்கு 'தேவி'யைத் தொடர்ந்து எதிர்பார்த்த பட வாய்ப்புக்கள் வந்து சேராமையினால் தனது தோற்றத்தைச் சற்றுக் கவர்ச்சிகரமாக்க விரும்பினார்.

ஒரு படப்பிடிப்பாளருடைய கலையகத்துக்குச் (திரைப்படப் பிடிப்பாளரல்ல) சென்றார். புகைப்படக் கலைஞர் திராஜ் செளடா ஷர்மிலாவிடம், "எத்தகைய உடையில் படமெடுக்க வேண்டும்" என்று கேட்டார். தன்னுடைய கைப்பையைத் திறந்து ஷர்மிலா எடுத்துக் கொடுத்த உடையைப் பார்த்த படப்பிடிப்பாளருக்கு அதிர்ச்சியில் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

ஷர்மிலாவின் விருப்பம் போல் எடுக்கப்பட்ட அந்தப் படம் பம்பாயிலிருந்து வெளிவரும் '.:.பிலிம் .:.பெயார்' 1966 ஆகஸ்ட் 19ம் திகதியிட்ட சுதந்திரதின சிறப்பு இதழின் முன் அட்டையை அலங்கரித்தது. பாமரர் முதல் பெரிய அரசியல்வாதிகளையும் அந்தப் படம் வாதப் பிரதிவாதங்களுக்குள் உட்படுத்திவிட்டது. இந்தியப் பாராளுமன்றத்திலும் பெரும் தீப்பொறி பரவ அப்படம் காரணமாக இருந்தது.

1966ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த இந்தியத் திரைப்படங்களில் பெரும்பாலும் எந்த நடிகையும் இரு துண்டுகளை மட்டும் கொண்ட-நீச்சலுடைகளில் தோன்றியதில்லை. ஆனால் ஷர்மிலா தாகூர் நீச்சலுடையில்- பிரபல சினிமாப் பத்திரிகையில்- அதுவும் சுதந்திரதின ஞாபகார்த்த மலரில் காட்சியளித்தார்.

எதிர்ப்புக் குரல் கிளம்ப மற்றுமொரு காரணம்- ஷர்மிலா- பாரதத்தின் பெருமையினை வானளாவ உயர்த்திய கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் பேத்தி என்பதுதான்!

இந்தத் துணிகரமான அல்லது துணிகரணமான 'போஸ்' ஷர்மிலாவின் கனவை நனவாக்கியது. மளமளவென்று அவருக்குப் படவாய்ப்புக்கள் குவிந்தன.

## இந்த வாரம் உங்கள் பலன்

(26.07.1998 தொடக்கம் 01.08.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, பணவரவு. | காலை | 9 | மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனச்சஞ்சலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உடல்நலம் பாதிப்பு, அமைதியின்மை. | பகல் | 11 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், சஞ்சலம் நீங்குதல். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- சனி, அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கெளரவம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | காலை | 7 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனத்துயரம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| சனி- காரியசித்தி, உயர்ந்த எண்ணம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப்பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை | 9 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனப்பயம், அரசவிரோதம். | காலை | 7 | மணி |
| புதன்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்கவலை நீங்கும். | காலை | 9 | மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், இல்லச் சிறப்பு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் சகவாசம், பணக்கஷ்டம். | காலை | 9 | மணி |
| திங்கள்- உறவினா உதவி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், கெளரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன விரோதம், மனக்கவலை. | காலை | 9 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | காலை | 9 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், உறவினர் தொல்லை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன முக்கால)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 7 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை | 9 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணச் செலவு. | மு.ப. | 9 | மணி |
| சனி- காரியக்கேடு, கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை | 7 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பணவரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், உறவினர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, ஏமாற்றம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- இடமாற்றம், பண இழப்பு. | காலை | 7 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 9 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. |
| மிதுனம் | - வெள்ளி, செவ்வாய். |

சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பணவரவு. | காலை | 7 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- காரிய சித்தி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கெளரவம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பணச் செலவு, உறவினர் வருகை. | பகல் | 12 | மணி |
| சனி- தேககக்கேடு, மனக்கவலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதறகால)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இல்லச் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை | 9 | மணி |
| திங்கள்- உறவினர் தொல்லை, பணச்செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனக்கவலை. | பகல் | 11 | மணி |
| புதன்- பொருள் வரவு, மனக்கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், புதிய முயற்சி. | காலை | 7 | மணி |
| வெள்ளி- மனக்கலக்கம், அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| சனி- இடமாற்றம், பணச்செலவு. | காலை | 9 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், கெளரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், வீண் அலைச்சல். | மு.ப. | 10 | மணி |
| சனி- உடல் உபாதை, மனப்பயம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பயனற்ற செயல், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கெளரவம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பணவரவு. | காலை | 7 | மணி |
| சனி- துயர் நீங்கும் பெரியோர் உதவி. | காலை | 9 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, உறவினர் உதவி. | காலை | 7 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, துயர் நீங்கும். | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை | 9 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனச்சஞ்சலம். | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியச் கேடு, வீண் முயற்சி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- மனச் சஞ்சலம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- முயற்சி மேன்மை, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பயனுள்ள செயல். | காலை | 9 | மணி |
| சனி- துயர் நீங்கும், உறவினர் உதவி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## தாய்ப்பால் தருவது எப்படி?



குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய் கீழ்க் கண்டவற்றை முக்கியமாகப் பின்பற்ற வேண்டும்.

சின்னஞ்சிறு குழந்தை பாலுடன் காற்றையும் உட்கொண்டு விடும். எனவே பாதிப்பால் குடித்தவுடனும் இறுதியிலும் ஒரு முறை குழந்தையை எடுத்து தோளின்மீது சாத்திக் கொண்டு முதுகை மெல்லத் தடவி விட வேண்டும்.

இவ்வாறு சிறிது நேரம் செய்வது மிகவும் இன்றியமையாதது. இதனால் உணவுடன் உட்சென்ற காற்று எளிதில் வாய்மூலம் ஏப்பமாக வெளிவந்து விடும். இல்லையேல் இக்காற்று வயிற்றுக்குள் சென்று தொந்தரவு அளிக்கலாம்.

குழந்தையின் விக்கலுக்குப் பெரும்பாலும் இக்காற்று உட்செல்வதே காரணமாகும். மேலும் பால் கொடுத்தவுடன் குழந்தையைப் படுக்க விட்டால் குழந்தை அதைக் கக்கிவிடும்.

பால் குடிக்கும் நேரம் சுமார் பத்து நிமிஷங்களில் இருந்து இருபது நிமிஷங்கள் வரை நீடிக்கலாம். பால் கொடுத்து முடிந்தவுடன் குழந்தையின் வாய், கழுத்து, நெற்றி இவற்றை மெல்லிய துணி கொண்டு மெல்லத் துடைக்க வேண்டும். ஏனெனில் வாய்வழியே பால் வழிந்திருக்கும். கழுத்திலும் நெற்றியிலும் வியர்வையும் தோன்றி வழிந்திருக்கும்.

வாழ்வில் குழந்தை முதலில் அடையும் அனுபவம் பால் குடிப்பதே. இந்த அனுபவம் அதற்கு இன்பத்தையும் உள்ள நிறைவையும் அளிக்க வேண்டும். அப்போதுதான் குழந்தையின் பிஞ்சு மனதில் சுற்றுமுள்ள உலகம் இன்பமயமாகத் தோன்றி நம்பிக்கை துளிர்க்கும்.

பாலூட்டிப் பராமரிக்கும் தாய், தன் கருவுற்ற காலத்தில் உட்கொண்டது போல நல்ல சத்துள்ள உணவை, குறிப்பாக பால், கீரை, பச்சைக் காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை உண்ண வேண்டும். அமைதியான மனநிலையையும் பயில வேண்டும்.

### பால் கொடுக்கும் கணக்கு:

பால் கொடுக்க வேண்டிய கால அட்டவணையைத் தீர்மானம் செய்யும் பொறுப்பைக் குழந்தையிடமே தைரியமாக விட்டுவிடலாம். அது அழும் காலத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்தால் கடிகாரத்தைப் போல மணிக்கணக்காகத் திட்டமான இடைவேளைகளில் அது பசித்து அழுவது நன்கு புலப்படும்.

பொதுவாகக் காலை 6 மணி, 9 மணி, 12 மணி, பிற்பகல் 3 மணி, மாலை 6 மணி, இரவு 9 மணி என நாளுக்கு 6 முறைபால் கொடுக்கலாம். சுமார் 3-4 மாதமொருமுறை ஆகார வேளையை மாற்றவேண்டும்.

அதாவது காலை 6 அணி, 10 மணி, பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி என நாளுக்கு 5 முறை உணவளிக்கலாம். ஆனால் இவ்விஷயத்தில் குறிப்பிட்ட குழந்தையின் தேவையை நன்கறிந்து அதற்கேற்ப நடக்க வேண்டும்.

சிறிது நேரம் முன்னோ பின்னோ பால் கொடுப்பதில் தவறில்லை. முதலில் மூன்று மணிக்கு ஒருமுறை பாலுக்கு அழுத குழந்தை நாளடைவில் நான்கு மணிக்கு ஒரு முறை பசித்து அழுவதை நடைமுறையில் காணலாம்.

இவ்விதம் ஆகாரவேளை மாறுதல் மூன்று மாதங்களில் இருந்து ஏழு மாதங்களுக்குள் நிகழலாம். நள்ளிரவில் குழந்தை பசித்து அழுதால், அதனை வேறு வழியில் சமாளிக்க முடியாவிட்டால், அப்பொழுது பால் கொடுப்பதும் முறையே. ஆனால் சுமார் 6,7 மாதங்களுக்கு அப்பால் இதற்குத் தேவை இராது.

## இயற்கை வைத்தியம்

**வாய்வுத் தொல்லை:**

வாய்வுத் தொல்லையால் அவதியுறுவோர் வெள்ளைப் பூண்டை உரித்து, நெய்யில் வதக்கி, கொஞ்சம் புளி, காரம், தேங்காய் சேர்த்து துவையலாக அரைத்துச் சாப்பிட்டு வரலாம். வாய்வுத் தொல்லை அகலும்.

**வயிற்றில் பூச்சி:**

வயிற்றில் பூச்சி இருந்தால் பசி மந்தம் இருக்கும். சரிவர சாப்பிட மாட்டார்கள். அவர்களுக்கு அன்னாசிப் பழச்சாற்றை அருந்தக் கொடுக்கலாம். அது வயிற்றிலுள்ள பூச்சிகளைக் கொல்லவல்லது.

**இமைகளில் வீக்கம்:**

சில நேரங்களில் இமைகளில் வீக்கம் ஏற்பட்டு தொல்லையுறுவதுண்டு. அச்சமயத்தில் பசும்பாலை நன்றாகக் காய்ச்சி, அதில் சிறிய மெல்லிய வெள்ளைத்துணியை நனைத்து பொறுக்கும் சூட்டுடன் ஒத்தடம் கொடுக்க வீக்கமும் வலியும் குறையும்.

**உள்ளங்கை, உள்ளங்கால்களில் வியர்வை:**

ஒரு சிலருக்கு உள்ளங்கை உள்ளங்கால்களில் மட்டும் வியர்வை கசிந்து கொண்டே இருக்கும். அதற்காக மருந்தைத் தேடி அலைய வேண்டாம். இலந்தை இலைகளில் கொஞ்சம் எடுத்து நன்றாக நசுக்கி, அச்சாற்றை உள்ளங்கை, உள்ளங் கால்களில் சில நாட்கள் தொடர்ந்து தடவி வந்தால் வியர்வைக் கசிவு நிற்கும்.

**காலில் முள்:**

காலில் முள்ளோ அல்லது ஏதேனும் குத்தினால் உடனே எடுத்து விட வேண்டும். அது எடுத்த பின்னரும்கூட அந்த இடத்தில் கடுப்பு இருந்துகொண்டே இருக்கும். சிறிது மிளகாய்த்தூளுடன் உப்புத்தூளையும் சேர்த்து, சட்டியில் வறுத்து துணியில் முட்டையாக கட்டி பொறுக்கும் சூட்டுடன் ஒத்தடம் கொடுத்தால் வலி நிற்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EC

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-08-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

45

புவனா



'டயானா தன்னை உயர்ந்தவராக காண்பிக்க ஆசைப்படுகிறார். அதற்காக எத்தனையோ முயற்சி செய்கிறார். உலகில் ஒப்பற்ற பெண் என்று தன்னை நிரூபிக்க எதையெல்லாமோ செய்கிறார்.' என்று இலண்டன் பத்திரிகை ஒன்று எழுதியது.

அப்பத்திரிகை இளவரசர் சாள்ஸின் நண்பர்கள் வட்டாரத்தின் தூண்டுதலின் பேரிலேயே அப்படி எழுதியது.

'அரச குடும்பத்தின் மதிப்பு, நாட்டின் பெருமை அனைத்தையும் சீரழிக்கப் பார்க்கிறார் டயானா!' என்று கூறியது இன்னொரு பத்திரிகை.

இப்பத்திரிகைச் செய்திகளின் பின்னர் ஒரு நாள் தற்செயலாக சாள்ஸ்சை நேருக்கு நேர் கண்டுவிட்டார் டயானா.

சாள்ஸ்சைக் கண்டதுமே பத்திரிகைச் செய்திகள்தான் டயானாவின் நினைவுக்கு வந்தன.

சாள்ஸ்சுக்கு அருகில் சென்ற டயானா, "ஏன் மற்றவர்களைப் பயன்படுத்தி என்னைப் பற்றிய கட்டுக்கதைகளைப் பரப்பவேண்டும்? பத்திரிகை ஆசிரியர்களை தொலைபேசியில் அழைத்து நீங்களே கூறவேண்டிய அபாண்டங்களைக் கூறி விடலாமே?" என்று சூடாகக் கேட்டுவிட்டார்.

நெற்றிக்கு நேராக அப்படியொரு கேள்வியை டயானா கேட்பார் என்று சாள்ஸ் எதிர்பார்க்கவில்லை. அதனால் கையும் களவுமாக பிடிபட்ட ஆசாமிபோல முழித்தார்.

டயானா தாமதிக்காமல் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

### இரண்டாவது தேனிலவு

இக் காலகட்டத்தில் கிரேக்க கோடீஸ்வரரான ஜோன் லேற்சிஸ் என்பவர் இளவரசர் சாள்ஸ்சுக்கும் இளவரசி டயானாவுக்கும் அழைப்பு விடுத்தார்.

அந்தக் கோடீஸ்வரரிடம் 'அலெக்ஸாண்டிரியா' என்ற பெயருடைய சொகுசுக் கப்பல் இருந்தது.

## இரண்டாவது தேனிலவு



கமீலா

அக் கப்பலில் விடுமுறையைக் கழிக்கத்தான் அழைப்பு விடுத்திருந்தார்.

மகாராணியார் டயானாவை நேரில் அழைத்து, விடுமுறையைக் கழிக்க செல்லுமாறு பணித்தார்.

அந்தப் பணிப்பை டயானாவால் மறுத்திருக்க முடியும்.

மகாராணியை கடுமையாக விரோதித்துக் கொண்டால் விவாகரத்தும் இழுபட்டுச் செல்லும், தன் பிள்ளைகளைக்கூட தன்னிடம் இருந்து பிரிக்க தீவிரச் சதி முயற்சிகள் நடக்கக்கூடும் என்றெல்லாம் கருதியே சில விடயங்களில் மகாராணியாரை அனுசரித்து நடக்கலானார் டயானா.

டயானா சம்மதித்ததை வைத்து, அதனை சாதகமான விஷயமாக மாற்ற முனைந்தது சாள்ஸின் நண்பர்கள் வட்டாரம்.

சாள்ஸ்சும், டயானாவும் கப்பலுக்கு சென்றதும் அதனை 'இரண்டாவது தேனிலவு' என்று வர்ணித்து செய்தி வெளியிட்டது சில பத்திரிகைகள்.

ஆனால் கப்பலுக்குள் நடந்த சம்பவங்கள் பத்திரிகைகளின் விவரிப்புக்கு நேர்மாறாக இருந்தன.

கப்பல் பயணத்தில் கிரேக்க இளவரசி அலக்ஸாண்ரியாவும் அவரது கணவர் மற்றும் ரோம்சே பிரபு தம்பதியினரும் கலந்து கொண்டனர்.

இப் பயணத்தின்போது டயானா, சாள்ஸ் இடையே உள்ள விரிசல்கள் குறையும் என்றே பயணத்தில் கலந்து கொண்ட அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் டயானாவோ, சார்ள்ஸ்சோ ஒருவரை ஒருவர் நெருங்கக்கூட இல்லை.

### தனி அறைகளில்

ஒருதடவை தம்பதியினர் அனைவரும் லேசாக கட்டியணைத்தபடி உல்லாசமாக ஆடத் தொடங்கினார்கள்.

கிரேக்க இளவரசியின் இதழ்களில் அவர் கணவர் மென்மையாக முத்தமிட அனைவரும் கரகோசம் செய்து உற்சாகப்படுத்தினர்.

அந்த உற்சாகத்தில் கிரேக்க இளவரசியை தன் கைகளில் தூக்கிக் கொண்டு ஆடத் தொடங்கிவிட்டார் அவரது கண்வர்.

அதனைப் பார்த்த பிரபு தம்பதியும் கட்டியணைத்தபடி மெய்மறந்து ஆடத்தொடங்கி விட்டனர்.

கப்பல் உரிமையாளரான கோடீஸ்வரர் ஜோன் லேற்சிஸ் தன் இளம் மனைவியுடன் கப்பல் தளத்தின் ஒருபுறமாக ஒதுங்கிக்கொண்டார்.

தம்பதிகள் அனைவரும் சூடாக இருந்த அத்தருணத்தில் டயானாவும், சாள்ஸ்சும் மட்டும் அந்நியர்கள் போலவும், உணர்வுகளே இல்லாத மரக் கட்டைகள் போலவும் அமர்ந்திருந்தனர்.



சாராவுடன்

டயானா எழுந்து தன் அறைக்குச் சென்றுவிட்டார். சாள்ஸ்சும் தன் அறைக்குச் சென்றுவிட்டார்.

கப்பலில் ஏறிய சில மணிநேரங்களுக்குள்ளேயே, கப்பல் உரிமையாளரிடம் டயானா; "எனக்கு தனியான படுக்கை அறை வேண்டும்!" என்று கூறிவிட்டார்.

சாள்ஸ், டயானா பிரச்சனை பற்றி அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார். அதனால் டயானாவின் கோரிக்கை அவருக்கு வினோதமாகத் தெரியவில்லை.

ஆனாலும் பயணம் முடிவடைவதற்கு இடையே இருவரும் தங்கள் ஊடலை மறந்து நெருங்கிவிடுவார்கள் என்றே ஜோன் லேற்சில் நம்பிக்கொண்டிருந்தார்.

அவரது நம்பிக்கை பொய்த்துவிட்டது. பயணம் முடிவடையும் கட்டத்தில் அக்கப்பலில் இருந்த அனைவருக்கும் ஒரு விஷயம் திட்டவட்டமாக தெரிந்துவிட்டது. 'இனிமேல் இந்த இரு துருவங்களும் ஒன்று சேரப்போவது இல்லை!'

கப்பல் பயணம் டயானாவுக்கு இருந்த நிம் மதியையும் பறிப்பதுபோல இருந்தது.

இயற்கை அழகை இரசிப்பதில் ஆர்வமுள்ள டயானாவுக்கு, கப்பலில் பயணம் செய்வதிலும் அலாதிப்பிரியம்.

ஆனால் தனக்கு விருப்பம் இல்லாத சாள்ஸ் சுடன் நடைபெற்ற அப்பயணத்தை டயானாவால் இரசிக்க முடியவில்லை.

### குறுக்கீடு

கப்பல் பயணத்தில் நிம்மதி இழந்திருந்த டயானா பொறுமை இழந்து நடந்து கொள்ள ஒரு சம்பவம் தூண்டுகோலானது.

டயானாவும், சாள்ஸ்சும் தனித்தனி அறைகளில் தங்கியிருந்த போதும், இரு அறைகளுக்கும் பொதுவாக ஒரே ஒரு தொலைபேசி லைனே இருந்தது. ஆனால் இரு அறைகளுக்கும் இணைப்புக் கொடுத்திருந்தனர்.

தன் அறையில் இருந்தபடி இலண்டனில் உள்ள தன் சிநேகிதியுடன் உரையாட தொலைபேசியைத் தூக்கினார் டயானா.

அதேநேரம் மறு அறையில் சாள்ஸ் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

அவர் யாருடன் பேசுகிறார் என்பதை அறிந்ததும் டயானா தன் கட்டுப்பாட்டை இழந்துவிட்டார்.

இலண்டனில் உள்ள தன் காதலி கமீலாவுடன் சாள்ஸ் காதல் சரச வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தார்.

"இங்கே ஒரே குளிர்" இது சாள்ஸ்.

"போர்வை இல்லையா?" கமீலா.

"என் போர்வையைத்தான் அங்கே விட்டு விட்டு வந்துவிட்டேனே!"

"எங்கே?"

"அங்கேதான்."

"ச் சீ..."

"உனக்கு குளிரவில்லையா?"

"ம்.ம். குளிரத்தான் செய்கிறது?"

"எங்கே குளிருகிறது!"

"நேரில் வாருங்கள் விவரமாக சொல்கிறேன்..."

என்று கமீலா கொஞ்சிக் கொண்டிருக்கும் போதுதான் டயானா ஆவேசமாக மறு .:.போனில் இருந்து குறுக்கிட்டார்.

"ஏன் இங்கே வந்து தொல்லைப்படுகிறீர்? உம்முடைய அருமைக் காதலியுடன் போய்ச் சேர்ந்துகொள்ள வேண்டியதுதானே!"

டயானாவின் குறுக்கீடு இருவருக்குமே குண்டைத் தூக்கிப்போட்டது போலாகிவிட்டது.

இருவரும் மறுபேச்சே இல்லாமல் 'டொக்', 'டொக்' என்று தங்கள் ரிசீவர்களை வைக்கும் ஓசை கேட்டது.

டயானாவும் எரிச்சலுடன் ரிசீவரை விட்டெறிந்தார்.

அதன்பின்னர் சாள்ஸ்சுடன் முகம் கொடுத்தே பேசவில்லை டயானா.

கப்பல் பயணம் விரிசலைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் அதிகப்படுத்தியிருந்தது.

இக்கட்டத்தில் பிரிட்டிஷ் அரச குடும்ப மரியாதைக்கு மற்றொரு பலத்த அடி விழுந்தது.

மகாராணியின் மற்றுமொரு மருமகள் சாராவின் உருவத்தில் அந்த அடி விழுந்தது.

.:.பிரான்ஸ் நாட்டின் தென்பகுதி ஒன்றில் சாராவின் உல்லாசம் பற்றிய திடுக்கிடும் தகவல் அது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**திருமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**செல்வி சுகந்தி,**
மே/பா வே.தபேந்திரன்,
91, திருமால் வீதி, திருமலை

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



**தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ்**
இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன் இல 11

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com





பாடிநின் றுனைப் புகழ்வோம்-எங்கள்
பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய்.
நின்னருள் வேண்டுகிறோம்-எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# நான்கு நண்பர்கள்

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் நான்கு நண்பர்கள் வாழ்ந்தனர். அவர்களுள் மூன்று பேர் நன்கு படித்தவர்கள். உலகின் அனைத்து விசயங்களையும் அறிந்தவர்கள். ஆனால் பொது அறிவு இல்லாதவர்கள்.

நான்காவது ஆளோ போதிய கல்வியறிவு இல்லாவிட்டாலும், நல்ல புத்திசாலி. பொது அறிவு உள்ளவன்.

ஒரு நாள் நான்கு நண்பர்களும் தங்களது திறமையைக் காட்டிப் பொருள் தேட அயல் நாட்டிற்குப் புறப்பட்டனர். அவர்கள் காட்டு வழியே போய்க் கொண்டிருந்தபோது, அவர்கள் முன் ஒரு எலும்புக்குவியல் தென்பட்டது.

நான்கு பேரில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்து,

"நண்பர்களே! நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு. நாம் கற்ற வித்தைகளைக் கொண்டு இந்த எலும்புகளை ஒன்றாக்கி, அதற்கு உருவம் கொடுத்து உயிர் கொடுப்போம்!" என்று கூறினான். அவ்வாறு கூறியதுடன் நிற்காமல் அந்த எலும்புகளை சரிவர அமைத்தான்.

எலும்புகள் எல்லாம் சரிவர பொருத்தப்பட்டவுடன், அது சிங்கத்தின் தோற்றமளித்தது. உடனே இரண்டாமவன் தான் கற்ற வித்தைகளைக் கொண்டு அந்த எலும்புக்கூட்டுக்கு இரத்தமும் சதையும் தோலும் கொடுத்தான்.

இப்போது அவர்கள் முன் அழகான, ஆனால் உயிரற்ற சிங்கம் ஒன்று நின்றது.

சிங்கத்தைப் பார்த்த மூன்றாமவன்,

"இந்தச் சிங்கத்திற்கு நான் உயிர் கொடுக்கிறேன்!" என்று கூறி, அதனருகில் சென்றான். உடனே நான்காமவன் அவனைப் பார்த்து,

"நிறுத்து! நிறுத்து! இது ஒரு சிங்கம். அதைப் பிழைக்க வைத்தால் நம் அனைவரையும் அடித்துக் கொன்றுவிடும்!" என்று கூறினான்.

ஆனால் மூன்று பேரும் சேர்ந்து நான்காமவனைப் பார்த்து,"உன்னால் எதுவும் செய்ய முடியாவிட்டால் பேசாமல் இரு. எங்களைத் தடுக்காதே!" என்று கேலி செய்தனர்.

உடனடியாக ஓடிப்போய் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான் நான்காவது நண்பன். மூன்றாமவன் சிங்கத்திற்கு உயிர் கொடுத்தான்.

சிங்கத்திற்கு உயிர் வந்ததும் பயங்கரமாகக் கர்ஜித்தது. மூன்று நண்பர்கள் மீதும் பாய்ந்து அவர்களை அடித்துக் கொன்று விட்டது.

நான்காவது நண்பன் மரத்தில் இருந்து இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தான். சிங்கம் அவ்விடத்தை விட்டுச் சென்ற பிறகு அவன் மரத்திலிருந்து இறங்கி வீட்டுக்குச் சென்றான்.

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பது போல நாம் அனைவரும் பொது அறிவுடன் திகழ வேண்டும். இல்லையேல் இந்த மூன்று பேரின் கதிதான் எமக்கும் ஏற்படும்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



### ஒரு நாள் மாளிகை:

இத்தாலி நாட்டில் வெனிஸ் நகரத்தில் பயஸ் என்ற மன்னனின் வருகையை முன்னிட்டு குறுக்கு நெடுக்கான படிக்கட்டுக்கள், உப்பரிகை, அலங்கார ஜோடனைகளுடன் ஒரு அரண்மனை முகப்பு கட்டப்பட்டது. பயஸ் வந்து சென்ற பின்னர் இது இடிக்கப்பட்டது.

### முதல் செயற்கைப் பல்:

இத்தாலி நாட்டில் உள்ள எத்ருசியன் கல்லறையில் காணப்பட்ட செயற்கைப் பல்வரிசையே இது. 2100 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இப்பல்வரிசை தங்கத்தால் ஆனது.



### இலையா? புழுவா?

ஓக் மரத்தின் வெட்டுண்ட இலை போல் தோற்றமளிக்கும் இப்பூச்சி விந்தையானது. இலையுதிர் காலத்தில் இலைகள் பழுப்பு நிறமடையும்போது இப்பூச்சியின் நிறமும் மாறும்.



### காக்டஸ் ரென்:

அரிசோனா நாட்டின் தேசியப் பறவையான இப்பறவை பாடினால், மலையில் இருந்து தகரப்போணி உருண்டு வருவது போல் சத்தம் கேட்கும்.



## வாரம் ஒரு நாடு

### மோல்டேவியா

தலைநகர் - சிசினவ்
பரப்பு - 33700 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 44 இலட்சம்
மொழி - ருமேனியன், உக்ரேனியன்
எழுத்தறிவு - 60%
சமயம் - கிறிஸ்தவம், இஸ்லாம்
நாணயம் - லேவு
தனிநபர் வருமானம் - 1262 டொலர்

**அமைவிடம்:**

வடக்கே உக்ரெய்னும், தென் கிழக்கே கருங்கடலும், ஒடெஸா என்ற நாடும், தென் மேற்கே ருமேனியாவும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

முன்னாள் சோவியத் குடியரசு. 1991 டிசம்பரில் சுதந்திரமடைந்தது. 1940ல் ருமேனியாவிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட




பகுதிதான் தற்போதைய மோல்டேவியா. 1994ல் மறுபடி ருமேனியாவுடன் இணையும் திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் தனி நாடாக உள்ளது.

**பொருளாதாரம்:**

நல்ல வளமான நிலம். திராட்சைத் தோட்டங்கள் அதிகளவில் உள்ளன. கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.08.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 255**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 253

**பரிசுக்குரியவர்:**
**விஜிதா பேரின்பநாயகம்,**
**சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நித்தியாஸ்ரீ சுப்பிரமணியம்,<br>பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி. | ஜன்சி ரோஷான் பெனடிக்ற்,<br>புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை. |
| மு. பிரிதிகலா,<br>கோணக்கலை தமிழ் வித்தியாலயம், பசறை. | பேரின்பராசா சுலக்ஷன்,<br>துறைநீலாவணை ம.வி., மட்டக்களப்பு. |
| சதானா பேகம்,<br>சென். மேரிஸ் கான்வெண்ட், மாத்தளை. | வைஷ்ணவி திலகன்,<br>சென். கபிரியல் பா.ம.வி., ஹட்டன். |
| கே. தனுஷியா,<br>பிரதான வீதி, தெனியாய. | வி. சுஜீகரன்,<br>சென். ஜோன் பொஸ்கொஸ், ஹட்டன். |
| ஏ.ஏ.எ.ஃப். நுஸ்கியா,<br>அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | எஸ். றினோசா,<br>பேஸ்லைன் வீதி, தெமட்டகொட, கொழும்பு-09. |

## ஸ்டெதஸ்கோப்



நோயாளிகளின் நெஞ்சு மற்றும் முதுகுப் பகுதிகளில் டாக்டர் வைத்துப் பரிசோதிக்கும் ஸ்டெதஸ்கோப் என்ற கருவி எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா?

முற்காலத்தில் இதயத்துடிப்பை அறிவதற்காக நோயாளிகளின் நெஞ்சுப் பகுதியில் காதை வைத்து கேட்பதை அப்போதைய மருத்துவர்கள் வழக்கமாக வைத்திருந்தார்கள். பின்னர் ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரெனிதியபில் ஹயாசிந் லானாக் என்ற மருத்துவர் காகிதத்தை குழல்போல் சுருட்டி, ஒரு முனையை நோயாளியின் நெஞ்சிலும், மறுமுனையை தனது காதிலும் வைத்துக் கேட்டார். இதயத்துடிப்பு நன்றாகக் காதில் கேட்டது.

காகிதத்தால் செய்யப்பட்ட குழல் அடிக்கடி நசுங்கிப் போனதால். அவர் ஒரு மரக்குழாயை தயார் செய்து வைத்துக் கொண்டார். 1816ம் ஆண்டு அவர் தயாரித்த இம்மரக்குழாய்க்கு ஸ்டெதஸ்கோப் என்று பெயர் வைத்தார்.

இந்த மரக்குழாயே பின்னாளில் பல் வேறு வடிவம்பெற்று இப்போது டாக்டர்கள் இரண்டு காதுகளிலும் மாட்டிக்கொண்டு பரிசோதனை செய்யும் ஸ்டெதஸ்கோப்பாக உருவாகியுள்ளது.

## கானல் நீர்

பட்டப்பகலில் சற்றுத் தொலைவில் தண்ணீர் ஓடுவது போல் இருக்கும். ஆனால் அருகில் சென்று பார்த்தால் அப்படி இருக்காது. இதைத்தான் கானல் நீர் என்று சொல்வார்கள். ஏன் இவ்வாறு உண்டாகிறது என்று தெரியுமா?

சுற்றுப் புறத்திலுள்ள காற்று மண்டலத்தின் அடர்த்தி ஒரேமாதிரியாக இருக்கும்போது ஒளிக்கற்றைகள் அவற்றின் வழியே நேராகச் செல்லும். எனவே தொலைவில் உள்ள பொருட்களின் தோற்றமும் நன்றாகவே இருக்கும்.



ஆனால் வெப்பம் மிகுந்த பகல் வேளைகளில் சூரிய வெப்பத்தினால் காற்று மண்டல அடுக்குகளின் அடர்த்தி வேறுபடத் தொடங்கும். அவற்றின் மூலம் பிரகாசமான ஒளிக்கற்றைகள் செல்லும் போது ஒளிக்கதிர்களின் பாதை சற்று வளைய நேரிடும்.

இதனால் தொலைவில் உள்ள பொருட்களை நாம் பார்க்கும்போது அவை நேராகவும், பிரதிபலிப்பாகவும் தெரியும். சாதாரணமாக இப்படி தண்ணீரில் தெரிவதை நாம் கண்டிருப்பதனால், தொலைவில் தண்ணீர் இருப்பது போன்று தெரியும். ஆனால் உண்மையில் அங்கு நீர் இராது.

இது பார்வைத் திரிபினால் ஏற்படும் பொய்த் தோற்றம் ஆகும்.

## நீர்யானையின் கொட்டாவி

மனிதர்கள் கொட்டாவி விட்டால் தூக்கத்திற்குத் தயார் என்று நினைக்கலாம். ஆனால் நீர் யானைகள் கொட்டாவி விட்டால் எச்சரிக்கையாகி விடவேண்டும். ஏனென்றால் 'சண்டைக்குத் தயார்' என்பதே நீர் யானைகளின் கொட்டாவிக்கு அர்த்தம்.



நீர்யானைகள் ஒன்றுடன் ஒன்று பயங்கரமாகச் சண்டை போடும். ஒரு நீர்யானை வாயைப் பிளந்து கொட்டாவி விட்டால் 'சண்டைக்குத் தயார்' என்று சிக்னல் கொடுக்கும். உடனே மற்ற நீர்யானை தலையைத் தாழ்த்திக் காண்பித்தால் 'சரணாகதி' என்று பேசாமல் விட்டுவிடும்.

ஆனால் சில நீர்யானைகள் 'நானும் தயார்' என்று சண்டைக்குத் தயாராகும். பயங்கரமாகச் சண்டையிட்டு பெரிய காயம்பட்டால்தான் இவை சண்டையை நிறுத்திக் கொள்ளும்.

இந்தக் காயங்களுடன் சேறு நிறைந்த குளம் அல்லது ஏரியில் உருண்டு புரளும். அந்நேரத்தில் நீர்யானையின் தோளில் சுரக்கும் ஒரு வகைத் திரவம் வடிந்து காயம்பட்ட இடத்தை மூடும். சேறும் இந்தத் திரவமும் ஒன்று சேர்ந்து நல்ல மருந்தாகி காயத்தை விரைவில் ஆற்றிவிடும்.

## எப்படி வந்தது?



பொலிசாரும் படையினரும் தமது உயர் அதிகாரிகளைப் பார்க்கும்போது 'சல்யூட் (SALUTE)' அடிப்பார்கள் அல்லவா? இந்த 'சல்யூட்' அடிக்கும் முறை எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

சில நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் 'நைட்கள்' என்று அழைக்கப்படும் படை வீரர்கள் இருந்தனர். இவர்கள் முகமும் தலையும் உருக்கினால் செய்த தலைக்கவசத்தால் மூடியிருக்கும். பிரபுக்களைப் பார்த்து விட்டால் இவர்கள் கவசத்தின் முன் உள்ள ஒரு பகுதியை உயர்த்தி வணக்கம் செய்வார்கள்.

பின்னர் தலைக் கவசத்திற்குப் பதிலாக இவர்கள் தொப்பி போடத் தொடங்கினர். அப்போது பிரபுக்களைப் பார்த்ததும் தொப்பியை மேலே தூக்கி வணக்கம் கூறினர். இவர்கள் இப்படிச் செய்வதால், இவர்களின் கையில் இருந்த வெடிமருந்துக் கறை தொப்பியை அழுக்காக்கி விடுகிறது.

இதைத் தவிர்க்கத்தான் வலதுகையை உயர்த்தி 'சல்யூட்' அடிக்கத் தொடங்கினர் இப்படி உருவானதுதான் 'சல்யூட்' முறை.



படிப்பகம்

www.padippakam.com



அமோக வாரம் 06

# மேற்கே ஒரு குற்றம்!

எழுத்துலக வேந்தன் சுஜாதா

கணேஷ் தயங்கினான். "சரி! ஆனா ஞாபகம் இருக்கட்டும். எங்களுக்கு வழியில..."

"ஒண்ணும் ஆகாது. நான் வாக்குக் கொடுத்தா தவறமாட்டேன்... எங்களுக்கும் அந்தப் பொண்ணுக்குப் பதில் ஒரு ஆளு தேவையாயிருக்கு. அனாவசியமா பயந்துக்கினு செத்துப்போனா. உனக்குப் பயமில்லையே?"

"எனக்கா? இல்லை."

"டிக்கெட் வாங்கிடு! அப்ப பார்க்கலாம் உன் சாமர்த்தியத்தை!"

'என்ன டிக்கெட்? எதுக்கு டிக்கெட்?'

"வரேன்,தாங்க்ஸ்!" என்று மெதுவாகப் பின்னோக்கி நடந்தான்.

இருவரும் அந்த வண்டியின் பின்புறத்தில் ஏறிக் கதவை மூடிக்கொள்ள, கணேஷ் அது தாளிடப்படும் சமயம் திடுதிப் பென்று வெளியே பாயலாமா என்று யோசித்தான்.

'வேண்டாம்! முதலில் இந்த இடம் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும்...' கதவு தாளிடப்பட்டது!

பெரிய கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. வண்டி பின்நோக்கிச் சென்று வெளியில் வந்து சீறிப் புறப்பட்டது. வண்டிக்கு உள்ளே பழைய இருட்டு. கணேஷ் தன் பையிலிருந்து பர்ஸை எடுத்து சில பத்து ரூபாய் நோட்டுக்களைப் பிரித்து பின் கதவில் தெரிந்த இடை வெளியில் திணித்துத்தட்ட, அந்த ரூபாய் நோட்டுக்கள் சாலையில் சிதறிப் பறந்திருக்க வேண்டும்.

"என்ன செய்றீங்க பாஸ்?"

"சொல்றேன்... பேசாம வா!"

சுமார் முக்கால் மணி நேரப் பிரயாணத்துக்கு அப்புறம் வண்டி நின்றது.

பின் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது.



"இறங்குங்க!" என்று ஒரு அதட்டல்.

கதவைத் திறந்து இறங்கினார்கள். மையிருட்டு. கதவைத் திறந்துவிட்ட ஆசாமி உடனே முன்பக்கம் ஓடுவது மெலிதாகத் தெரிய, சடுதியில் வண்டி புறப்பட்டு விரைந்து செல்ல. அதன் சிவப்பு விளக்கு தூரத்தில் மறைந்தது.

தவளைகள் சப்தமிட்டன. எந்த இடத்தில் இருக்கிறோம் என்று தெரியவில்லை. மஹா இருட்டு. தூரத்தில் ஒரு உயரமான விளக்குத் தெரிந்தது. லைட்டரைத் தட்டினான். அதன் ஜோதி அற்பாயுசாக அணைந்தது.

"காஸ் ஆயிடுத்து!" என்றான்.

"நட!" என்றான் கணேஷ்.

"எந்தப் பக்கம்?"

"தனிக் காட்டில விட்டிருக்காங்க. ஏதாவது ஒரு திசையில நடந்தாகணும்...!"

மூன்று ஃபர்லாங் நடந்ததும் மெல்லிய வெளிச்சத்தில் ஒரு பஸ் ஸ்டாப்பின் சின்னத்தைப் பார்த்து அவர்கள் தெம்படைந்தார்கள். அரைமணி அங்கு காத்திருந்தார்கள். பஸ் வந்தது.

பட்டாபிராம்- பாரிமுனை மொஃபஸல் பஸ்.

இந்த ரூட்டில்தான் அவர்கள் கொண்டு சென்ற இடம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. வேண்டுமென்றே ஊருக்கு வெளியே கொண்டுவந்து விட்டு விட்டுப் போயிருக்கலாம்.

பஸ்ஸில், "தலைகால் புரியலை பாஸ்," என்றான் வசந்த்.

"நாற்பத்தஞ்சு நிமிஷத்திலிருந்து ஒருமணி வரை வேன்ல எவ்வளவு தூரம் போக முடியும்?"

"இருபது இருபத்தஞ்சு மைல் சராசரியா."

"அந்த இடம் சென்னையின் வெளிப்புறத்திலே எங்கேயோ இருக்குது. இருபத்தஞ்சு மைல் வட்டத்துக்குள்ளே."

"சரிதான்!"

"அந்த இடத்தில ஏதாவது கவனிச்சியா வசந்த்?"

"ஒரு விதமா வாசனை இருந்தது. அந்த ஷெட்டுக்குள்ளே!"

"எனக்கும் அந்த வாசனை தெரிஞ்சுது. என்ன வாசனை?"

"சொல்லத் தெரியலியே. ஒரு விதமான ஸ்மெல்! அந்த இடத்தைக் கண்டு பிடிக்கணுமா? முடியாதுன்னு நினைக்கிறேன்!"

"ஒரே ஒரு சான்ஸ் இருக்கு. அங்கேயிருந்து கிளம்பின உடனே நாலஞ்சு பத்து ரூபா நோட்டை சாலைல நடுவ விட்டிருக்கேன். முன்னால நம்பரை நோட் பண்ணி வெச்சிருக்கேன்."

வசந்த் யோசித்தான். "அதை யாராவது கண்டெடுத்து செலவழிச்சு...அப்புறம்?"

"அதில யாராவது அந்த நோட்டுக்களில் ஒண்ணையாவது அருகாமையில் உள்ள பாங்கில தன் அக்கவுண்ட்ல கட்டினா..."

"கட்டினா?"

"அந்த ஏரியா எதுங்கறது தெரிய வரலாம்!"

"அதுக்கு பாங்குகளுக்கு முன்னாலேயே சொல்ல வேண்டாமா?"

"சொல்லணும்! அதுக்கு பொலிஸ் உதவி தேவை!"

"அப்ப பொலிஸ்கிட்ட நாம சொல்லப் போறமா?"

"அதை நாளை சாயங்காலத்துக்குள்ளே தீர்மானிச்சுடணும்!"

"ஆமா அவன்கிட்ட என்ன என்னமோ ரீல் விட்டீங்களே! 'நானும் உங்களோட சேர்ந்துக்கறேன்; அந்தப் பெண் செய்ய இருந்ததை நான் செய்யறேன்'னு!"

"சட்டுன்னு அதான் எனக்குத் தோணிச்சு. அந்த 'வட்டம்' வரைஞ்ச உடனே சுருதி மாறிட்டாங்க பாத்தியா? நமக்கு எல்லாம் தெரியும்னு உடனே நம்பிட்டாங்க."

"வட்டத்திலே இருக்குது சூட்சுமம்!"

"டிக்கெட் வாங்கறேன்னு சொல்லியிருக்கிறீங்களே! எங்கே போறதா உத்தேசம்?"

"ஐடியாவே இல்லை! புரியவே இல்லை! ராத்திரி யோசிக்கணும். உடம்பெல்லாம் வலிக்குது. சரியான சவாரிடா!"

பாரிமுனையில் அவர்கள் இறங்கிக் கொள்ள கணேஷ், "வீட்டுக்குப் போய்ட்டு காலைல வந்துடு. நாளைக்குக் கொஞ்சம் அலைஞ்சு பார்க்கலாம்," என்று வசந்தை அனுப்பி வைத்தான்.

✿ ❑ ✿

'தக்க ஜம்! திரிகிட ஜம்!' ஜில்பா வைத்துக்கொண்டு ஒருவர் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு கையில் சின்ன ஜால்ரா வைத்துக்கொண்டு சொல்லுக் கட்டுக்களை உச்சரிக்க, மொஸாய்க் இழைத்த அந்த ஹாலில் எட்டு ஒரே சைஸ் பெண்கள் சதங்கை ஒலிக்க நடனம் செய்து கொண்டிருந்தார்கள். பின்னால் நடராஜர் சிலை- ஊதுவத்திப் புகை.

அந்தப் பெண்கள் தேர்ந்தெடுத்தவர்கள் போல் தெரிந்தார்கள். ஒரே உயரம், ஒரே உடற்கட்டு. எல்லாரும் ஒரே சமயத்தில் புன்னகை செய்தபோது பல் வரிசைகள்கூட ஒரே மாதிரி இருந்ததாகத் தோன்றியது. இப்போது அவர்களில் ஒருத்தி மட்டும் சற்று முன் வந்து அபிநயத்தாள். நட்டுவாங்கம் செய்பவர் கண்களில் மை இருந்தது. பக்கத்தில் வெற்றிலைச் செல்லம் இருந்தது.

பாதி நடனத்தில் பஸ்ஸர் ஒலித்தது. அடாணா ராகத்தின் மத்தியில் ஒரு அபசுரமாக விர்ர்ர் என்றது. அந்த முன்னணிப் பெண் அலுத்துக் கொண்டாள். நடனம் நின்றது. பெண்கள் நெற்றி வியர்வையை ஒற்றிக்கொண்டார்கள். "ராஜி யாரு பாரு!"

ராஜி நடனமாக நடந்து சென்று பார்த்துத் திரும்பி வந்து, "யாரோ கணேஷாம்... லாயராம். உங்களைப் பார்க்கணுமாம்!" என்றாள்.

"சட் என்ன ஒரு டிஸ்டர்பன்ஸ்! வரச் சொல்லு."

கணேஷும், வசந்தும் உள்ளே நுழைந்தார்கள்.

"மிஸ் ரேணுகா?"

"எஸ்?" என்றாள் எரிச்சலுடன்.

"நமஸ்காரம்! என் பேர் கணேஷ். இது வசந்த். உங்களைப் பற்றி நான் அடிக்கடி பேப்பரில் படிச்சிருக்கேன். உங்க பர்ஃபார்மன்ஸையும் பார்த்திருக்கேன்... நேர்ல சந்திக்கிறதுக்கு..."

"விஷயம் என்ன சொல்லுங்க. வி ஆர் வெரி பிஸி ரைட் நௌ!"

ரேணுகாவுக்கு எல்லா சினிமா நடிகைகளின் சாயலும் இருந் தது. முந்தானையை இடுப்பில் செருகி இருந்தாள். நல்ல சிவப்பு. சின்ன உதடுகள். கன்னத்தில் இருந்த ரோஜா நிறம் இயற்கையானதாகப் பட் டது. நடன உடை, மார்பை விரசமில் லாமல் எடுத்துக் காட்டியது. இடுப்பு ஒரு கைப்பிடிக்குள் அடங்கிவிடும் போல இருந்தது.

வசந்த் அந்தப் பெண்கள் வரிசையை ஒவ்வொருவராகப் பார்த்தான். தீபா இவர்கள் போலத்தான் இருந்தாள்.

"உங்க க்ரூப்ல இருந்த தீபாங்கிற பெண்ணைப் பத்தி விசாரிக்க வந்தோம்!"

தீபாவின் பெயரைக் கேட்டதும் ரேணுகாவின் முகம் மாறியது.

"அவ இறந்து போயிட்டா- ஒரு விபத்தில்!"

"தெரியும்."

"இப்ப என்ன கேக்கணும் உங்களுக்கு?"

"அவளைப்பத்தி சில விவரங்கள்!"

"நாங்க இப்ப நடன ஒத்திகை பார்த்துக்கிட்டிருக்கம். அரைமணி வெய்ட் பண்றிங்களா?"

"தாராளமா!" என்றான் கைக் கடிகாரத்தைப் பார்த்து.

"வெளில விஸிட்டர்ஸ் ரூம் இருக்கு. அங்கே..."

"ஓ எஸ்."

விஸிட்டர்ஸ் ரூமில் அவர்கள் காத்திருக்க அந்தப் பழைய வீக்லியைப் புரட்டினான். கலாராதனாவைப்பற்றி கலர்ப் படங்களுடன் ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

"இதோ தீபா!" என்று அந்தப் போட்டோவில் காட்டினான். எட்டுப் பெண்களுடன் ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள்.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்

# 'அன்ன பூரணி அம்மா'

## பயணம் - 12

ஏ.கே. ராஜகோபால்

இஸ்மாலியாவிலிருந்து சூயஸ் கால்வாய் முடிவான இடத்திலுள்ள 'போட் செயிட்'டை 'அன்னபூரணி' சென்றடைந்தாள்.

அங்கிருந்து புறப்பட்ட மூன்றாவது நாள் அந்தப் பயங்கரம் எதிர்நோக்கும் என்று எவருமே அந்த நேரம்வரை எதிர்பார்க்கவேயில்லை!

ஆம்-

அந்தப் பயங்கரம் நடந்தே விட்டது!

"நாம் முடிந்தோம்!" என்ற முடிவைத் தவிர எம்மால் வேறொன்றுமே நினைக்க முடியவில்லை!" என்று அந்தப் பயங்கர நினைவை இரை மீட்டார் இரத்தினசாமி.

"சூறாவளி.

அன்னபூரணி போய்க்கொண்டிருந்த ப்க்கத்திலிருந்து எதிர்த்திசை நோக்கி, கட்டுமீறிக் கட்டுக்கடங்காது பாயத் தொடங்கியது!

அதிர்ந்து போனோம்.

நாலா பக்கத்திலிருந்தும் காற்றுப், பயங்கரமாக வீசிக்கொண்டிருந்தது என்பதை மட்டும் உணர முடிந்தது.

அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்களாக,

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் பதறிக் கொண்டிருந்தோம்.

காற்றோடு காற்றாகத், தனது எண்ணப்படி கப்பல் போய்க்கொண்டிருந்தது; பாயைக் குறைத்தோம்.

ஆனாலும் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல், பாய் கிழிந்து கொண்டிருந்தது. சூறாவளி கப்பலை மூழ்கடித்து விடுமோ? என்ற அச்சம்!

ஒரு பகலும், ஒரு இரவும் கப்பல் போகிற பக்கம் போகட்டும் என்று இருந்தோம். இருநூறு மைல்களுக்கு அடித்து வரப்பட்டோம்!

இப்போது ஓரளவு இயற்கையின் தாண்டவம் குறைந்துவிட்டது!

ஓரிடத்தில்-

'லெட்' ஒன்றில், கயிற்றைக் கட்டி அதன் மூலம் ஆழத்தைப் பார்க்கும் முறையில், ஆழத்தின் உயரத்தைக் கணித்தோம்.

84 அடி.

நங்கூரமிட்டுக் குறிப்பிட்ட இடத்தில் கப்பலை நிறுத்துவதற்கு அதுதான் சரியான இடம் என்பதைக் கணித்துக் கொண்டோம்.

அந்த இடத்தில் கப்பலை நங்கூரமிட்டுக் கொண்டோம்.

'கைபா' என்ற இடம்தான் அது. பெய்ரூட்டிலிருந்து இருபத்தைந்துமைல் தூரத்தில் இருந்தது கைபா!

விடிந்துவிட்டது.

அலையும், பேரலையும் ஓரளவு ஓய்ந்துவிட்டது.

பெய்ரூட் துறைமுகத்துக்குக் கப்பலைக் கொண்டு சென்றோம்.

பாய் கிழிந்து, பலவிதமான சேதகங்களுடன், பெய்ரூட் துறைமுகத்தில் 'அன்னபூரணி' நின்றுகொண்டிருந்தாள்.

கப்பல் பயணத்தின்போது, நாங்கள் போதியளவு 'கன்வஸ்' துணியைக் கொண்டு சென்றோம். இதனால் கிழிந்த பாய்களை மாற்றி அமைத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைத் திருத்திச் செப்பனிட்டுக்கொண்டு,

மீண்டும் புறப்பட்டோம்!

துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, சில மைல் தூரங்கள் சென்றபின்னர்தான்! கால நிலை இன்னமும் சீராகவில்லை என்பதை உணர்ந்து கொண்டோம்.

பெய்ரூட் துறைமுகத்துக்கே மீண்டும் சென்றோம்.

பெய்ரூட் துறைமுகத்தில் இறங்கி விட்டோம். பெய்ரூட்டைச் சுற்றிப் பார்க்கும் ஆசை எனக்கு ஏற்பட்டுவிட்டது! நண்பர்களுடன் வெளியே சென்றேன்,

'அமெரிக்கா யூனிவர்ஸிட்டி ஒவ் பெய்ரூட்'டைப் பார்த்தோம்: அங்கு படிக்கிற பையன்கள் எங்களைச் சுற்றிக் காண்பித்தார்கள்.

இலங்கையர் என்பதை மட்டுமல்ல, வல்வெட்டித்துறை என்ற இடத்திலிருந்து வந்திருப்பதையும் அவர்களிடம் சொன்னோம்.

எங்கள் துணிவைப் பாராட்டினார்கள்.

அந்தப் பல்கலைக் கழகத்திலுள்ள விரிவுரையாளர்கள் சிலரைச் சந்தித்துப் பேசினோம். நம் நாட்டைப்பற்றியே துருவித் துருவிக் கேட்டார்கள்.

பெய்ரூட்டிலிருந்து புறப்பட்டோம்.

கப்பலுக்குள் ஒருவர் நோய்வாய்ப்பட்டார்.

போட் செட்டிலிருந்து புறப்படும்போது அந்தக் கடலில் நன்கு பழக்கப்பட்டவரான 'பயிலட்' சக்காலியா என்பவர்தான் எங்களுடன்- றொபின்சனின் ஏற்பாட்டின்படி வந்தார்; அவர் தான் மிகவும் சுகயீனம் அடைந்தார். சூறாவளியின்போது, அவர் உடல் பாதிக்கப்பட்டு விட்டது.

எழுபது வயது அப்போது அவருக்கு; முதுமை எல்லாம் -சேர்ந்து அவரை இந்த நேரம் பார்த்து நோய்வாய்ப்படுத்திவிட்டது!

பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட நாம், கிறீட் போய்ச் சேர்ந்ததும். சக்காலியாவை ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம்.


சக்காலியா இனிக்கடல் பிரயாணம் செய்யக்கூடாதெனக் கண்டிப்பான உத்தரவை டாக்டர் போட்டு விட்டார்!

டொனால்ட் மக்கூஸ் என்ற மற்றும் ஒருவரை அழைத்துச் சென்றோம்.

●●●

கிறீட்டிலிருந்து ஜிபிறோல்டருக்கு-

அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடக்க வேண்டும், மிகச் சோதனையான கட்டம்!



பாயின் உதவியுடன் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடப்பது சுலபமான காரியமா?

ஜிபிறோல்டர் துறைமுகத்தை 'அன்னபூரணி' சென்றடைந்தாள்!

அப்போது -

'ஸ்பானிஷ்-பிராங்கோ' கலவரம் நடந்து கொண்டிருந்தது!

ஜிபிறோல்டரில் தில்லையம்பலம் இலங்கைக்குத் திரும்பினார்; மேலும் ஒருவர் குறைந்துவிட்டார்!

ஏடனில் ஏற்கனவே சேது நவரத்தினராசா, இலங்கை சென்று திரும்பவில்லை!

ஜிபிறோல்டரிலிருந்து புறப்படும் போது,

'ஸ்பானிஷ்-பிராங்கோ' கலவரத்தில் ஈடுபட்ட அமெரிக்கன் ஒருவன் கப்பலுக்குள் ஏறிக்கொண்டான்!

கைதியாக இருந்து, அவர்கள் பிடியிலிருந்து, தப்பி ஓடி வந்தவன்! ஜிபிறோல்டரிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மூலமாக எங்கள் கப்பலுடன் தொடர்பு கொண்டான். றொபின்சனின் சம்மதத்தோடு, அந்த அமெரிக்கனை தம்பிப்பிள்ளை தண்டையல் ஏற்றிக்கொண்டார்!

பயங்கர வெடிச்சத்தம்!

ஸ்பெயினுக்குச் சொந்தமான 'பிளீட்' ஒன்று வந்து கொண்டிருந்தது!

'அன்னபூரணி'யைச் சுக்குநூறாக்க ஒரே ஒரு வினாடிபோதும், அந்த பிளீட்டுக்கு!

-அன்னபூரணி கொடியை இழுத்து மரியாதை செலுத்தினாள்!

ஒருதடவையல்ல, பல தடவை கொடியை இழுத்து, இழுத்து 'சல்யூட்' செய்யப்பட்டது!

கிட்டவந்த ஸ்பெயின் வீரர்கள், "ஆயுதங்கள் கொண்டு போறியளா? என்ன விஷயம்?" என்று கேட்டார்கள்.

அன்னபூரணியின் மேல் தளத்தில்-

இரத்தினசாமிதான் அப்போது நின்று கொண்டிருந்தார்!

ஆங்கிலத்தில், அவர்களுக்குப் பதில் சொன்னார் இரத்தினசாமி!

பயணத்தின் நோக்கம் பற்றி விளக்கினார்கள்!

விட்டுவிட்டார்கள்.

அடுத்த 'கண்டமும்' அன்னபூரணிக்கு கழிந்துவிட்டது!

கனேரியாத் தீவுகளைத் தாண்டி விட்டார்கள்!

(அடுத்த வாரமும்...)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 05

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஷ்குமார்
எழுதியுள்ள
'விறு விறு காதல்கதை....
உங்கள் இதயத்தில்
இந்தக் கதையின் நாயகி
'நிலா'வுக்கும்
இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

அதிர்ச்சி ஈஷிக் கொண்ட குரலோடு நிலா ரிஸீவரில் வார்த்தைகளை உதிர்த்தாள்.

"நேத்து இராத்திரி நீங்க பேசினதுக்கும், இப்போ பேசிக்கிட்டு இருக்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கே...? என்னாச்சு உங்களுக்கு? எதுக்காக நான் கடவுளை வேண்டிக்கணும்...?"

"நிலா..! உனக்கு இந்த ஜோதிடம்- ஜாதகம் இதிலெல்லாம் நம்பிக்கையுண்டா...?"

"ஓரளவுக்கு..."

"எனக்கு கொஞ்சம் அதிகமாகவே... அதுல ஈடுபாடு உண்டு. நேத்து இராத்திரி உன் கூட ஃபோன்ல பேசினபிறகு ஏதேச்சையா இங்கே பிரபலமாயிருக்கிற ஒரு அஸ்டாரலஜரைப் பார்த்தேன். அவரோட பேர் நியூமன். இங்கே வெரி பாப்புலர். அவர்கிட்டே என்னோட கையைக் காட்டினேன். பார்த்துட்டு என்ன சொன்னார் தெரியுமா..?"

"என்ன சொன்னார்...?"



"எனக்குக் கல்யாணமே நடக்காதாம். அந்த பாக்கியமே இல்லையாம்."

"கல்யாணம் நிச்சயமாயிருக்கிற விஷயத்தைச் சொன்னீங்களா...?"

"சொன்னேன்..."

"அதுக்கு அவரோட பதில் என்ன..?"

"இப்போ கல்யாணம் நிச்சயமாகியிருந்தாலும் அது நடக்காமே போக வாய்ப்பிருக்காம்..."

நிலாவின் மனசுக்குள் சின்னதாய் ஒரு கலக்கம் எட்டிப் பார்த்தாலும், அதைத் தன் குரலில் காட்டிக்கொள்ளாமல் சொன்னாள்:

"ஜோசியர் சொல்றதெல்லாம் வேத வாக்கு ஆயிடாது."

"அப்படியில்லை நிலா. நியூமன் ஒரு மரத்தடி ஜோசியர் கிடையாது. கை ரேகைகளை விஞ்ஞான பூர்வமாய் பார்த்து புள்ளிகளைக் கணக்குப்போட்டு பலன்களைத் துல்லியமாச் சொல்லக் கூடியவர். இங்கே அரசியல் ரீதியா அவர் சொன்னது நிறையவே பலிச்சிருக்கு..."

"நம்ம விஷயத்துல அவரோட கணிப்பு பொய்யாகப் போகுது..."

"நிலா..."

நிலா சிரித்தாள். "நீங்க ஒரு கம்பியூட்டர் இன்ஜினியர். ஒரு ஜோசியர் சொன்னதுக்காகப் போய் மனசு ஒடிஞ்சுடக் கூடாது. நம்ம கல்யாணம் நிச்சயமா நடக்கத்தான் போகுது.... ஜோதிடர் நியூமனை மறந்துட்டு சந்தோஷமா இருங்க..."

"நீ பேசறதைக் கேட்கும்போது எனக்கு கொஞ்சம் சந்தோஷமாயிருக்கு... இராத்திரிக்கு மறுபடியும் ஃபோன் பண்றேன். இந்த ஜோதிட விஷயம் வேற யார்க்கும் தெரிய வேண்டாம்...!"

"தெரியாது..."

இரண்டு முனைகளிலும் ரிஸீவர் கவிழ்க்கப்பட்டு விட நிலா அங்கிருந்த நாற்காலியில் தளர்வாய் உட்கார்ந்தாள்.

மூளைக்குள் யோசனைகள் குடைந்தன. 'இது என்ன புதுக்குழப்பம்..?' 'ஜோசியப்படி ஒரு வேளை கல்யாணம் நடக்காமல் போய் விடுமா...?'

ஜன்னலில் வைகறை இருட்டு கரைந்து கொண்டிருக்க, நிலா இடது கை விரல்களால் நெற்றியைப் பிடித்தபடி நிமிஷங்களைச் செலவழித்தாள்.

'திடும்'மென்று அவளுடைய தோள்பட்டை உசுப்பப்பட்டது. நிமிர்ந்தாள்.

எதிரே அம்மாக்காரி பாக்யம்... இடுப்பில் இரண்டு கைகளையும் பதித்தபடி கேட்டாள்: "என்னடி இது...? வாசலைப் பெருக்கி தண்ணீர் தெளிச்சு கோலம் போடாமே... இப்படி கண்ணைத் தொறந்துகிட்டே தூங்கறே? என்னாச்சு உனக்கு? ஏன் இங்கே வந்து உட்கார்ந்துட்டிருக்கே...?"

"ஒண்ணுமில்லேம்மா...! லேசா தலைவலி. அஞ்சு மணிக்கே எந்திரிச்சுட்டேன். ஒரு மாத்திரை போட்டுகிட்டு அப்படியே உட்கார்ந்துட்டேன்..."

"ஃபோன்ல யார் கூடவோ பேசிட்டிருந்த மாதிரி இருந்தது..?"

"ஃபிரண்ட் ஒருத்தி பேசினா..."

"சரி....போய் படுத்துக்கோ...! நான் இன்னிக்கு வாசல் தெளிச்சு கோலம் போட்டுடறேன்..."

நிலா தலையசைத்துவிட்டு- அறையை நோக்கிப்போக, பாக்யம் முனகியபடி சமையலறையை நோக்கிப் போனாள்.

'வழக்கமா காலையில் எந்திரிச்சு சுறுசுறுப்பா இருக்கிறவ இன்னிக்கு ஏன் இப்படி இருக்கா...? மனசுக்குள்ளே எதை வெச்சி திணிச்சிட்டிருக்காளோ...?'

●●●

அழைப்பு மணி அலறும் சத்தம் கேட்டு நான் எழுதுவதை நிறுத்தினேன். யாரோ வந்திருக்கிறார்கள்.

'யார்...?'

எழுதாமல் காத்திருந்தேன். ஒரு நிமிஷ நேரத்திற்குப் பின் என் மனைவி உள்ளே வர, கேட்டேன்.

"யார் வந்திருக்காங்க...?"

என் மனைவி தன் கையில் வைத்திருந்த ஒரு விசிட்டிங் கார்டை நீட்ட, வாங்கி அதில் பார்வையை ஒட்ட வைத்தேன்.

பால்வண்ணன்- சினி டைரக்டர்.

என் மனைவியை ஏறிட்டேன்.

"என்ன விஷயம்னு கேட்டியா?"

"கேட்டேன். உங்ககூட பேசணுமாம்!" பேனாவை மூடி வைத்துவிட்டு எழுந்து போனேன். வரவேற்பறையில் அந்த பால்வண்ணன் டிகாஷன் நிறத்தில் உட்கார்ந்திருந்தார். சினிமாக்காரர்களுக்கே உரித்தான ரெடிமேட் சிரிப்போடு எழுந்து நின்று கும்பிட்டார்.

"வணக்கம் ஸார்...!"

"வணக்கம்... உட்காருங்க..."

உட்கார்ந்தார்.

நானும் உட்கார்ந்து கொண்டே கேட்டேன், "என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஷ்குமார்

பால்வண்ணன் சிரிப்பு மாறாமல் நாற்காலியின் நுனிக்கு நகர்ந்தபடி சொன்னார்:

"புதுசா ஒரு படம் பண்ணலாம்னு எண்ணம். கைவசம் ஒரு புரொட்யூசர் இருக்கார்...."

"சரி..."

"உங்க கதையை படமா பண்ணலாம்னு ஒரு எண்ணம்..."

"சந்தோஷம்! என்ன மாதிரிக் கதை வேணும்...?"

"உங்க கதைகள்ல பலதை நான் படிச்சிருக்கேன். இருந்தாலும் சமீபத்துல நீங்க எழுத ஆரம்பிச்சிருக்கிற 'முள் நிலவு'ங்கிற ஒரு தொடர்கதையோட நாலு அத்தியாயங்களைப் படிச்சுப் பார்த்தப்ப அந்த சப்ஜெக்ட் கொஞ்சம் வித்தியாசமாயிருந்தது."

நான் புன்னகைத்தேன். "கதையை இன்னமும் முழுசா எழுதி முடிக்கலை... அது ஒரு வித்தியாசமான சப்ஜெக்ட்ன்னு எப்படி சொல்றீங்க...?"

"கதையோட ஆரம்பம் சொல்லுதே...! அந்த சப்ஜெக்ட் புரொட்யூசர்க்கும் ரொம்ப பிடிச்சுப் போச்சு. உங்ககிட்ட முழுக் கதையையும் கேட்டுட்டு ஒரு அட்வான்ஸ் கொடுத்துட்டு போகலாம்ன்னு வந்தேன்..."

"ஸாரி! இப்பவே முழுக்கதையையும் சொல்ல முடியாது. தொடர் முடிச்ச[illegible]னாடி வாங்க. பார்க்கலாம்..."

"தொடர், பாட்டுக்கு பத்திரிகையில வந்துட்டிருக்கட்டும் ஸார்... அதுக்குள்ள ஸ்க்ரிப்டை நாம தயார் பண்ணிடுவோம்."

"அது முடியாது..."

"ஏன் ஸார்...?"

"இந்த 'முள் நிலவோ'ட முழுக்கதை எனக்கே தெரியாது. ஏன்னா- அது ஒரு உண்மைக் கதை. ஒரு பெண்ணோட வாழ்க்கையில் நடந்த. இப்போ நடந்துக்கிட்டிருக்கிற நிகழ்ச்சிகளைத்தான் கதையா எழுதிக்கிட்டிருக்கேன். அந்தப் பெண்ணோட வாழ்க்கையில் நாளைக்கு என்ன மாதிரியான நிகழ்ச்சிகள் நடக்கும்னு யார்க்கும் தெரியாது."

பால்வண்ணன் குழப்பமாய் என்னைப் பார்த்தார்.

"என்ன ஸார்... அப்படி சொல்றீங்க...? கதை என்னன்னு உங்களுக்கே தெரியாதா?"

"தெரியாது."

"ஆச்சரியமாயிருக்கு...!"

"ஆச்சரியம்தான். அந்தப் பொண்ணோட வாழ்க்கையில் இன்னிக்கு வரை நடந்த சம்பவங்கள் எனக்குத் தெரியும். நாளைக்கு நடக்கப்போற சம்பவங்கள் தெரியாது. நாளைக்கு என்ன நடக்குதுன்னு பார்த்துத்தான் எழுத முடியும்..."

"அப்படின்னா...?"

"தொடர் முடிஞ்ச பின்னாடி தான் இது எது மாதிரியான சப்ஜெக்ட்ன்னு பிடிபடும்..."

"சரி.. ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் கேட்டுக்கறேன் ஸார்..."

"கேளுங்க.."

"நிலாவுக்கும் ஸ்டேட்ஸ்ல இருக்கிற கிருஷ்ணகாந்துக்கும் கல்யாணம் நடக்குமா... நடக்காதா...?"

நான் சிரித்தேன்.

"என்ன ஸார் சிரிக்கிறீங்க...?"

"வாரா வாரம் கதையைப் படிச்சுட்டு வாங்க. கல்யாணம் நடந்ததா இல்லையான்னு தெரியும்..."

"என்ன ஸார்... நீங்க! எதையுமே தெளிவா சொல்ல மாட்டேங்கறீங்க...?"

"அதுமாதிரியான கதை! நான் என்ன பண்ணட்டும்?"

"சரி.. தொடர் எப்ப ஸார் முடியும்?"

பால்வண்ணன் வெறுத்துப் போய் பார்த்தார். "ஒரு ரெண்டு மாசம் கழிச்சு வந்து பார்க்கட்டுமா?"

"எதுக்கும்... ஒரு நாலு மாசம் கழிச்சே வாங்க..." நான் கைகளைக் குவிக்க அவர் எழுந்து விடை பெற்றுக் கொண்டார்.

அறைக்கு வந்தேன்.

அத்தியாயம் எனக்காக பாதியில் காத்திருந்தது. ஒரு நிமிஷம் கண்களை மூடி பால்வண்ணனை மனசில் இருந்து துரத்திவிட்டு, நிலாவைப் பற்றிய எண்ணங்களை மனதின் மையத்திற்குக் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு பேனா மூடியைத் திறந்தேன்.

அத்தியாயத்தைத் தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன்.

★★

காலைச் சிற்றுண்டியை காலை எட்டு மணிக்கெல்லாம் முடித்துக் கொண்ட சிவராஜன், நிலா இருந்த அறைக்கு முன்பாய் வந்து நின்று குரல் கொடுத்தார்.

"நிலா..."

"என்னப்பா...?"

"நேத்திக்கு நீ செலக்ட் பண்ணிக் குடுத்த பத்திரிகை டிசைனையே பிரிண்ட்டுக்குக் குடுத்துடலாமா...?"

"ம்..."

"இங்க் என்ன கலர்...?"

"மெஜண்டா...ப்ளஸ் ப்ளூ..."

"ரெண்டு கலர் போதுமாம்மா...?"

"போதும்...போதும்..."

"ஏம்மா! முகமெல்லாம் ஒரு மாதிரியிருக்கு?"

"இராத்திரி சரியானபடிக்குத் தூக்கமில்லேப்பா..."

"சரி...போய் ரெஸ்ட் எடுத்துக்க... நான் பிரிண்டர்ஸ் வரைக்கும் போயிட்டு வந்துடறேன்."

"சரிப்பா...!"

சிவராஜன் சமையலறையில் மனைவியிடமும் சொல்லிக்கொண்டு, வாசல் கதவைத் திறந்து கொண்டு சிறிய காம்பௌண்ட் கேட்டுக்கு வந்தார்.

கேட்டின் கொக்கியை அவிழ்க்க முயன்ற விநாடி-

பளீரென்ற பனியில் செய்த தினுசில் அந்த வெள்ளை நிற பென்ஸ் கார் வாசலில் வந்து நின்றது.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 07

கவியரசு கண்ணதாசன்
எழுதிய—அவரது
சுயசரிதத்தின்
முக்கிய பக்கங்கள்
உங்கள் முன் விரிகின்றன.
'எப்படி வாழ வேண்டும்
என்பதற்காக அல்ல;
எப்படி வாழக்கூடாது
என்பதற்கான
வழிகாட்டிகள்' இவை....

'ரத்தின தீபம்' என்ற படம் ஏற்கனவே வங்காள மொழியில் எடுக்கப்பட்ட படமாகும்.

அதனைத் தேவகிபோஸ் அவனுக்குப் போட்டுக் காட்டினார்.

வங்காளியிலிருந்து மொழிபெயர்த்துச் சொல்வதற்கு வங்காளம் படித்த தமிழ் நண்பர் ஒருவரையும் அவனுக்குத் துணையாக அமர்த்தினார்.

அந்த நண்பர் ஒரு சாஸ்திரியார். மிகவும் உன்னதமான மனிதர்.

'வங்கத் தமிழன்' என்னும் புனைபெயரில் தமிழ்ப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார்.

வங்காளத்திலேயே பல ஆண்டுகள் வசித்து வருபவர். 'சதர்ன் அவின்யூ'வில் ஒரு சிறு வீட்டில் அவர் குடியிருந்தார்.

கல்கத்தாவில் 'சதர்ன் அவின்யூ' என்பது தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும்.

அந்த நண்பர் வங்காள 'ரத்தின தீப'த்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

எழுதுவதில் அவனுக்கு ஆசையிருந்தும்கூட நினைவெல்லாம் மாநாட்டில் இருந்ததால் எழுதாமலேயே பொழுதைக் கழித்தான்.

இரண்டாவது முறையாக மதுப்பழக்கத்தை அவனுக்கு ஏற்படுத்திய இடம் கல்கத்தா நகரமாகும்.

மொழிபெயர்ப்பாளராகிய சாஸ்திரியார் மிகவும் நல்லவர். அவர் மதுவைத் தொடமாட்டார்.

ஆனாலும்கூட நட்பு முறையில் அவனை அவர் வெறுத்ததில்லை.

அந்தச் சுவை வந்த உடனே மாநாட்டின் நினைவை அவன் மறக்கத் தொடங்கினான்.

'ரத்தின தீப'த்தைத் தமிழில் எழுதி முடித்தான்.

அதற்காக அவன் பெற்றுக்கொண்ட ஊதியம் ஹொட்டல் பாக்கிக்கே சரியாக இருந்தது.

கல்கத்தா அனுபவங்கள் சுவையானவை.

அங்கே 'கிராண்டு ஹொட்டல்' என்று ஒரு ஹொட்டல் உண்டு.

இரண்டு மணி வரையிலே 'பால்ரும்' நடனம் நடைபெறும்.

அந்த ஹொட்டலுக்கு அவன் போனான்.

'கோட்டும் சூட்டும்' போடாதவர்களை அங்கே அனுமதிக்கமாட்டார்கள்.

'வேட்டி கட்டிய மனிதனுக்கு அங்கே இடமில்லை' என்று அவனைத் திருப்பியனுப்பி விட்டார்கள்.

கோட்டும் சூட்டும் தேவையில்லாத 'பார்' ஒன்றை அவன் நாடினான்.

அங்கேயும் சிறிய அளவில் 'பால்ரும்' நடனம் உண்டு.

ஆனால் 'கிராண்ட் ஹொட்டலு'க்கு வருவதுபோல் உயர்ந்த ரகப் பெண்கள் அங்கே வருவதில்லை.

கீழ்த்தரமான விலைமாதுகளே அங்கே வருவது வழக்கம்.

அங்கே போய் சிறிது நேரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு பெண்ணும் ஆடி முடித்த பிற்பாடு அந்தப் புதியமுகத்தைத் தேடி வந்து பேசினார்கள்.

அவன் சார்பிலே மதுவிற்கு 'ஆர்டர்' கொடுத்தார்கள். சாப்பிட்டுவிட்டு பில்லை அவனிடமே கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இது அந்த இடத்து மரபு என்று அவனுக்குத் தெரியாது. நல்லவேளையாகக் கையில் நிறையப் பணம் வைத்திருந்தான்.



அந்தக் கூட்டத்திலும் வங்காளத்துப் பிராமணப் பெண் ஒருத்தி அடக்கமாக ஓர் ஆடவனோடு உட்கார்ந்து சாப் பிட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த ஆடவன் அவளையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு அவனுக்கு எதிரேயிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

அவனாகவே பேச்சை ஆரம்பித்தான்.

"நீங்கள் மதராஸ்காரரா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றான் அவன். மெது மெதுவாகப் பேசத் தொடங்கி அந்தப் பெண்ணைக் காட்டி "அவளை உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்று கேட்டான்.

அந்த ஆடவன் நல்ல ஆங்கிலம் பேசினான்.

அவனோ அரைகுறை ஆங்கிலத்தில் அவனுக்குப் பதில் சொன்னான்.

"எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கிறது."

"நாம் போவோமா?" என்று அவன் கேட்டான்.

மகிழ்ச்சியோடு அவனும் புறப்பட்டான்.

ஒரு பஞ்சாபி டிரைவர் ஓட்டிய 'டாக்ஸி'யை மூவரும் அமர்த்திக் கொண்டார்கள்.

அந்த ஆடவன் 'டாக்ஸி' டிரைவரிடம் ஏதோ ஓர் இடத்தைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டான்.

'டாக்ஸி' புறப்பட்டது. அந்த ஆடவன் முன்னால் அமர்ந்திருந்தான். அவனும் அவளும் பின்னால் அமர்ந்திருந்தார்கள்.

அவள் வங்காள மொழியில் பேசினாள்.

அதில் எதுவும் அவனுக்குப் புரியாவிட்டாலும், பேசிய 'தொனி' குழைவாக இருந்தது.

ஏறக்குறைய பதினைந்து மைல்களுக்குமேல் டாக்ஸி போய்க்கொண்டிருந்தது. அங்கே ஒரு சிறிய அழகிய வீடு. அது கிராமச் சூழ்நிலையில் தோற்றமளித்தது.

ஒரு குடும்பம் அதில் குடியிருந்தது. அதற்குள்ளே அவனை அழைத்துச் சென்றார்கள்.

அந்த வீட்டுக்காரர்களுக்கும் அந்த ஆடவனுக்கும் உறவு இல்லை.

ஹொட்டல்களில் பொலிஸார் சோதனையிடுகிறார்கள் என்பதற்காக அந்த மாதிரியான வீடுகளைப் பயன்படுத்துவது வழக்கம்.

அன்று அவன் அங்கே தங்கினான்.

மொழி புரியாத காதல் ஊமைக்காதல்.

அந்த ஊமைக் காதலர்கள் ஓரிரவு அங்கே குடியிருந்தனர்.

வங்காளிகளின் சுபாவம் பொதுவாகவே உயர்ந்தது. வயிற்றுப் பாட்டிற்காக அவர்கள் தீயகாரியங்களைச் செய்தால்கூட நாணயத்தோடு நடந்து கொள்கிறார்கள்.

பொதுவாக பஞ்சாபி 'டாக்ஸி' டிரைவர்கள் மிகவும் உத்தமமானவர்கள்.

அந்தப் பெண்ணின் பெயர் 'சாரதா' என்பதாகும்.

வங்காள தொனியில் 'ஷாரதா' என்று அழைப்பார்கள்.

புதிதாக வந்து அகப்பட்டுக்கொண்ட மனிதனைக் கொள்ளையடிக்கலாம் என்ற எண்ணம் கிஞ்சித்தும் அவளிடமில்லை.

அதிகாலையில் அவளுடைய முகவரியைப் பெற்றுக்கொண்டு பிராட்வே ஹொட்டலுக்குத் திரும்பினான்,

சுவையான அனுபவங்களோடு கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டான்.

அப்போது சென்னையில் 52வது ஆண்டு பொதுத் தேர்தல் ஆரம்பமாகி விட்டது.

அந்தத் தேர்தலில் கழகத்தின் பத்திரத்தில் கையெழுத்துப் போடுபவர்களுக்கு கழகம் ஆதரவு தரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கழகத்திலிருந்து அவன் விலகியது பற்றி அண்ணாத்துரையும் நெடுஞ்செழியனும் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று அவன் அறிய விரும்பினான்.

குளித்துவிட்டுத் தன் சகோதரரின் காரை எடுத்துக்கொண்டு சேத்துப்பட்டிலிருந்து நெடுஞ்செழியனைப் போய்ப் பார்த்தான்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

# சூடு



நித்யா அவசர அவசரமாக அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்த போது பி. பகல் மணி மூன்று முப்பது. அங்கு அவள் கணவன் கார்த்திக்கைக் கண்டு, அதிர்ந்து போனாள்.

மாலை ஏழு மணிக்கு வீடு திரும்பும் கணவனை மூன்றரை மணிக்குச் சந்தித்தால் நித்யாவால் ஆச்சரியம் விழுங்காமல் என்ன செய்யும்?

"உங்களுக்கு என்னாச்சு?" பதறினாள் நித்யா. தோளில் தொங்கிய கைப்பையைக் கதிரையில் வீசிவிட்டுக் கணவனின் முகத்தை ஆராய்ந்தாள்.

"எனக்கொண்ணும் ஆகல. நீ எதுக்கு ஆபீஸ் முடிய முந்தி வந்த?" கார்த்திக்கின் உதட்டில் புன்னகை நெளிந்தது.

"அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க. இன்னிக்கி பிரபாவோட ஏ.எல். ரிசல்ட்ஸ். நம்ப சீனியர் அக்கௌண்டன் மகள் மஞ்சு-அதான் நம்ப பிரபாவோட படிக்கிறவள், நாலு பாடத்தில ஏ வாங்கியிருக்கு. மெடிசினுக்கு செலக்ட் ஆயிடுவாளாம். நம்ம பிரபாட ரிசல்ட்டைக் கேட்டு, ஆபீஸ்ல எல்லாரும் என்னைக் குடைஞ்சி எடுத்திட்டாங்க. அதனால..." அவள் சொல்லி முடிப்பதற்குமுன் கார்த்திக் குறுக்கிட்டார்.

"அவளைச் சும்மா விட்டுடு. அவள் தூங்கிறா!" கார்த்திக் சாதாரணமாகச் சொன்னார்.

"அப்போ உங்களுக்கு அவளோட ரிசல்ட்ஸ் என்னவெண்டு தெரியுமில்ல?" நித்யா கார்த்திக்கை உலுப்பினாள்.

"தெரியும். நாலு எஃப். ரேசுகிற சசி. நான் ஆபீஸ்வரை போய்வாறன்." அமைதியாகக் கூறிய கார்த்திக் அவ்விடத்தை விட்டகன்றார்.

குசினியில் வேலை பார்க்கும் முத்தம்மா மூன்று இஞ்சித் தேனீர்க்கப்புகளை வைத்து விட்டு, "எல்லாம் ஆச்சும்மா. ராவுக்குத் தோசை வார்த்திருக்கேன். சாம்பாருக்கு போட்டு வச்சிருக்கு, நான் போகட்டுங்களா?" என்றாள் பவ்யமாக. நித்யா மணியைப் பார்த்தாள்.

"ஐயாட உடுப்புகள ஊறப்போட்டு வச்சிருந்தேன். தோய்ச்சுப் போட்டியா?" நித்யாவின் கேள்வியில் அதிகாரம் தொனித்தது.

"எல்லாம் கழுவி இஸ்திரி போட்டிட்டேன்." முத்தம்மா நித்யாவின் முகத்தை ஏறிட்டாள்.

"சரி சரி நீ போகலாம்!"

நித்யாவின் கோபம் மாடிப்படிகளைக் கடந்து அறையில் படுத்திருந்த பிரபாவில் தாவியது.

"ஏய் பிரபா! அறையைவிட்டு வாடி இங்க!" நித்யாவின் குரல் உச்சஸ்தாயியை எட்டியது.

பிரபா மெதுவாக இறங்கி வந்தாள். அவளுடைய கேசம் கலைந்து முகம் அழுது வடிந்து கிடந்தது.

"சொல்லுடி உன்டை ரிசல்ட்ஸ் என்ன?" நித்யாவின் வார்த்தைகளில் கோபம் கனன்றது.

"நாலு பாடமும் எஃப்." சட்டென்று பதிலளித்தாள் பிரபா.

"சீ. வெக்கமாயில்லே? எங்கமானம் மரியாதை எல்லாமே போச்சு. உன்னால ஆபீஸ்ல தலகாட்ட ஏலா. ஒரு பிள்ளையெண்டு எவ்வளவு செலவளிச்சம். மாடு மாதிரி வளந்திருக்கா. படிக்கத் தெரியல, இப்ப அழுது என்னடி பிரயோஜனம்?" நித்யா சொல்ல நினைத்ததைச் சொல்லி முடித்தாள்.

பிரபா அந்தக் கூடமே அதிரும்படி சிரித்தாள். அந்தச் சிரிப்பு பயங்கரமாயிருந்தது. பிரபா இப்படிச் சிரித்து நித்யா பார்த்ததில்லை.

பிரபா எதுவும் பேசாமல் அவள் அம்மாவின் முகத்தை வெறித்துப் பார்த்தாள்.

"ஏன் உம்மாண்டியாட்டம் நிக்கிற? சொல்லுடி! நீ படிச்சதே இல்லியா?"

"இந்த நாலு எஃப் நானெடுக்கிறதுக்குக் காரணமே என் அம்மாதான்!" சுட்டு விரலைத் தன் தாயின் பக்கம் நீட்டினாள் பிரபா.

உடல் பூரா மின்சாரம் தாக்கிய அதிர்வு நித்யாவுக்கு.

"நீ என்ன சொல்றே..?" அவள் வாய் முணுமுணுத்தது.

"நான் படிச்சிப் பாசாகி, ஒரு டாக்டரா வரவேணுமெண்டு சின்ன வயசிலிருந்து எனக்குள் தீச்சுவாலையாக கொழுந்து விட்டெரிஞ்ச ஆசயப் பொசுக்கி அணைச்சதே என் அம்மாதான்!"

"நானா? நீ என்னடி சொல்ற?" மாடிப்படியில் நின்ற பிரபாவின் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்து கூடத்தில் நிறுத்தினாள் நித்யா.

"இப்ப கேளுங்க- கவனமாக் கேளுங்க சும்மா!" பிரபாவின் வாய் திறந்தது.

"உத்தியோகமும் உயர்ந்த பட்டங்களும் பெற்றுக் கொள்வதில் நீங்க காட்டிய ஆர்வம் உங்க ஒரே மகளை காட்டலியே? இத்தனைக்கும் நமக்கு ஏகப்பட்ட சொத்து. அப்பாவுக்கும் கை நெறஞ்ச சம்பளம். இதனால எல்லாம் எனக்கு என்ன பயன்? வேலைக்காரியோட சீவிச்சி எனக்கு அலுப்புத் தட்டிப் போச்சி. என்னோட பேசவும் பழகவும் உங்களுக்கு நேரம் இல்லயே? உங்க கையால வாங்கிச் சாப்பிட எவ்வளவோ ஆசைப்பட்டேன். அது கிடைக்கல்லயே! எதுக்கெடுத்தாலும் எரிஞ்சி விழுறீங்க. எனக்குத் தேவையான எல்லாமே வாங்கித் தந்தீங்க. ஆனா ஒண்டை மட்டும் நீங்க எனக்குத் தரல்ல. அது தான் அன்பு. எல்லாரும் ஒண்ணாருந்து சாப்பிட்டதெப்ப? ஒண்ணாக எங்கயும் போனதெப்ப? சனி, ஞாயிறு இந்த ரெண்டு நாள்ள கூடவா நீங்க வேலை வேலையெண்டு திரியணும்? என்னால, எப்பிடிப் படிக்க முடியும்?" பிரபா உணர்ச்சிவசப்பட்டு ஒரு மேடைப் பேச்சாளியாக மாறினாள்.

**ரூபாராணி**

"என்னடி புதுக்கத அளக்கிற? நீ என்ன சின்னப்புள்ளையா தொட்டில்ல போட்டு ஆட்ட? சீ... உன்னப் பெத்ததுக்கு நான் வெக்கப்படுறேன். என்ன பாவஞ்செய்தேனோ நீ என் வயித்தில பிறந்த?" நித்யாவின் வார்த்தைகள் அக்கினித் துண்டங்களாகத் தெறித்து விழுந்தன.

"அம்மா இதுக்காக நான் கவலைப்படாத நாளில்ல. அதுக்குத் தண்டனையா எனக்கு நானே சூடு போட்டிட்டன்!" சொல்லிய வேகத்தில் பிரபா தன் சட்டையை முழங்காலுக்கு மேல் உயர்த்தினாள். அவள் வலது தொடையில் பொசுங்கிச் சிவந்த சூட்டுக் காயம்.

நித்யா தன் மகளை மடியில் போட்டுக் கதறினாள். ஒரு தாயின் பாசமழையில் பிரபா நனைக்கிறாள்.

தியேட்டரை விட்டு வெளியே வந்தவுடன் ஞாபகமாக டிக்கெட்டை கசக்கி வெளியே எறிந்தேன்.

எல்லாம் ஒரு முன்னெச்சரிக்கைதான். இதற்கு முன்னால் இப்படி பலமுறை அப்பாவிடம் மாட்டிக்கொண்ட அனுபவம். அப்போதெல்லாம் சாதாரண படம்தான். இதுவோ பலான படம்.

கொடுத்தான். அவன் வீட்டிற்குப் போய் வந்ததற்கான அத்தாட்சி கிடைத்துவிட்டது.

"மூர்த்தி, ஒரு கம்பெனியில எக்கவுண்டன்ட் தேவைன்னு போட்டிருக்கான். இந்தா அட்ரஸ்... ஜெனரலா அப்ளிகேஷன் போடு. எங்கிட்ட பேப்பர் கட்டிங் இருக்கு." அட்ரஸ் எழுதின பேப்பரை கொடுத்தான். வாங்கிப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டேன். "சரி வர்றேன். நேரமாகுது!" கிளம்பினேன்.

**

# நேரம் என் நேரம்



அம்ருதன்

சினிமா போவது குற்றமா? இல்லைதான். ஆனால் படித்து முடித்துவிட்டு, வேலையில்லாமல் தண்டச்சோறு தின்றுவிட்டு சுற்றிக் கொண்டிருக்கும், எனக்கு அது செய்யக்கூடாத குற்றமாம். அதுவும் பலான படம் என்றால்...?

மூளை ஏதாவது காரணத்தைத் தேடியது. அப்பா கேட்டால் சொல்ல வேண்டுமே. கோபாலின் வீட்டிற்குப் போனதாகச் சொல்லலாம். போய் வந்ததற்கு ஏதாவது அத்தாட்சி வேண்டுமே..? நடந்து கொண்டிருக்கையில்..

"மூர்த்தி..!"

குரல் கேட்டு திரும்பினேன்.

என்னைக் கடந்து சைக்கிளில் போனவன் இருட்டில் சாயலைப் பார்த்து, அழைத்திருக்கிறான் கோபால்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போலிருந்தது எனக்கு.

"எங்கேடா போய்ட்டு வர்றே?" கேட்டான்.

சொன்னேன். "டேய் கோபால் இப்ப பொல்லாத அப்பாகிட்ட தப்பிக்கணுமே?" ஐடியா கேட்டேன்.

கையில் வைத்திருந்த புத்தகத்தைக்

வீட்டிற்கு வந்தவுடன் அப்பா என்னைக் கேட்குமுன், கோபால் வீட்டிற்குப் போய் வந்ததாய் அப்பாவிற்கு கேட்கும்படி சத்தமாய் அம்மாவிடம் சொன்னேன். அம்மா சாப்பாட்டை எடுத்து வைத்தாள். சாப்பிட உட்காரப் போகையில்...

"வீட்டுல தண்டச் சோறு திங்கிறது காணாதுன்னு செக்ஸ் படம் வேற கேட்குதோ?" அப்பாவின் குரல் கேட்டது.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவர் எப்படிக் கண்டுபிடித்தார்?

டிக்கெட்டையே எடுத்து வந்து நீட்டிக் கொண்டிருந்தார். பார்த்தேன். கோபால் அப்ளை பண்ணச் சொன்ன கம்பெனி அட்ரஸ் எழுதிக் கொடுத்த பேப்பர். அவசரத்தில் நானும் பார்க்காமல் வைத்துவிட்டு, வீட்டிற்கு வந்து டிராயரில் போட்டிருந்தேன். அடப்பாவி! அதுவும், அவன் எங்கேயோ பார்த்த செக்ஸ் படம் ஓடற தியேட்டர் டிக்கெட்டாகவா இருக்கவேண்டும்? மனசு என் நேரத்தை நினைக்கத் தொடங்குகையில்.. அப்பாவின் அர்ச்சனை உச்சக் கட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

மழை அதிகமாகப் பெய்தது. ஒதுங்கக் கூட இடமில்லை. நித்யாவிடம் குடையும் இல்லை. நனைந்து கொண்டே நடந்தாள். பின்னால் வந்த ராஜ் குடை வைத்திருந்தான். இவர்களைத் தவிர ரோட்டில் வேறு யாருமில்லை.

ஈரத்தில் உடலோடு ஒட்டிக் கொண்ட புடவை நித்யாவின் இளமையை மேலும் அழகு படுத்திக் காட்டியது.

ராஜ் எட்டி நடந்து நித்யா அருகே வந்தான்.

"என் குடையில வார்றீங்களா?" என்று மெல்லக் கேட்டான்.

ராஜை நித்யா முறைத்தாள். எதற்கு குடைக்குள் கூப்பிடுகிறான் என்று அவளுக்குத் தெரியாதா? இரக்கப்பட்டுக் கூப்பிடுவது மாதிரிக் கூப்பிட்டு. உரசுவான். தொடுவான். சில்மிஷம் செய்வான். இதானே?

"ப்ளீஸ்.. எதுக்கு நனையறீங்க... குடை இருக்கும்போது?" ராஜ் கெஞ்சலாய்க் கேட்டான்.

# குடை விடு தூது



எஸ். பூங்கதிர்

அவன்மீது நித்யாவிற்கு அளவில்லாமல் கோபம் வந்தது. 'பொறுக்கி ராஸ்கல்! தனியாப் போற பெண்ணிடம் வம்புபண்றான். அக்கா தங்கச்சி இவன்கூட பொறக்கலியா? பாவி... என்னமா நடிக்கிறான் பார்?'

நித்யா ஒரு முடிவுக்கு வந்தாள். சரி அவன் குடையில் அவனோடு போவோம். நிச்சயம் அவன் சீண்டாமல் இருக்கப்போவது இல்லை. அப்போது கைவரிசையைக் காட்டிட வேண்டியதுதான். கராத்தே கற்றது எதற்காக?

"நீங்க 'ஆசையா' கூப்பிட்டதுக்கு ரொம்ப தேங்க்ஸ். உங்க குடையிலேயே வரேன்!" என்று சொன்ன நித்யா அவன் அருகே நெருங்கினாள்.

உடனே ராஜ் குடையை அவளிடம் நீட்டினான். அதை நித்யா எதிர்பார்க்கவில்லை.

"மழையில் நான் நனைஞ்சா எனக்கு ஒண்ணும் ஆகாது. ஆனா உங்களுக்கு ஒத்துக்காதுன்னு நினைக்கிறேன். அதனாலதான் உங்களை குடையில வரச்சொன்னேன். நீங்க குடையிலேயேவாங்க!." என்றான்.

அவனுடைய தூய்மையான மனதைப் பார்த்த நித்யா, "எனக்காக நீங்க நனைய வேண்டாம். ரெண்டு பேரும் சேர்ந்தே குடையில போவோம்- வாங்க!" என்று அன்புடன் அழைத்தாள்.

பரமசிவம் சோர்வாய் வீடு திரும்பினார். வீட்டில் நுழைந்ததும், தன் மூத்த மகள் கீதாவின் குரலைக் கேட்டு திடுக்கிட்டார். 'ம், மறுபடி வந்துட்டாளா?' என்று மனதில் சொல்லிக்கொண்டே "பார்வதி!" என்று குரல் கொடுத்தார்.

"வாங்க!" என்றாள் மனைவி பார்வதி. "பாருங்க நம்ம பொண்ணை, 'தன்னால முடியல அத்தே'ன்னு சொன்ன பிறகும் நல்லா வேலை வாங்குறாங்களாம். அதான் ஒரு வாரம் அம்மா வீட்டுக்குப்போயிட்டு வர்றேன்'னு சொல்லிட்டு வந்திருக்கா."

வழக்கமான பல்லவியையே பாடினாள் மனைவி. 'இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்.' எண்ணிக்கொண்டிருக்கும்போது உஷா உள்ளே வந்தாள்.

தன்னுடைய இரண்டாவது பெண். மாலையில் தான், ஆபீஸை விட்டு வரும் போது யாரோ ஒருவனுடன் மோட்டார் பைக்கில் பின்புறம் அமர்ந்து கொண்டு, பொழுதைக் கழித்த பிறகு, இப்போது உள்ளே வந்திருக்கும் உஷாவை எப்படி கண்டிப்பது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டே இருந்தார்.

வீட்டில் டி.வி. ஓடியது. ஆனால், பரமசிவத்திற்கு மனம் இலயிக்கவில்லை. அடிக்கடி வீட்டிற்கு வந்து டேரா போடும் பெரிய பெண்; சராசரிக்கும் சற்றுக் குறைவாக படிக்கும் போதே காதலனுடன் கண்டபடி ஊர்சுற்றும் இரண்டாவது பெண்; இவர்களை எப்படித் திருத்துவது? என்ற யோசனையே அவரை ஆக்கிரமித்திருந்தது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் போல ஒரு அருமையான திட்டத்தைத் தீட்டினார். அதைச் செயலாக்க பார்வதியின் ஒத்துழைப்பும் தேவை என்பதை அறிந்து, அவளை அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றார்.

இருவரும் சந்தோஷமாக வீடு திரும்பினார்கள்.

அன்று இரவு அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்தவுடன், "கீதா! இந்த பாத்திரத்தையெல்லாம் கழுவி, தொடச்சி கவுத்து வெச்சுட்டு படும்மா."

"ஏ உஷா! சாப்பாட்டு மேசையை சுத்தமா தொடச்சி வச்சிட்டு படும்மா கண்ணா. எனக்கு லேசா தலைவலிக்குது. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டா சரியாயிடும்!" என அன்பாக கூறிவிட்டு படுக்கையறைக்கு சென்றாள் பார்வதி.

தன் கணவனிடம் பேசிவிட்டு உறங்குவது போல் நடித்தாள் பார்வதி.

கீதாவும், உஷாவும் உஷாரானார்கள். காரணம் தங்களைப் பற்றி அம்மாவும், அப்பாவும் பேசிக் கொள்வதை ஒட்டு கே...ட்...க...

"பார்வதி!"

"ம்... என்னங்க."

"கீதாவும், உஷாவும் தூங்கிட்டாங்களா?"

"வேலையச் செஞ்சு முடிச்சப்புறம் தூங்கப் போங்கடின்னு சொன்னேன். ரெண்டும் கேட்டிருக்காது. போய் தூங்கியிருக்கும். அது சரி.. என்ன சொல்ல வந்தீங்க...? சொல்லுங்க."

"நான் சொல்லப் போற விசயத்தை கேட்டுட்டு நீ பதறக்கூடாது."

"என்னது, பீடிகை போட்டு பேசுறீங்க?"

"பெரிய விஷயமில்ல பார்வதி, நம்ம உஷாவ பத்தி..."

"உஷாவ பத்தி..."

"அதான் நம்ம உஷா நல்லா படிப்பான்னு நெனச்சோம்... நம்ம எதிர்பார்ப்ப பொய்யாக்கிட்டா.. சரி, நல்லா நடப்பான்னு நெனச்சோம்... அதையும் பொய்யாக்கிடப் போறாளோன்னு நெனச்சி லேசா பயப்புடுறேன்."

"நம்ம உஷா ஏதாவது தப்புத் தண்டா செய்றாளா?"

"ஆமாம் பார்வதி, யாரோ ஒரு பையனோட ஊர் சுத்தறா..."

"நீங்க பாத்தீங்களா?"

"பார்க்காமலா சொல்றேன்?"

"பாத்துட்டு சும்மாவா வந்தீங்க...? அதே இடத்துல நாலு சாத்து சாத்தி, கையப் புடிச்சி இழுத்துட்டு வர வேண்டியதுதானே..?

"அதனால...?"

"வேறு என்ன செய்யறது, பொண்ண பெத்துட்டோமே, அவ யாரோட ஊர் சுத்துறாளோ, அவனோட கையக் கால புடிச்சாவது நம்ம பொண்ணுக்கு ஏதாவது வழி செய்யணும்...!"

"நீ ஏண்டி அழுவுற?"

"எப்படிங்க அழுவாம இருக்க முடியும்? பத்து மாசம் வயித்துல சுமந்த நா, பதினேழு வருஷம் தோள்ல சுமந்த நீங்க, இப்படி ரெண்டு பேரையும் யாரோ ஒருத்தன் கால்ல விழும்படி செஞ்சுட்டாளே.. நம்ம பொண்ணு."

"நீ அத நினச்சி அழுற, நான் எத நெனச்சி கவலப்படறேன் தெரியுமா? இவளையும் அவ இஷ்டப்படி கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டா.. நம்ம பெரிய பொண்ணு கீதா புகுந்த வீட்லேயும் நல்ல பெயரெடுக்காம, பொறந்தவூட்டுக்கும் கெட்ட பேர்

# இரட்டை வேட்டு



ஆர்.பவானி

அவளுக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே ஆம்பள சுகம் கேக்குதா?"

"பார்வதி, நான் அப்படிச் செஞ்சிருந்தா, நம்ம பொண்ணோட எதிர்காலம் என்ன ஆகியிருக்கும்னு நெனைச்சுப் பார்த்தியா...? ஒரு பயலும் பொண்ணு கேட்டு, வாசப்படிய மிதிக்கமாட்டான். அப்படியே வந்தாலும், வந்தவன் இந்த விசயத்தை மறக்கறதுக்கு நிறைய சீதனம் கேட்பான். நம்மால கொடுக்க முடியுமா சொல்லு? சரி... அதவிடு, நம்ம பொண்ணு உஷா நல்லா படிச்சிட்டு வேலைக்குப் போகிற மாதிரி இருந்தாலாவது ஓரளவு சமாளிக்கலாம்... உ...ம்.... அதுலேயும் உஷாவுக்கு கொடுத்து வெக்கலே..."

தேடித் தர்றாளே, அது மாதிரி ஆயிடுமோன்னு நெனச்சி கவலைப்படறேன் பார்வதி."

"சரிங்க, இனிமே விதி விட்ட வழி... எல்லாம் நல்லபடியா நடக்குங்க... பேசாம மனச அலட்டிக்காம தூங்குங்க...!"

பார்வதி ஆறு மணிக்கு எழுந்தாள். உஷா படித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து சந்தோஷமானாள்.

பரமசிவம் எட்டு மணிக்கு எழுந்தார்.

"அப்பா, கீதா அவுங்க வூட்டுக்கு போயிட்டா... நீங்க எழுந்தவுடனே சொல்லச் சொன்னா!" உஷா தன் தந்தையிடம் கூறியவுடன் பரமசிவத்தின் முகம் பிரகாசமடைந்தது.

www.padippakam.com



# உனக்காக மறக்கலாம்

"மற என்னை
துற காதலை!"

அவன்தான்- அவனேதான்
அப்படி அம்பெய்தான்!

அன்பை எய்தவனால்
எப்படி இன்று
அம்பை எய்ய முடிந்தது?

"மற என்னை
துற காதலை!"

முட்களால் என்னை
எப்படி மோதினான்?

முத்தங்களால் நனைத்தவன்
முட்களால் என்னை
கிழிக்க எப்படித் துணிந்தான்?

"மற என்னை
துற காதலை!"

கொஞ்சிப் பேசிய
அவன் உதடுகள்
எப்படி நஞ்சை
விதைக்க நினைத்தன?

"பஞ்சு நீ" என்றவன்
நஞ்சால் அன்றோ
எனை நனைத்திருக்கிறான்!

"மற என்னை!
துற காதலை!"

தீ நாக்கை நீட்டாமல்
தீக்குள் என்னை
தூக்கி எறிந்திருக்கலாம்!

"மற என்னை
துற காதலை!"

ஒரு முழம் கயிற்றில்
என்னை கட்டி
தொங்கவிட்டிருக்கலாம்!

ஒரு பாழும் கிணற்றில்
என்னைப் பிடித்து
தள்ளி விட்டிருக்கலாம்!

ஒரு மலையுச்சியில்
கொண்டுபோய் என்னை
உருட்டி விட்டிருக்கலாம்!

எரிமலைக் குளம்பில்
என்னைத் தூக்கி
எறிந்து போயிருக்கலாம்!

"மற என்னை
துற காதலை!"

என்னால் முடியாததை
செய்யச் சொல்வதைவிட
உன்னால் முடிந்ததை
செய்திருக்கலாம்!

அழுதாள், அரற்றினாள்
கண்ணீரில் மிதந்தாள்!

பின்னர் யோசித்தாள்
கண்ணீரை துடைத்தபடி
ஒரு முடிவுக்கு வந்தவள்
மடல் எடுத்தாள்!

வெந்நீராய் கொதித்த
உள்ளத்தை தணித்து,
மடலில் தன் எண்ணத்தை
ஒவ்வொன்றாய் விதைத்தாள்!

"காதலா! என் காதலா!
உனக்காக உன்னை
மறக்க சம்மதிக்கிறேன்!

காதலை மறக்கவில்லை
காதலால்தான் மறக்கிறேன்!

நான் இல்லாத வாழ்க்கை
உனக்கு இனிக்கும் எனில்,
உன் நலம் கருதியே
உன்னை மறக்கிறேன்!

உன் பாதையில் என்னை
முள்ளாக நீ நினைப்பதால்
உன் கால்களுக்கு
வலிக்காமல் இருப்பதற்காக
நான் விலகிக்
கொள்கிறேன்!

உன் தோளுக்கு
நான் சுமையாகிவிட்டதால்,
உன் பாரத்தை குறைக்கவே
இறங்கிக் கொள்கிறேன்!

உன் மனதில்
வேண்டாத
விருந்தாளியாகியதால்
நானாகவே அங்கிருந்து
வெளியேறிப் போகிறேன்!

என் நினைவுகள்
உனக்கு முட்களானால்
அவற்றை வீசாதே!
உன்னை எப்போதாவது
அவை குத்தக் கூடும்!
ஆகவே குழிவெட்டி
ஆழப் புதைத்துவிடு!

நினைக்கும் போது
மறப்பதற்கும்,
விரும்பும் போது
துறப்பதற்கும்
காதல் என்ன
காவி உடையா?

என்னால் காதலை
துறக்க முடியாது!
என்னால் காதலை
மறக்க முடியாது!

காதலுடனும்- மீண்டும்
காதலுடனும்
மீண்டும் மீண்டும்
காதலுடனும்
உனக்காக வேண்டுகிறேன்!

உன் பாதையில்
மலர்கள் தோன்றட்டும்!

உன் வாழ்க்கையில்
மகரந்தம் கசியட்டும்!

வாடிவிட்ட மலராக
நான் மாறிவிட்டபோதும்,
துவண்டுவிட்ட கொடியாக
நான் மாறிவிட்டபோதும்
வற்றிவிட்ட பொய்கையாக
நான் மாறிவிட்டபோதும்,
பூத்துக் குலுங்கும் மரமாக
நீ வாழ ஜெபிக்கிறேன்!

"என்னை தொட்ட கைகள்
என்னை தீண்டிய உதடுகள்
என்னை தழுவிய கால்கள்
என்னை தாங்கிய மார்பு
என்னை வியந்த கண்கள்
என்னை மணந்த நாசி
என்னை நனைத்த நாவு
உன் அத்தனை
அவயவங்களுக்கும்-என்
நன்றியை தெரிவிக்கவும்!

இனிமேல் சந்திப்பதற்கோ
சிந்திப்பதற்கோ
முடியாத பாதைகளில்
பயணம் ஆரம்பமாகும்!

காதல் என்பது
பெறுதல் மட்டுமல்ல!

காதல் என்பது
ஒருவரை ஒருத்தர்
அடைதல் மட்டுமல்ல!

காதல் என்பது
ஒருத்தருக்காக ஒருத்தர்
இழத்தல் என்பதும்தான்!

பெறுவதைவிட
இழப்பதற்கே
மன விசாலம்
பெரிது வேண்டும்!

காதலை மற
என்றாயே!
முட்டாள் காதலா!
காதலை மறந்திருந்தால்
ஊர் நடுவே
உன்னைக்
காட்டிக் கொடுத்திருப்பேன்!

குற்றவாளியாக
சபை நடுவே
நிறுத்தி வைத்திருப்பேன்!

காதலை மறக்கவில்லை
அதனால்தான்
காதலுக்காக மறக்கிறேன்!
காதலை மறைக்கிறேன்!
மறக்க முடியாததையும்
மறைக்க முடியுமல்லவா!

எழுதி முடித்தாள்
மடலை!

மடலை அவள் மடிக்க
மனமும் மடிந்தது!
அடக்கிய சோகம் வெடித்தது!

"நாம் இருவர்
ஒருவரானோம் என்றவர்
இன்று கொன்றார்
அன்பை!
நினைத்த நெஞ்சம்
நீறாகிறது!
பதைத்த உயிர்
அழிகிறது!
என்றாள் தனக்குள்ளே!"

இலக்கிய நயம்

தருவது
ரசிகன்

"விளியுமென் இன்னுயிர்
வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து!"

அதிகாரம்: 121, குறள்:1209

ஸ்போர்ட்ஸ்

## பாகிஸ்தான் அணிக்குள் ஊழல் புகார்



மியாண் டாட்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தற்போது பல பிரச்சனைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக வீரர்களிடையே ஊழல் குற்றச்சாட்டுக்கள், சரியான கேப்டன் இல்லாமை போன்ற பல பிரச்சனைகள்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் கேப்டன் தேர்வு அடுத்தமாதம் நடக்கவுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அமீர் சொஹைலைத்தான் அணியின் கேப்டனாக நியமிக்க விருப்பம் கொண்டுள்ளது.

ஆனால் "அமீர் சொஹைல் கேப்டனாக இருந்தால் அவரது தலைமையின் கீழ் விளையாட மாட்டோம்!" என்று ஒரு சில வீரர்கள் கூறியதன் காரணமாக இன்னும் பெரிய பூகம்பம் கிளம்பியுள்ளது.

'பாகிஸ்தான் அணிக்குப் பல வெற்றிகளைப் பெற்றுத் தந்த வாஸிம் அக்ரம் மறுபடி கேப்டனாகத் தேர்வு செய்யப்படலாம்!' என்று கருத்து வெளியிடப்பட்டது. 'இந்தப் பதவி தனக்குத் தேவையில்லை!' என்று அக்ரம் கூறிவிட்டார். அக்ரம் கேப்டனாக இருந்தபோது இலஞ்ச குற்றச்சாட்டினால் ஏற்பட்ட அவமானம் மறுபடி நேரக்கூடாது என்ற நோக்கத்தினால்தான் இம்முடிவை எடுத்துள்ளதாக அவரது இரசிகர்கள் கருதுகிறார்கள்.

தற்போதைய கேப்டனான ரஷீத் லத்தீப் தலைமையில் பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவில் மோசமான தோல்வியைச் சந்தித்தது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சனையோடு இப்போது பயிற்சியாளர் பிரச்சனையும் தோன்றியுள்ளது. முன்னதாகப் பயிற்சியாளராக இருந்த ஹரூன் ரஷீத் கடந்த மேமாதம் தனது பதவியில் இருந்து விலகினார். இதனால் பயிற்சியாளர் பிரச்சனையும் எழுந்துள்ளது.

ஆனால் இப்பயிற்சியாளர் பதவி தனக்கு அளிக்கப்பட்டால் ஏற்கத் தயாராக இருப்பதாக உலகின் சிறந்த வீரர்களில் ஒருவரும், முன்னாள் கேப்டனுமான ஜாவெட் மியாண்டாட் கூறியுள்ளார்.

## ஸ்ரீகாந்த் புகழாரம்

"இந்திய அணியின் மாஜி கேப்டன் சச்சின் டெண்டுல்கர்தான் உலகிலேயே சிறந்த மட்டை வீச்சாளர். மேற்கிந்தியத் தீவைச் சேர்ந்த பிரையன் லாராவை விட டெண்டுல்கர்தான் சிறந்த ஆட்டக்காரர்."

இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரரான தமிழக வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் அண்மையில் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். இவர் மேலும் கூறுகையில்:

"ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. அணியின் ஃபீல்டிங் தரம் மேலும் உயரவேண்டும். வலது இடதுகை மட்டை வீரர்களான டெண்டுல்கர்-கங்குலி ஜோடி வெற்றிகரமான ஜோடியாக உருவாகி வருகிறது.

அஸாருதீன் கேப்டன் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். அகர்கர், ஹர்பஜன் சிங் ஆகியோரும் திறமை மிக்கவர்கள். இந்திய அணிக்கு ஸ்ரீநாத்தின் வரவு நல்லது.

ஒருநாள் போட்டிகளில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகள் சிறந்து விளங்குகின்றன. இனிமேல் ஒரு நாள் போட்டிகளுக்கும், டெஸ்ட் போட்டிகளுக்கும் தனித்தனி அணிகள்தான் அனைத்து நாடுகளிலும் தேர்வு செய்யப்படும்!" என்று ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

## இவர்கள்தான் அவர்கள்



① எலிசபெத் மகாராணி



② சாலமன் பாப்பையா

## சிந்தியா பதில்கள்

* சிந்தியா! தெற்கில் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தி முடிக்குமா?

வி. சிவலிங்கம், பட்டிருப்பு.

அரசாங்கம் இன்னமும் அதுபற்றி முடிவே எடுக்கவில்லை! ஊசலாடிக் கொண்டிருக்கிறது! வெற்றிக்கனி எட்டாக் கனி என்று தெரிந்தால் ஒத்திவைக்கத் தயங்க மாட்டார்கள்!

❖ ❂

* இப்போது 'நம்பர் வன்' சிம்ரான்தானே?

கி. தனராஜ், கண்டி.

எந்த விஷயத்தில்?!

❖ ❂

* சிந்தியா! தம்பட்டம் அடிப்பவர்களை எப்படித் திருத்துவது?

கே. ரவிதாஸ், வவுனியா.

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. நேச நாடுகளைச் சேர்ந்த அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட், இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில், ரசிய அதிபர் ஸ்டாலின் மூவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது சர்ச்சில் தன் சுருட்டை புகைத்தபடி: "நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். அதிலே கடவுள் வந்து 'இந்த உலகத்துக்கே உன்னை பிரதம மந்திரியாக நியமிக்கிறேன்!' என்று கூறி மறைந்தார்." என்றார்.

அப்போது அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்: "கடவுள் என் கனவிலும் வந்தார். 'உன்னை உலகுக்கு ஜனாதிபதி ஆக்குகிறேன்!' என்று கூறிச் சென்றார்," என்றார்.

ரசிய அதிபர் ஸ்டாலின் அமைதியாக அவர்கள் இரண்டுபேரையும் பார்த்து: "உங்கள் இரண்டு பேருக்கும் அப்படி வரம் கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லையே!" என்றார்.



ஸ்டாலின்-ரூஸ்வெல்ட்-சர்ச்சில்

❖ ❂

* சாமியார்களை நம்பவே முடியாதா சிந்தியா?

செல்வி என். நித்யா, பசறை.

சமீபத்தில் படித்த கதை ஒன்று:

பாவச் செயல் புரிந்த ஒருவன் ஒரு சாமியாரிடம் சென்று: "சாமி, நான் பாவம் செய்துவிட்டேன்!" என்றான்.

"என்ன பாவம் செய்தாய்?" என்று கேட்டார் அந்தச் சாமியார்.

"ஒரு பெண்ணை பலாத்காரம் செய்து விட்டேன்!" என்றான்.

"அப்படியா! அதோ உன் அருகில் உள்ள உண்டியலில் நூறு ரூபாய் போடு. அந்தப் பணம் ஆண்டவருக்குச் சேரும். ஆண்டவன் உன்னை மன்னிப்பான்!"

அந்த ஆள் மறுபடியும் சாமியாரிடம் வந்து: "இன்று இரண்டு பெண்களை பலாத்காரம் செய்துவிட்டேன்!" என்றான்.

"அப்படியா! உண்டியலில் முந்நூறு ரூபாய் போடு!" என்றார் சாமியார்.

"நேற்று ஒரு பலாத்காரத்திற்கு நூறு ரூபாய்தானே போடச் சொன்னீர்கள். இன்று இரண்டுக்கு முன்னூறு போடச் சொல்கிறீர்களே! கட்டணம் அதிகமாகி விட்டதே?" என்றான்.

அதற்கு சாமியார் சொன்னார்: "இரண்டுக்கு இருநூறு ரூபாய்தான். இன்னொரு நூறு முற்பணம்!"

❖ ❂

* யாழ்ப்பாணத்தில் செம்மணிக் குழிகளைத் தோண்ட ஏன் தாமதம்?

எல். பவானந்தன், யாழ்ப்பாணம்.

புதைக்கப்பட்டதாகக் கூறப்படுவது தமிழ் உடல்கள் என்பதால்!

❖ ❂

* சினிமாவில் தணிக்கை இல்லாவிட்டால் என்னாகும்?

கா. தனிகாசலம், கொழும்பு-09.

உலகில் சினிமா தணிக்கை இல்லாத நாடு ஃபிரான்ஸ்- அங்கே அப்படி என்னாகி விட்டது!

❖ ❂

* மாகாணசபைத் தேர்தல் நடந்தால் வெற்றி யாருக்கு?

எம். துஷ்யந்தன், கம்பஹா.

சுதந்திரமாக தேர்தல் நடந்தால்... நீலம் தடுமாறும்!

❖ ❂

* தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பமாகி விட்டன போலிருக்கிறதே?

பூ. காவிரி, மாத்தளை.

திருடர்கள் ஜாக்கிரதை! வாக்குகள் பத்திரம்!

❖ ❂

* சமீபத்தில் படித்த ஜோக் ஏதாவது?

ஆர். ரஷ்மி, சிலாபம்.

"ரி.வி.யிலே செய்தி படிக்கும் அந்தப் பொம்பளை- என்ன புடவைத் தலைப்பிலிருந்து பேப்பரை எடுத்துப் படிக்கிறாங்க?"

"தலைப்புச் செய்தியா இருக்கும்!"

❖ ❂



'நான் வணங்கும் தெய்வம்' படத்தில் சிவாஜி

* சலிப்பு இல்லாமல் வாழ என்ன செய்யலாம்?

கி. ர்ஞ்சித், திருமலை.

எத்தனையோ செய்யலாம். மார்ட்டின் லூதர் என்ற அறிஞர் கூறியதை மனதில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்:

1. கேட்பதையெல்லாம் நம்பிவிடாதீர்கள்!
2. செய்ய வேண்டும் என்று நினைப்பதையெல்லாம் செய்து விடாதீர்கள்!
3. தெரிந்ததையெல்லாம் சொல்லி விடாதீர்கள்!
4. இருப்பதையெல்லாம் உபயோகித்து விடாதீர்கள்!

❖ ❂

* பணிவில்லாத மாணாக்கர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

சி. சிநேகா, வவுனியா.

நீங்கள் ஆசிரியை போல இருக்கிறது! ரொம்பத்தான் நொந்து நூலாகிவிட்டீர்கள் போல. மில்டன் என்ற அறிஞர் கூறுவதை பணிவில்லாத மாணாக்கர்களுக்குக் கூறுங்கள்.

"யார் அதிகமாகத் துன்பங்களை அனுபவிக்கிறார்களோ அவர்களே திறமையாக காரியங்களைச் செய்ய முடியும். யார் கீழ்படியக் கற்றுக்கொள்கிறார்களோ அவர்களால் நன்றாக ஆள முடியும்!"

❖ ❂

* ரம்பா ஆட்டம் கண்டுவிட்டாராமே?

எஸ். மனோ, கொழும்பு-11.

ஆம்! பல ஆட்டம் கண்டு விட்டார்-பல படங்களில்!

❖ ❂

* பக்தியும் அளவோடுதானே இருக்க வேண்டும்? சிலர் வேலைகளை எல்லாம் ஒத்திப்போட்டுவிட்டு கோயில் குளம் என்று அலைகிறார்களே?

பா. உமைபாலன், சுவிற்ஸர்லாந்து.

கடவுள் ஒருநாள் நகர்வலம் வந்தார்.

வயல்வெளியில் தன்னந் தனியாக ஒரு பெண் வேலை செய்து கொண்டிருந்தாள்.

வந்திருப்பது கடவுள் என்று அவளுக்குத் தெரியாது. அவர் கேட்கிறார்:

"ஏம்மா! நீ மட்டும் தனியாக இங்கே உழைத்துக்கொண்டு இருக்கிறாயே, மற்றவர்கள் எல்லாம் எங்கே?"

"இன்று எங்கள் ஊர் கோவில் திருவிழா. எல்லோரும் சாமி பார்க்கப் போயிருப்பார்கள்!"

"நீ ஏன் போகவில்லை?"

"சாமியைப் பார்க்க வேண்டும் என்பதற்காக நான் ஒருநாள் கூலியை இழக்கத் தயாராக இல்லை. எனக்கு ஆறு குழந்தைகள். அதுகளைக் காப்பாற்ற வேண்டும்!"

கடவுள் அந்தப் பெண்ணின் கையில் கொஞ்சப் பணம் கொடுத்தார்.

"அம்மா! இதை வைத்துக் கொள்! சாமி பார்க்கப் போனவர்களிடம் கூறு- சாமி உன்னைப் பார்க்க வந்தார் என்று!"

❖ ❂

* 'கவியரசு' பட்டத்தை துறந்துவிட்டாராமே வைரமுத்து?

ஆ. நிக்சன், வத்தளை.

வைரமுத்து அற்புதமான கவிஞர்தான்! ஆனால் 'கவியரசு' என்றால் அது கண்ணதாசன் ஒருவர்தான்!

❖ ❂

* கமலுக்கு முன்னர் மேக்-அப்பில் புதுமை செய்ய தமிழ் நடிகர்கள் துவங்கியது ஏன்?

எஸ். ராமதாஸ், மஸ்கெலியா.

யார் சொன்னது அப்படி? சிவாஜி செய்யாத புதுமையா? எத்தனையோ மேக்-அப் புதுமைகள் செய்துள்ளார். 'நான் வணங்கும் தெய்வத்'தில் அடையாளமே தெரியாத கோரம்... இப்படி எத்தனையோ...!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 19

ஆண்டவரின் விருப்பப்படியே நடக்கவேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். ஆனால் சில சந்தர்பங்களைப் பொறுத்து தனது எண்ணத்தை மாற்றிக் கொள்ளுகிறான். தேவாலயங்களுக்குச் சென்று பிரார்த்திக்கும்போது பயபக்தியுடன் மனமுருகி பல பிரதிக்ஞைகளை எடுத்துக்கொள்கிறான். ஆனால் ஆலயத்தை விட்டு வெளியே வந்ததும் ஆண்டவன் சன்னிதியில் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞைகளை மறந்து, தன்னிச்சைப்படி நடக்க ஆரம்பித்துவிடுகிறான்.

ஏழாவது நாளான ஞாயிற்றுக்கிழமையை பூரண ஒய்வு நாளாக இன்றைய உலகம் மதித்து வருகிறது. அன்றைய தினத்தினை கிறிஸ்தவர்களனைவரும் புனிதமான நாளாகக் கருதி, தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொள்ளுகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்டவரால் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளை இன்றுவரை நடைமுறையிலுள்ளது. ஏன்- உலகுள்ளவரை நடைமுறையிலிருக்கவே செய்யும் என்பது உறுதி.

இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு இரண்டு மாதங்களும் பதினைந்து நாட்களும் கடந்த பின்னரே சீன் பாலைநிலத்தை

திருவருளால் நிகழ்ந்த புதுமையை நேராகவே கண்டார்கள். தரையில் தலைதாழ்த்திப் பணிந்தார்கள். மலையிலிருந்து பெருக்கெடுத்த தண்ணீரை இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பருகித் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டனர்.

மக்கள் பெருங்கூட்டமாக இரபிதிம் பகுதியை வந்தடைந்து பாளையம் அமைத்திருந்தனர். இதனை அப்பகுதியில் வாழ்ந்த அமலேக் என்பவனும் அவன் தலைமையின் கீழ் வாழ்ந்த மக்களும் கண்டனர். தனித்து வாழ்ந்த தங்களை ஆக்கிரமிக்க எங்கிருந்தோ பெரியதொரு படைதிரண்டு வந்திருக்கின்றதோ...? என்ற ஐயப்பாட்டில் அமலேக்கியர் போர் முழக்கமிட்டனர்.

## பெரும் பயணப் பாதை



போதும் என்ற மனம் மனிதனிடமில்லை. பேராசைக்காரனாகவே காணப்படுகிறான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல், வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டு தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிறான்.

* * *

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தை எகிப்திலிருந்து மீட்டெடுக்க மோசே மூலம், ஆண்டவர் பல அற்புதங்களைக் காட்டினார். அவர்களைக் கொடுமைப் படுத்தியமைக்காக எகிப்தியரைப் பழிவாங்கினார். கானான் தேசத்தை

வந்தடைந்தனர். இத்தினத்திலிருந்து ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள்வரை பயணம் செய்தே இஸ்ரயேலர்கள், அவர்களுக்காக ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கானான் தேசத்தைச் சென்றடைந்தனர். அதுவரை அன்றாட அப்பத்தை அவர்களுக்காக ஆண்டவர் அளித்தார். இருப்பினும்கூட அம்மக்கள் மத்தியில் இருந்த அதிருப்தியாளர்களால் அடிக்கடி தொல்லைகள் ஏற்படவே செய்தன.

இரபிதிம் என்ற இடத்தை மக்கள் வந்தடைந்தபோது அவர்கள் களைப்புற்றிருந்தனர்.

நோக்கி இஸ்ரயேலர்களை அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக மோசேயை ஆண்டவரே அனுப்பிவைத்தார்.

ஆண்டவருடைய அற்புதச் செயல்களை நேரடியாகக் கண்டும்- அவற்றின் பயன்களைப் பூரணமாக அனுபவித்தவர்களே, சிறிது துன்பம் நேரிட்டாலும் ஆண்டவரின் பெருமையையும் மகிமையையும் மறந்து விடுகிறார்கள். ஆண்டவரின் ஆணையைச் செயற்படுத்தும் மோசேயைத் திட்டி இழிவுபடுத்த ஆரம்பித்துவிடுகின்றனர். இத்தனை செய்தும் ஆண்டவர் தம் மக்களைக் கைவிடவில்லை. அவர்களின் தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்தருளுகிறார்.

கசப்பு நீர் ஏரியை நன்னீர் ஏரியாக்கினார்; மக்களனைவருக்கும் தீஞ்சுவையான மன்னாவை அன்றாட உணவாக-அத்தனை பேருக்கும் தந்தருளினார். இருப்பினும், சிலருடைய முணுமுணுப்பும், வசவுகளும் ஓய்ந்தபாடில்லை.

### ஒய்வு நாள்

ஆறு நாட்கள் மட்டும் அதிகாலையில் மன்னா வானிலிருந்து பொழியப்படுகிறது. ஆறாவது நாள் மட்டும் இரு நாட்களுக்குத் தேவையான மன்னாவைச் சேகரித்து வைக்குமாறு மோசே மூலம் கட்டளையிடப்பட்டிருந்தது. ஏழாவது நாள் ஆண்டவருக்கே ஒய்வு நாளாகவிருப்பதனால் அன்றைக்கான மன்னாவை ஆறாவது நாளன்றே சேகரித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

ஏழாவது நாளன்று எவருமே எங்கும் செல்லாமல் தங்கள் விடுதிகளில் அமைதியாக இருந்து பிரார்த்திக்கவேண்டும் என்பது இறைவனின் கட்டளை.

இதன் அடிப்படையிலேயே, திங்கட்கிழமையை வாரத்தின் முதல் நாளாகக் கணித்து

அங்கு விடுதிவிட்டு ஓய்வெடுக்கலாயினர். ஆனால் அப்பகுதியில் குடிப்பதற்கு அவர்களுக்கு நீர் கிடைக்கவில்லை. உடனே எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

"எகிப்தில் எமக்கு ஏவப்பட்ட பணிகளைச் செய்து கொடுத்துவிட்டு, வேளாவேளைக்கு உண்ண உணவும் குடிக்கத் தண்ணீரும் பெற்று அமைதியாக வாழ்ந்தோம். எங்களை ஆசை காட்டி இந்தப் பாலைநிலத்தில் பரிதவிக்க விட்டுவிட்டீர்களே! நாங்கள் எகிப்து மண்ணிலேயே மடிந்து போகவிடாமல் இப்படி எங்களை வதைக்கிறீர்களே!"

இவ்வாறு ஒரு கூட்டம் மோசேயிடமும் ஆரோனிடமும் வந்து ஒலிமிட்டுப் புலம்பியது. மோசே அவர்களைப் பார்த்து:

"நீங்கள் இவ்வாறு கூறுவது ஆண்டவரையே அவமதிப்பதாகும். உங்களுக்கு ஏற்பட்ட துயரங்களையெல்லாம் துடைத்தெறிந்தவர் ஆண்டவர். அவர் மீது நம்பிக்கை வைத்து நீங்களே அவரிடம் முறையிடலாமே!" என்றார். பின்னர் ஆண்டவரை நோக்கிப் பிரார்த்தித்தார். ஆண்டவரும், "மோசே! இம்மக்கள் கூட்டத்தின் சில தலைவர்களை மட்டும் உம்மோடு அழைத்துக்கொண்டு ஒரேபி என்ற மலையடிவாரத்துக்குச் செல்லும். நைல் நதியை அடித்து நீரை இரத்த மயமாக்கிய உம்முடைய கோலால் அங்குள்ள பாறையினை அடியும். அப்போது அனைவரும் காணக்கூடிய புதுமையை நாம் காட்டுவோம்!" என்றுரைத்தார்.

### பாறையிலிருந்து தண்ணீர்

மோசே அவ்வாறே அம்மலையடிவாரம் சென்று தன் கைக்கோலால் பாறையைத் தட்டியதும் தண்ணீர் பெருவெள்ளமாகப் பிரவாகித்தது. மோசேயுடன் அங்கு வந்திருந்த மக்கள் தலைவர்கள் ஆண்டவரின்

இஸ்ரயேலர்கள் வலுச்சண்டைக்குப் போகக்கூடிய நிலையில் அன்றிருக்கவில்லை. ஆனால் வந்த சண்டையை விடும் நோக்கமும் அவர்களிடம் கிடையாது. ஆகவே அமலேக்கியரோடு போரிடுவதற்கு ஆயத்தமாகுமாறு மோசே மக்களுக்கு ஆணை பிறப்பித்தார். யோசுவாவை அழைத்து, போர் புரியும் ஆற்றல் மிக்க வீரர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். உடனடியாகவே யோசுவா செயலிலிறங்கிப் பெரும் படையொன்றைத் தயார் செய்துவிட்டார்.

### கைக்கோலின் மகிமை

மோசேயின் கைக்கோல் ஆண்டவருடைய அநுக்கிரகத்தால் மிகவும் சக்தி வாய்ந்ததொரு கருவியாகிவிட்டது. இஸ்ரயேல் வீரர்களிடம், தங்கள் பயணத்தின்போது பயன்படுத்துவதற்குரிய கத்திபோன்ற கருவிகள் மட்டுமே இருந்தன. ஆனால் அமலேக்கியரோ ஓரளவு பயிற்சிபெற்ற ஆயுதம் தாங்கிய போர் வீரர்களாகத் தென்பட்டனர். போர்மூண்டது. இஸ்ரயேல் மக்கள் அதுவரை அடிமைகள் போல் வாழ்ந்தவர்கள். இருப்பினும் மிகத் தேர்ந்த போர் வீரர்கள்போல் போரிட்டனர். இதற்கும் தெய்வீக சக்தி துணை புரிந்தது.

மோசே அங்கிருந்த ஒரு குன்றின் மேல் நின்றவாறு போர் நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தார். அவரின் இரு மருங்கும் ஆரோனும், கூர் என்பவரும் நின்றனர். மோசேயின் வலக்கையில் அவருடைய கோல் இருந்தது.

மோசேக்கும் வயதாகிக் கொண்டிருந்தமையினால் இயல்பாகவே களைப்படைந்திருந்தார். வெகுநேரம் இவரால் ஒரே இடத்தில் தனது கோலையும் நிமிர்த்திய வண்ணம் நிற்க முடியவில்லை. கோலைச் சற்றுத் தளர்த்தி கீழே தாழ்த்தியதும் போர்முனையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அவருடைய கோல் நிமிர்ந்து நிற்கும்போது இஸ்ரயேல் வீரர்களின் கை ஓங்கியது; அமலேக்கியர் தோல்வி அடைந்தனர். கோலை மோசே தாழ்த்தியதும் போரின் தன்மை எதிர்மாறாக மாறியது. அமலேக்கியர் வெற்றி பெற்ற வண்ணமிருந்தனர்.

கோலின் மகத்துவம் அப்போதுதான் மூவருக்கும் தெரிந்தது. அன்று பகல் முழுவதும் போர் தொடர்ந்தது. மோசேயால் கோலை நிமிர்த்திப் பிடித்த வண்ணம் நிற்க முடியவில்லை. ஆரோனும் கூரும் மோசேயை ஒரு கல்லின் மீது இருக்க வைத்தனர். கோல் தளர்ந்து விடாமல் இருவரும் மோசேயின் கையைத் தாங்கிப் பிடித்திருந்தனர்.

மாலையாகி கதிரவன் மறையும்போது யோசுவா அமலேக்கையும் அவன் நடத்தி வந்த படையையும் முறியடித்து வெற்றி பெற்றார். இறைவனின் அருளால் கிடைத்த வெற்றிக்காக, போர் நடைபெற்ற இடத்திலேயே பலிபீடம் ஒன்றினை மோசே ஏற்படுத்தினார். மக்களனைவரும் ஆண்டவரைத் துதித்து நன்றி பாராட்டினார்கள். அந்தப் பலிபீடத்துக்கு 'ஆண்டவர் என்கொடி' என்ற கருத்தில் 'யேகோவா நிசி' என்று பெயரிட்டனர்.

### மோசேயின் குடும்பம்

மோசே ஆண்டவரின் ஆணையை ஏற்று தனது இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தை விடுவிக்க எகிப்தை நோக்கி வரும்போது, அவருடைய மனைவி சிப்ரோவையும் இரு புதல்வர்களையும் மிதியானில் விட்டுவிட்டு வந்திருந்தார்.

அவருடைய மாமனாரான-மிதியான் தேசத்தின் அர்ச்சகர் இத்திரோ என்பவரின் பராமரிப்பில் அவர்கள் இருந்தனர். இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து, தனது மருமகனான மோசேயின் தலைமையில் கானான் தேசம் செல்கிறார்கள் என்ற தகவல் இத்திரோவுக்கு எட்டியது. தனது மகளையும் பேரப்பிள்ளைகளையும் மோசேயிடம் சேர்த்து விடுவதற்காக- அவர்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். மோசேயும் இஸ்ரயேல் மக்கள் சமுதாயமும் விடுதிவிட்டிருந்த கடவுளின் மலைக்கு அண்மையில் வந்து மோசேயைக் கண்டார். மாமனார் முன் மண்டியிட்டுப் பணிந்து நின்றார் மோசே. இருவரும் ஆரத்தழுவிக் கொண்டனர். நலம் விசாரித்தனர். மோசேயிடம் இஸ்ரயேலரை விடுவிக்கும் பொறுப்பினை ஒப்படைத்த ஆண்டவர், அன்றுவரை எவ்வாறு துணை புரிந்தருளினார் என்ற முழுவிபரங்களையும் மாமனாரிடம் மோசே விவரித்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (17) விடை: நைல் நதி**

**பரிசு பெறுவோர்:**

1. மேரி டோசன், டியனிலகெல பஸார், லிண்டுல.
2. ரி. சுரேஷ் குமார், 12 நுவரெலிய வீதி, கம்பளை.
3. டொ. ஜீவகன், 12, சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
4. மு.கி.மு. றம்ஸீன், 111, சுனேவல்பொல, கெக்கிராவ.
5. என். புனிதா, என்.எஃப்.சி. (சத்துணவு நிலையம்) தாண்டியடி, கோமாரி.

**திருமறை 19 வினா:- இஸ்ரயேலர்களின் பயணம் எவ்வளவு காலம் நீடித்தது?**

ஆகஸ்ட் 01க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 19 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : ஆணைக்குழு |
| தொழில் | : பிரச்சனைகளை ஆறப்போடுவது. |
| உபதொழில் | : அதிகாரத்தில் உள்ளோரின் எதிரிகளைக் குட்டுவது. |
| பொழுதுபோக்கு | : ஒப்பாரிகளை இரசிப்பது |
| சாதனை | : கட்டுக் கட்டாக சாட்சிய ஆவணங்கள். |
| வேதனை | : குப்பைத் தொட்டியில் அறிக்கைகள். |
| நண்பர்கள் | : நியமனம் வழங்குவோர். |
| எதிரிகள் | : அம்பலப்படுத்துவோர். |
| ஒரே சந்தோசம் | : ஓய்வு பெற்ற சிலருக்கு நியமனமும், ஊதியமும் வழங்குவது. |

## லெஃப்ட் அன்ட் ரைட்

**க.சா: என்னப்பா முத்துத்தம்பியர், மாகாண சபைத் தேர்தல் நடத்த பச்சைக் கொடி காட்டியிருக்கினம் போல கிடக்கு?**

மு.த: பச்சைக் கொடிக்கு பின்னாலே சிவப்புக் கொடி எட்டி எட்டிப் பார்க்கிறது உமது கண்ணில் படவில்லையோ?

**க.சா: உமது கண் ஸ்பெசல் கண்ணல்லோ. ஊடுருவிப் பார்க்கிறதில உம்மைப் மிஞ்ச முடியுமே. சிவப்புக்கொடி ஏன் எட்டிப் பார்க்குது?**

மு.த: தேர்தல் நடக்கும் குழப்பமான சூழல் ஏற்படும் போலத் தெரிந்தால் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்படும் என்று கூறியிருக்கினம். என்ன அர்த்தம், என்ன அர்த்தம்?

மு.த: அந்தக் காலத்தில் நாடகமும் நடந்தது. இந்தக் காலத்தில் நாடகம் மட்டும்தான் நடக்குது. அதுவும் யாழ்ப்பாணத்தில் நாடகத்திற்கு பஞ்சமே இல்லை. நல்லா கதை வசனம் எழுதுகினம்!

**க.சா: யார் எழுதுகினம்?**

மு.த: 'அன்பிற்கினிய' தமிழ்க் கட்சிகள்தான்! விடுகிற ஒவ்வொரு அறிக்கையும் நாடக வசனங்கள்தானே!

**க.சா: அப்படியானால் எங்களை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்கினமல்லோ?**

மு.த: ஒன்றும் பெரிசா செய்ய வேண்டாம்! கவர்மெண்டில் நம்பிக்கை இல்லை என்று



**க.சா: ஆளும் கட்சிக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிந்தால் தேர்தல் நடக்கும். தோல்வி நிச்சயம் என்று கண்டுபிடித்தால் கடைசி நேரத்தில்கூட தடை பறக்கும் என்று அர்த்தமோ?**

மு.த: கையைக்குடும் ஐ.சே! அம்மையார் நினைத்தால் கடைசிக் கட்டத்தில்கூட தன் கையிலுள்ள அதிகார அஷ்திரத்தை வீசி தடுக்கலாம்.

**க.சா: வடக்கில் பத்துக் கோடி செலவில் மீள் குடியேற்றம் நடக்கப்போகுதாம்?**

மு.த: எங்கே குடியேற்றுவது? வலிகாமத்தில் நங்கூரம் போட்ட கப்பல் மாதிரி சீருடையினர் நிற்கினம். இந்த இலட்சணத்தில் மீள் குடியேற்றம் எங்கே செய்யப் போகினமாம்.

**க.சா: அப்படியானால் பத்துக் கோடி அறிவிப்பு இறால் போட்டு சுறாப் பிடிக்கும் சங்கதிதானாக்கும். ஆற்றில் போடுவது என்று குளத்தில் போட்டால் யார் கேட்கப் போகினம்?**

மு.த: அண்ணை ரைட்!

**க.சா: அண்ணை ரைட், தம்பி கொழும்பிலை, வடக்கும், தெற்கும் இதெல்லாம் யாழ்ப்பாணத்தில் அந்தக்கால பேமஸ் நாடகங்கள். நீர் அண்ணை ரைட் என்றதும் மலரும் நினைவுகள் மனதில் ரிலீஸ் ஆகுதல்லோ.**

உலகின் காதுக்கு கேட்க உரத்துச் சொல்லி, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்தான் அரசியல் தீர்வுக்கு மருந்து. மற்றதெல்லாம் வெறும் எலும்புத்துண்டு வீசும் விருந்து என்று அறிவிக்க வேண்டியதுதானே.

**க.சா: அவசரகால சட்டத்தை எதிர்க்கத் துணிந்திருக்கினம் அல்லோ?**

மு.த: அவசரகால சட்டத்தை ஆதரிப்பதும் பிழை. அங்கே எதிர்த்துப் போட்டு படையோடு நின்று அடையாளம் காட்டுவதும் பிழை! அவசரகால சட்டத்தை மட்டும் எதிர்ப்போம், அரசாங்கத்தை ஆதரிப்போம் என்ற டபுள் ஆக்டிங்கும் பிழையிலும் பிழை! கைதான் அடிக்குது கால் உதைக்கவில்லைத்தானே என்று காலைத் தொட்டு வணங்குவது மாதிரியல்லோ இருக்குது.

**க.சா: சரியோ, பிழையோ ஒரு நிலைப்பாடு எடுத்தால் ஆட்டம் அசைவில்லாமல் நிற்க வேணும். சரியில்லை என்று தெரிந்தா நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளலாம். அதைவிட்டுப் போட்டு ஆற்றில் ஒரு கால், தோணியில் ஒரு கால் என்று நிற்கக் கூடாது என்கிறேன். நீர் என்ன செப்புகிறீர்?**

மு.த: நூற்றுக்கு நூறு சரி. ஆனா அதுக்கும் ஒரு 'தில்' வேணும். இவை லெஃப்ட் அன்ட் ரைட் என்று 'ட்ரில்' அல்லோ போடுகினம்.

## பிரதமரா பிரமுகரா?



பிரதமர் வாஜ்பேயியை காதிலை பூ கந்தசாமியார் சந்திக்கிறார்.

க.சா: வணக்கம் பிரதமரே! என்ன யோசனையில் இருக்கிறீர்கள்?

வா.பே.: கடந்த ஒரு மணி நேரமாக இந்தியாவில் இருந்து ஃபோன் எதுவும் வரவில்லை. அதுதான் யோசிக்கிறேன்.

கா.சா: தொலைபேசி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டார்களோ என்று யோசிக்கிறீர்களா?

வா.பே: சேச் சே... அவர்கள் வேலை நிறுத்தம் செய்தால்கூட சரிப்படுத்திவிடலாம். என்னையே பிரதமர் வேலையில் இருந்து நிறுத்தி விட்டார்களோ என்றுதான் யோசிக்கிறேன்.

கா.சா: ஆமாம். பிரதமராக வந்து பிரமுகராக திரும்பிப் போக நேர்ந்தால் வருத்தத்துக்குரிய சமாச்சாரம்தான்.

வா.பே: அம்மையார்தான் பிரச்சனையை பெரிதாக வளர்த்துக் கொண்டிருக்கிறாங்க. நேரிலே ரொம்ப இனிமையாகப் பேசுறாங்க. ஆனால் ரொம்ப ரொம்ப கடுமையாக நடக்கிறாங்க.

க.சா: நீங்கள் எந்த அம்மையாரைச் சொல்கிறீங்கள்?

வா.பே: (உஷாராகி) ஐயைய்யோ... ஆளைவிடுங்கப்பா. நான் சொன்னது ஜெயலிதா அம்மையாரை.

க.சா: இலங்கை இனப்பிரச்சனை பற்றி ஏதாவது கூறுங்களேன்?

வா.பே: ஒற்றுமையான இலங்கையிலே எல்லோரும் ஒற்றுமையாக இருக்க, எல்லோரும் ஒற்றுமையாக முயன்று, ஒற்றுமை கெடாமல் நல்ல தீர்வாக, இந்த நாட்டுக்குள்ளேயே பேசி தீர்த்து பிரச்சனை இல்லாமல்...

க.சா: போதும், நன்றாகப் புரிகிறது. நீங்கள் தலையிடமாட்டீர்களா?

வா.பே: என் தலை முதலில் தப்பட்டும். தலைவலியெல்லாம் குறையட்டும். அப்புறம் மனம் திறந்து பேசலாம். அம்மையாரை இனி நம்பமுடியாது.

க.சா: நீங்கள் எந்த அம்மையாரை...?

வா.பே: ஐயைய்யோ... ஆளை விடுங்கப்பா!

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


## முடிச்சல்ல



➡ இது கயிற்று முடிச்சு என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. இது பா...பா..பாம்பு.

அழகில் ஆபத்து இருக்கும் என்று சொல்வார்கள். இந்த அழகான பாம்பும் மிக மிக ஆபத்தானது; கொடிய விஷம் கொண்டது. ஏனைய விஷப்பாம்புகள் கொத்துவதன் மூலம் விஷப்பல்லினால் கொட்டும். ஆனால் இந்தப் பாம்பு சத்தமில்லாமல் சாது போல வந்து கடித்துவிடும். மனிதன் கடிபட்டால் அந்த இடத்திலேயே சாவு நிச்சயம்.

அழகான சிவப்பு, கறுப்பு மஞ்சள் அல்லது வளையங்களைக் கொண்ட நன்கு பளபளக்கும் உடலைக் கொண்ட இப்பாம்பை 'பவளப்பாம்பு' என்றழைக்கிறார்கள். அமெரிக்கா, மெக்ஸிக்கோ, மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் வெப்ப மண்டல நாடுகளில் பவளப் பாம்புகள் காணப்படுகின்றன.

இவற்றில் சில மாறுபாடான வர்ணங்களைக் கொண்டவையாக இருக்கும்.

அமெரிக்காவின் மேற்கு மற்றும் அரிஸோனா மாநிலங்களில் காணப்படும் பவளப் பாம்புகள் 1.2 மீட்டர் நீளம் வரை வளரும்.


ஏனைய ரகங்கள் பெரும்பாலும் 45 செண்டிமீட்டர் வரையே வளர்கின்றன.





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
3236657


## நீள உடல்



⬆ இதுவும் பூனைதான். ஆனால் வித்தியாசமான பூனை.

'ஊசித்துவாரத்துள் ஒட்டகம் புகுந்த கதை' என்று சொல்வார்கள். தன் மூக்கினை நுழைக்க மட்டும் இடம் கொடுத்துவிட்டால்போதும் 'சிவெற்' என்றழைக்கப்படும் இந்தப் பூனைதன் உடல் முழுவதையும் அந்தத் துவாரத்துள் நுழைத்துள் கொள்ளும்.

ஆபிரிக்கா தென் ஆசியா தெற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் சில பாகங்களிலும் இந்தப் பூனைகள் வசிக்கின்றன. பூனை இனத்தைச் சேர்ந்ததானாலும் சிவெற் என்ற இந்த இனத்தின் கால்கள் சாதாரண பூனைகளின் கால்களைவிட மிகச்சிறியவை. வால் மட்டும் அடர்த்தியான ரோமங்களுடன் சற்று நீளமாக இருக்கும்.

சிவெற் பூனைகளின் உடல் நீளமாக இருக்கும். சிறிய ரக சிவெற் பூனையின் வாலின் நீளம் இல்லாமல்- 33 செண்டிமீட்டர் நீளம் வரை வளரும்.

மரப் போறைகளிலும் நிலத்தில் குழிபறித்தும் வாழும் சிவெற் பூனை சிறு எலிகள், சிறு பறவைகள், பூச்சிகள் ஆகியவற்றையும் பழவகைகளையும் உண்ணும்,

இவற்றின் கேட்கும் சக்தி அபாரமானது. மிகத் தொலைவில் வரும் ஒரு பிராணியின் காலடி ஓசையைத் துல்லியமாகக் கேட்டு அறிந்து கொள்ளும். மிக வேகமாக ஓடக்கூடியது.

## பிரபலம்



➡ உலகனைத்திலுமுள்ள குழந்தைகளைக் கவர்ந்திழுப்பதில் ஒரு புரட்சிகரமான சாதனையையே புரிந்தது 'பார்பி' பொம்மைகள்.

பெரும்பாலும் மேற்குலக நாட்டு அழகிகளின் தோற்றங்களை வைத்தே பார்பி பொம்மைகள் உருவாக்கப்பட்டுவந்தன.

இப்பொழுது இந்திய மாநிலங்களிலுள்ள பல்வேறு இன அழகிகளின் தோற்றங்களைக்கொண்ட பொம்மைகளை உருவாக்கத் தொடங்கி விட்டார்கள்.

இராஜஸ்தானிய மாநிலப் பெண்கள் பேரழகிகள். அவர்கள் எப்பொழுதும் தம் ஆடை ஆபரணங்களை கலை அம்சம் பொருந்தியவையாக அமைத்துக்கொள்வார்கள்.

இதோ இராஜஸ்தானிய அழகியாக அமைக்கப்பட்டுள்ள பொம்மை. இதற்கு உலக நாடுகளில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

உல்லாசப் பயணிகளாக இந்தியாவரும் ஒவ்வொருவருடைய கையிலும், 'ரூபவதி ராஜஸ்தானி' என்ற இந்தப் பேரழகி குடியேறி விடுகிறாள்.

இப்பொம்மையின் உயரம் 15.5 செண்டிமீட்டர்தான். இந்தியாவில் இதன் விலை ரூபா 699.00 மட்டும்தான்.

## பெரியது



சப்பாத்துச் சொண்டு நாரை என்பது இதன் பெயர். இதன் சொண்டு சப்பாத்தைப்போன்ற தோற்றத்தை உடையது என்பதனால் காரணப் பெயராகிவிட்டது.

ஆபிரிக்காவில் நைல்நதி பாயும் உகண்டா மற்றும் கொங்கோ பிரதேசங்களில் இப்பெரிய பறவைகளைக் காணலாம்.

நதிக்கரையோரங்களில் தனது நீண்டகால்களில் தவம் செய்யும் இப்பறவை மீனைக் கொத்தி இரையாக்கிக் கொள்ளும். சில மீனினங்கள் நதிக்கரையில் காணப்படும் சேற்றில் ஆழமாகப் புதைந்து கிடக்கும். இந்த நாரைகள் தன் அலகுகளினால் சேற்றைக் கிண்டி அந்த மீன்களைப் பிடித்து உண்ணும்.

எழுந்து நின்றால் இதன் உயரம் 1.2 மீட்டர் வரை இருக்கும். சாம்பல் நிறமுடையது.

மீனுக்காகக் கரையில் நின்று 'தவம்' செய்யும் இந்த நாரையின் தவத்தை எவரோ- எந்தப் பிராணியோ கலைத்தால் தனது சொண்டுகளை வேகமாக ஒன்றுடன் ஒன்றை மோதி அடிக்கும் அப்போது பெரும் ஓசை உண்டாகும்.

இச்சத்தத்தைக் கேட்டு ஏனைய இவ்வின நாரைகள் ஏதோ ஆபத்து அண்மிக்கிறது என்று உசாராகி விடும்.

இவை எப்போதும் சோடிசோடியாகவே வாழும். தரையில் புற்பற்றைகளின் மறைவில் பெரிய அளவில் கூடுகளை கட்டி வாழும். பெண் நாரை ஒரு தடவையில் ஒன்றோ அல்லது இரண்டோ முட்டைகளை இடும்.

## அரியது



⬅ மிக விசித்திரமாகத் தோன்றும் 'அல்பகா' என்ற இந்தப் பிராணி ஒட்டக இனத்தைச் சார்ந்தது.

தென் அமெரிக்காவிலுள்ள பெரு மற்றும் பொலிவியா நாடுகளிலுள்ள மலைகளில்- கடல் மட்டத்திலிருந்து 4000 முதல் 5000 மீட்டர் உயரத்தில் வாழ்கின்றன. இவற்றின் உயரம் 1.2 மீட்டர்.

அல்பகாப் பிராணிகளை அவற்றிலிருந்து பெறப்படும் உரோமத்துக்காக பண்ணைகளில் வளர்ப்பார்கள். வளைவு நெளிவுகளற்ற நேரான உரோமங்கள் 20 முதல் 60 செண்டிமீட்டர் வரை வளரும். கம்பளிப் போர்வைகள், குளிர்கால ஆடைகள் உற்பத்தி செய்யப்படுவதற்காக இந்த ரோமம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

செம்மறி ஆட்டு ரோமத்தை விட அல்பகாவின் ரோமம் சிறந்ததாகக் கருதப்படுகிறது. கறுப்பு, வெள்ளை மற்றும் பழுப்பு நிறங்களில் ரோமம் பெறப்படுகிறது.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் றொபின்சன் யூட்றஞ்சன் 12.06.1998

இளவாலையைச் சேர்ந்த யூட் றஞ்சன்- வியாகுலநாயகி (ஜெமீலா) தம்பதியினரின் செல்வப் புதல்வன் **றொபின்சன்** தனது முதலாவது பிறந்ததினத்தை 12.06.1998 அன்று ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், சித்தப்பாமார், சித்திமார், தங்கச்சிமார், மாமிமார், மச்சாள், தாத்தா, பாட்டி, ஜேர்மனியில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, மாமாமார், மாமிமார், மச்சான், அண்ணா, தாத்தாமார், பாட்டிமார், பிரான்சிலுள்ள மாமாமார், மாமி, கனடாவிலுள்ள மாமாமார், மாமி, சித்திமார், மச்சான், தங்கச்சி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசு அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ்கவென செல்வன் றொபின்சனை வாழ்த்துகின்றார்கள்

தகவல்: யூடின் ஜெயராஜ் (மாமன் கனடா)

## சுருள் இறக்கம்




➡ சிற்பக்கலையானது ஆதி மனிதனின் கண்டுபிடிப்பென்றால் அதுமிகையாகாது. உலகில் நாகரிகம் தோன்றிய தேசங்களனைத்திலும் ஏதோ ஒரு வகையில் சிற்பக்கலை தோன்றிப்பரிணமித்து வந்துள்ளது.

சிற்பக்கலை இன்று ஏதேதோ தோற்றங்களைப் பெற்று வருகிறது. சிற்பாசாரியனின் கற்பனைக்கு எப்பொருள் தோதாகப் படுகிறதோ,அப்பொருளையே கருப்பொருளாகக் கொண்டு ஏதோ ஒரு கலை வடிவத்தைப் படைக்கிறான். இக்கலைக்கென்றொரு கட்டுப்பாடோ எல்லையோ வரம்போ கிடையாது.

இக்கருத்தினை வலியுறுத்துவதாக அமைகிறது சுருள் வடிவில் அமைந்த இப்படகுத்துறை. அமெரிக்காவின் உட்டா மாநிலத்திலுள்ள பெரும் உப்பேரியில் கற்களினால் இச்சுருள் படகுத்துறையினை றொபட் சிமிந்சன் என்ற சிற்பி அமைத்துள்ளார். 1970ம் ஆண்டில் இதனை அமைத்த சிற்பி இதனை-பொருட்களை ஏற்றி இறக்கும் வர்த்தக ரீதியான படகுத்துறையாக அமைக்கவில்லை. ஒரு கலை அம்சமாகவே அமைத்துள்ளார். இச்சுருள் வடிவத்துறையின் நீளம் 457 மீட்டர்.

## வேகம்



⬇ ஒரு துப்பாக்கியின் விசையை அழுத்தும்போது அதிலிருந்து வெளிப்படும் ரவை அதிவேகமாகச் சென்று குறிப்பிட்ட இலக்கினைத் தாக்குகிறது.

துப்பாக்கி ரவை பயணம் செய்யும் வேகத்தைக் கணக்கிடுவதும், அந்த ரவை சீறிப்பாய்ந்து செல்லும் போதுள்ள அதன் தோற்றத்தையும் இதுவரை குத்துமதிப்பாகவே கணக்கிட்டு வந்தனர்.

இப்பொழுதெல்லாம் நவீன ரகத் துப்பாக்கிகள் புதுப்புதுத் தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டு பாவனைக்கு வந்துவிட்டன.

இத்தகைய நவீன ரகத்துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் தோட்டாவின் வேகத்தைக் கண்டு பிடிக்க கன வேகத்தில் படம் பிடிக்கவல்ல கமராக்கள் இப்பொழுது பயன்படுத்தப்படுகின்றன.

குற்றச் செயல்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளுக்கு, இத்தகைய கமராக்களில் எடுக்கப்படும் புகைப்படங்கள் பெரும் உதவி புரிகின்றன.

ஒரு 'பிளேயிங்கார்ட்' டை 30 கலிபர் துப்பாக்கி ரவை எவ்வாறு ஊடுருவிச் செல்கிறது என்பதனை அதிவேக கமராவின் உதவியுடன் எடுத்த இப்படம் காட்டுகிறது.


படிப்பகம்